
சுவடி : 40
ஏடு : 7
சனவரி 2017
*
ஆசிரியர்
**வே.ஆனைமுத்து**
*
ஆசிரியர் குழு
**க. முகிலன்**
**தமிழேந்தி**
**வாலாசா வல்லவன்**
**வையவன்**
**சி. பெரியசாமி**
**கோவிராமலிங்கம்**
**சி. நடராசன்**
**மங்கலம் அரசன்**
**தி.துரைசித்தார்த்தன்**
**ஆ. முத்தமிழ்ச்செல்வன்**
*
அலுவலக
நிருவாகப் பொறுப்பு
**ப. வடிவேலு**
94441 05892
*
அனைத்துத் தொடர்புகளுக்கும்
**'சிந்தனையாளன்'**
2ஆ/85, கே.எஸ்.ஆர்.நகர்,
எம்.டபிள்யூ.பி. 2ஆம் குறுக்குத் தெரு,
அம்பத்தூர், சென்னை - 53.

தொடர்புக்கு :
94448 04980
044-2625 2119

மின்னஞ்சல் :
sinthanaiyalantamilmonthly
@gmail.com
*
இதழ் வடிவமைப்பு :
**சன் நகலகம்,** சென்னை-5.
9840015179
*
இணையத்தில் படிக்க
**www.keetru.com**
*

# நீராண்மையில் வீழ்ந்த தமிழ்நாடு வேளாண்மையில் வீழ்ச்சி அடைந்தது! ஊழல் ஆட்சிகளில் உழன்ற தமிழகம்! தொழில் வளர்ச்சியிலும் தோற்றது!



தமிழ்நாடு திருவள்ளுவரைப் பெற்றெடுத்தது. அவர் "அரசு" என்பது பற்றி ஆழ்ந்தகன்ற பட்டறிவுடன் நல்ல பல செய்திகளைத் தந்தார்.

உழுவார் உலகத்தார்க்கு ஆணி...!
சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்...!
தள்ளாவிளையுளும் தக்காரும்
தாழ்விலாச் செல்வரும்...!

என்பவை உழவுத் தொழிலின் உயிரான தன்மையையும், குறைவுபடாத - நிரம்பிய வேளாண் விளைச்சலையும், எல்லா வகைகளிலும் பண்பட்ட தக்காரையும் தனிஉரிமை பெற்ற தாழ்விலாத செல்வர்களையும் பெற்றிருப்பதே நல்ல குமுகம், நல்ல "நாடு" என்பதே அவர் கொள்கை.

பல இலக்கம் மக்கள் மட்டுமே வாழ்ந்த 2000 ஆண்டுகளுக்கு முந்தைய தமிழகத்தில் வாழ்ந்தவர் திருவள்ளுவர். அவர் தந்த திருக்குறள் எந்தத் தமிழரசனுக்கும் தமிழ்ப்புலவர்களால் காட்டப்பட்டதாக - சொல்லப்பட்டதாக வரலாறு இல்லை.

தமிழ் மூவேந்தர்கள் எல்லோரும் மக்களுக்கு எழுத்தறிவு தரப் பொதுப் பள்ளிகள் வைக்கவில்லை; ஆனால் பார்ப்பனர்கள் படிக்க வேத பாட சாலைகளை நிறுவினர். கடவுள் நம்பிக்கையை வளர்க்க, கோவில்களையும் சத்திரங்களையும் கட்டினர்.

அத்துடன்கூட, மழைநீரையும், ஓடை வெள்ளத்தையும், ஆற்று நீரையும் தேக்கி வைக்க ஏற்ற பெரிய, சிறிய ஏரிகளையும் குளங்களையும் வெட்டினர். நீர்வளம் பெற்ற வேளாண் மக்கள் மாடாக உழைத்து நிரம்பிய - தள்ளா விளைச்சலை உண்டாக்கினர்.

அந்நிய வெள்ளையர் ஆட்சியில் இந்நீர் நிலைகள் கட்டிக் காக்கப்பட்டன. பருவ மழை பெய்யத் தவறினாலும், ஒரு போகம் நல்ல விளைச்சல் தர ஏரிகள் உதவின.

"சுதந்தரம்" என்பதன் அருமையையும் பெருமையையும் தெரியாத இந்தியர்களும்-தமிழர்களும் எந்த நல்ல கொள்கைகளையும் முன்வைத்து ஆட்சி செய்யவில்லை. வருணசாதி ஒழுக்கமும், உள்சாதிப் பிரிவினைகளும், பார்ப்பனிய வீட்டு வாழ்க்கை முறையும் இந்தியர்களின் - தமிழர்களின் வாழ்க்கையைச் சீரழித்தன.

வெள்ளைக்காரன் இந்தியாவில் விளைந்த பருத்தி, நிலக்கடலை, இரும்புக் கனிம மண் இவற்றை இங்கிலாந்துக்கு மூலப்பொருள்களாக ஏற்றிச் சென்று,

துணி, இரும்புத் தண்டவாளம், எண்ணெய் வடிவில் ஆக்கி, இந்தியாவிலும், தமிழகத்திலும் கொள்ளை விலைக்கு விற்றான்; வேளாண் மக்களைச் சுரண்டினான். அன்று, அவனுக்குக் கையாள் களாக மேல்சாதிகளைச் சேர்ந்த படித்தவர்களும் அதி காரிகளும் செயல்பட்டனர்.

அதனால்தான் 1876இல்-தாது என்றழைக்கப்படும் ஆண்டில் கடும் பஞ்சம் வந்தது. அது உலகத்திலேயே மிகப் பெரிய பஞ்சம் என்று சொல்லப்பட்டது. 1876-1878இல் ஏற்பட்ட அப்பஞ்சத்தால் சென்னை, மைசூர், பம்பாய், அய்தராபாத் நகரங்களிலும் மற்ற வடஇந்திய மாகாணங்களிலும் 5 கோடியே 80 இலட்சம் மக்கள் உண்ண உணவின்றி வாடினார்கள். 55 இலட்சம் மக்கள் பட்டினியால் செத்தார்கள். இந்நேரத்தில் மழையும் பொய்த்தது; சாவுகள் தொடர்ந்து நடந்தன.

இத்தகைய கேடான நிலைமை "சுதந்தரம்" வந்து 70 ஆண்டுகளுக்குப் பிறகும் நீடித்துவிட்டது. வேளாண்மை வீழ்ந்துவிட்டது.

**2010க்குப் பிறகு தமிழகத்தில் இந்த இழிநிலை வேகமாக வளர்ந்துவிட்டது.**

| ஆண்டு | வடகிழக்குப் பருவ மழை அளவு (மி.மீ.) | காவிரி நீர்வரத்து அளவு (கோடி-கன அடி) | நெல் விளைச்சல் அளவு (மில்லியன் -டன்) |
|---|---|---|---|
| 2010-2011 | 605.2 | 202.4 | 5.79 |
| 2011-2012 | 540.2 | 206.8 | 7.46 |
| 2012-2013 | 370.5 | 69.7 | 4.05 |
| 2013-2014 | 294.3 | 260.8 | 5.35+ |
| 2014-2015 | 429.0 | 229.3 | 7.90 |
| 2015-2016 | 673.3 | 156.3 | 8.70 |
| 2016-2017 | 100.5 | 64.13(15.11.16 வரை) | |

தஞ்சாவூர், திருவாரூர், நாகை மாவட்டங்களும், திருச்சி, கரூர், புதுக்கோட்டை, கடலூர், புதுச்சேரி மாவட டங்களின் பகுதிகளும் சம்பா நெல் விளைச்சலுக்குக் காவிரி நீரை நம்பி இருப்பவை. காவிரி நீர்வரத்துப் போதாமையால், சம்பா பயிர் சாவியாகி - மகாராட்டி ராவில் விதர்பா மாவட்டத்தில் கடந்த பத்து ஆண்டுகளாகப் பருத்தி வேளாண்மை கெட்டதால் இரண்டு இலட்சம் வேளாண் குடும்பத் தலைவர்கள் தற்கொலை செய்து கொண்டது போல-தமிழகத்தில் திருவாரூர் இரகுநாதபுரம் எஸ்.கோவிந்தராஜ் (70), ஈரோடு வெங்கமேட்டூர் முத்துசாமி (70), ஈரோடு கரட்டுப் பாளையம் பி. இராம லிங்கம் (56), தஞ்சை பொன்னவராயன் கோட்டை வி. மாசிலாமணி (49) முதலானோர் சம்பாப் பயிர் பொய்த்ததால் ஏற்பட்ட கடன் பிடுங்கல் தாளாமல் இந்த ஆண்டில் தற்கொலை செய்து கொண்டனர்.

அரசு வங்கிகளிலும், தனியார் நிதி நிறுவனங்களிலும் வாங்கிய வேளாண் கடனைத் திருப்பித் தர முடியாமல் -குண்டர்களாலும், வங்கி அதிகாரிகளாலும் தாக்குண்டு சிலர் ஏற்கெனவே செத்துவிட்டனர்.

ஏரிகள், வாய்க்கால்கள் கடந்த 60 ஆண்டுகளாகச் சரிவரத் தூர்வாரப்படாததால், பெய்யும் மழை நீரை ஏரிகளில் சேமிப்பது முடியவில்லை. 100க்கு 90 ஏரிகள் தாம்பாளம் போல் மண் மேடிட்டு, சீமைக் கருவை, நாட்டுக் கருவை மரங்கள் ஏரி உள்வாயில் அடர்த்தி யாக முளைத்துவிட்டன.

**திராவிடக் கட்சிகளின் ஆட்சிக்காலத்தில் தாமிரபரணி ஆறு தொடங்கி - பாலாறு, கொசஸ்தலை ஆறு வரை ஆற்று மணல் கொள்ளை எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு நடந்தது, அதனால் தமிழக ஆறுகளில் நீரோட்டமே இல்லை.**

கோகா கோலா, பெப்சி கோலா நிறுவனங்கள் குடிநீர் புட்டிகள், சுவை நீர் புட்டிகளில் அடைத்து, கொள்ளை விலைக்கு விற்பதற்காக-தாமிரபரணி, வைகை, காவிரி ஆறுகளின் நீரை உறிஞ்சி எடுக்க தமிழக அரசு - அதி காரிகள் - ஆளும் கட்சியினர் கூட்டுக் கொள்ளையடிக்க, நீண்டகாலக் குத்தகைக்கு விட்டதால், நிலத்தடி நீர், 600 முதல் 1000 அடி வரை கீழே போய்விட்டது.

மேலும் வேளாண்மை விளைச்சலிலும், வேளாண் பொருள்களைச் சந்தையிடலிலும் - இந்தியாவுக்கான மாநிலங்களின் வரிசைப் பட்டியலில், தமிழ்நாடு 25 ஆவது இடத்தில் இன்று இருக்கிறது. மகாராட்டிரம் முதலாவது இடத்தில் இருக்கிறது. இதன் பொருள் என்ன? வேளாண் மக்கள் இளித்தவாயர்கள் என்பதா? இல்லை.

**வேளாண்மைக்குப் போதிய நீர் இல்லை என்பது முதற்காரணம். இடுபொருள்கள் வாங்கிடவும், கூலி கொடுத்திடவும் போதிய பணம் - வேளாண் கூட்டுறவு வங்கி களால் உரிய காலத்தில் போதிய அளவில் தரப்பட வில்லை என்பது இரண்டாவது காரணம். வேளாண் விளைபொருள்களை நல்ல விலைக்கு விற்றுத்தர - அல்லது அரசே வாங்கிக் கொள்ளப் போதிய ஏற்பாடு செய்யவில்லை என்பது மூன்றாவது காரணம்.**

**எனவே தமிழக வேளாண்மை வீழ்ச்சி அடைந்து விட்டது.**

அடுத்து கலை, அறிவியல், பொறியியல், வேளாண் இயல், வணிகவியல் பட்டங்களைப் பெற்றும்-வேலை யில்லாமலும் - ஏதேனும் ஒரு தொழிலைச் செய்ய முயலாமலும், 1 கோடி ஆண்களும் பெண்களும் தமிழகத் தில் உள்ளனர்.

தமிழகத்தின் தொழில் பெருக்கத்திற்காக, அயல்நாடு களிலிருந்தும் இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் முதலீடுகளை இழுக்க வேண்டி, 2015 செப்டம்பரில் தமிழக அரசு பெரிய அளவில் ஒரு மாநாட்டை நடத்தி யது. தொழில்கள் தொடங்கப்பட ஏற்ற 92 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் தமிழக அரசினரால் போடப்பட்டன.

இப்படி இந்திய அளவிலும், 29 மாநிலங்கள் அளவிலும் தொழில் முதலீட்டு ஒப்பந்தங்கள் போடப்பட்டன.

அவற்றின் அடிப்படையில், எந்தெந்த மாநிலத்தில் எந்த அளவு தொழில் தொடங்கும் முயற்சிகள் ஏற் பட்டுள்ளன என, 2016 சூன் வரையிலான காலத் துக்குரிய கணக்கை இந்திய மத்திய அரசும் உலக வங்கியும் இணைந்து எடுத்து ஒரு பட்டியலிட்டன.

**அதில், 29 மாநிலங்களுக்கான வரிசைப் பட்டி யலில் 18ஆவது இடத்தில் தமிழ்நாடு அரசு இருக் கிறது.**

ஆந்திராவும் தெலுங்கானாவும் முதலாவது இடத்தைப் பெற்றுள்ளன. இதன் பொருள் என்ன?

வெகுமக்களை இலவசங்களால் கவர்ந்துவிட்டோம் என்று இன்றையத் தமிழக ஆட்சியாளர் திமிரோடு நினைப்பதும், ஊழலிலும் கைக்கூலி பெறுவதிலும் இழுத்தடிப்பதிலும் தமிழக அரசு முதலாவது இடத்தில் இருப்பதும், தமிழ்ப் பெருமக்களும் படித்த இளைஞர் களும் அறிஞர்களும் தமிழ்நாட்டில் - கட்சி உணர்ச்சிக்கு முதலிடம் தந்துவிட்டு, ஒட்டுமொத்த மக்கள் நலம், வளர்ச்சி - முன்னேற்றம் பற்றிக் கவலையற்று வயிறு வளர்த்தால் போதும் என்று இருப்பதுமே ஆகும்.

**ஆதலின், தமிழ்ப்பெருமக்களும் படித்த இளைய தலைமுறையினரும் - கட்சி, சாதி, அவரவர் ஊர் நலன் என்கிற உணர்ச்சிகளைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு - தமிழ்நாட்டு நலனுக்கு முன்னுரிமை தர முன்வாருங்கள் என அன்புடன் வேண்டுகிறோம்.**

**1.1.2017** **- வே. ஆனைமுத்து**

# மனுசங்கடா நாங்க மனுசங்கடா



மனுசங்கடா நாங்க மனுசங்கடா
உன்னப் போல அவனப் போல எட்டுச்சாணு ஒசரமுள்ள
மனுசங்கடா நாங்க மனுசங்கடா
எங்களோட மானம் என்ன தெருவில கிடக்கா – உங்க
இழுப்புக்கெல்லாம் பணியுறதே எங்களின் கணக்கா
உங்களோட முதுகுக்கெல்லாம் இரும்புல தோலா
நாங்க ஊடு புகுந்தா உங்க மானம் கிழிஞ்சு போகாதா
உங்க தலைவன் பொறந்த நாளு போஸ்டர் ஒட்டவும்
உங்க ஊர்வலத்துல தர்ம அடிய வாங்கிக் கட்டவும் – அட
எங்க முதுகு நீங்க ஏறும் ஏணியாகவும் – நாங்க
இருந்தபடியே இருக்கணுமா காலம் பூராவும்
குளப்பாடி கிணத்து தண்ணி புள்ளய சுட்டது
தண்ணியும் தீயாச் சுட்டது – இந்த
ஆண்டைகளின் சட்டம் எந்த மிராசைத் தொட்டது
சதையும் எலும்பும் நீங்க வச்ச தீயில் வேகுது – உங்க
சர்க்காரும் கோர்ட்டும் அது எண்ணய ஊத்துது
எதை எதையோ சலுகையின்னு அறிவிக்கிறீங்க – நாங்க
எரியும்போது எவன் மசுரப் புடுங்கப் போனீங்க – டேய்
மனுசங்கடா நாங்க மனுசங்கடா
உன்னப் போல அவனப் போல எட்டுச்சாணு ஒசரமுள்ள
மனுசங்கடா நாங்க மனுசங்கடா

**– இன்குலாப்**

# தமிழ்நாட்டு முதலமைச்சர் மாண்புமிகு செ.செயலலிதா மறைந்தார்!



தமிழ்நாட்டு முதலமைச்சராக முதன் முதலில் 24.6.1991 இல் செல்வி செ.செயலலிதா பொறுப்பேற்றார். 5.12.2016இல் அவர் மறையும் வரை, இடையே இடையே தற்காலிகமாகப் பதவியிலிருந்து விலகி, 5 தடவைகள் முதலமைச்சராக இருந்தார்.

யார் அவர்?

செயலலிதா கருநாடகத்தில் மாண்டியா மாவட்டத்திலுள்ள மேல்கோட்டை என்னும் ஊரில் ஜெயராம்-வேதவல்லி இணையரின் மகளாகப் பிறந்தார். தந்தை ஜெயராம் 1950இல் மறைந்தார். அவரோடு பிறந்த அண்ணன் ஜெயராமன் ஆகிய இரண்டு குழந்தைகளுடன் வேதவல்லி அம்மையார் தம் பெற்றோர் வீட்டுக்கு பெங்களூருக்குச் சென்றார். பெங்களூரிலும், 1958க்குப் பிறகு சென்னையிலும் பள்ளிப் படிப்புக்குப் போகும் தறுவாயில் வறுமைக்கு ஆட்பட்டது குடும்பம். எனவே செயலலிதா திரைப்பட நடிகையாக 1965இல் ஆனார். திரைப்படத் துறையில் 1980 வரை முன்னணி நடிகையாக விளங்கினார். ‘‘ஆயிரத்தில் ஒருவன்’’ என்ற படத்தில் எம்.ஜி.ஆர். உடன் கதாநாயகியாக நடித்தார்; அவருக்கு மிக மிக நெருக்கமானார்.

5-6-1982இல் அ.இ.அ.தி.மு.க.வில் சேர்ந்தார். ‘‘பெண்ணின் பெருமை’’ பற்றி முதன்முதலாக மேடைப் பேச்சை நிகழ்த்தினார். முதலில் சத்துணவுத் திட்டத்தை மேற்பார்வையிடும் உயர்மட்டக்குழு உறுப்பினராக அமர்த்தப்பட்டார்; 1983இல் அ.இ.அ.தி.மு.க.வின் கொள்கைப் பரப்புச் செயலாளர் ஆனார்.

12-3-1984இல் தில்லி மாநிலங்கள் அவை உறுப்பினராக, அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவருடைய பதவி ஏற்பு அன்றே தொடங்கியது அவருடைய அரசியல் பதவி வாழ்வு, 5-12-2016இல் அவர் மறையும் வரை 32 ஆண்டுகள் ஏதோ ஒரு பதவியில் நீடித்தார்.

24-12-1987இல் எம்.ஜி.ஆர். மறைந்த நிலையில், அ.தி.மு.க, சானகி அணி-செயலலிதா அணி எனப் பிரிந்தது. 1-1-1988 இல் செயா அணிக்குப் பொதுச் செயலாளரானார்.

24-1-1989இல் நடைபெற்ற தேர்தலில் மாநிலங்கள் அவையிலிருந்து, விலகிய செயலலிதா போடி நாயக்கனூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு, தமிழகச் சட்டமன்ற உறுப்பினரானார். செயலலிதா அணி 27 உறுப்பினர்களைப் பெற்றது; அவர் எதிர்க்கட்சித் தலைவர் ஆனார்.

இராஜீவ் காந்தி படுகொலையைத் தொடர்ந்து 1991இல் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரசுடன் கூட்டணி அமைத்து, தமிழகம்-புதுச்சேரி இரண்டுக்கும் உரிய 40 மக்கள் அவை இடங்களில் 39 இடங்களை அ.தி.மு.க-காங்கிரசு கூட்டணி கைப்பற்றியது. இந்திய அளவில் அரசியலில் நுழைந்தார், செயா. அப்போதே நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க-காங்கிரஸ் கூட்டணி 234 சட்டமன்றத் தொகுதிகளில் 224 இடங்களைக் கைப்பற்றியது.

24-6-1991இல் செயலலிதா முதன்முதலில் தமிழக முதலமைச்சாரானர். 12-5-1996 வரை தமிழகத்தை ஆட்சி புரிந்தார்.

1992இல் ஒரு நிகழ்ச்சி நடந்தது.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில், 1946-48இல் நான் படித்தபோது, இராமசாமி செட்டியார் மேல்நிலைப்பள்ளியில் படித்த சோமசுந்தரத்துடன் நெருங்கிய நட்பு ஏற்பட்டது.

இடஒதுக்கீடு பற்றி நான் தில்லியில் முயற்சித்துக் கொண்டிருந்த என்னைக் கண்ட அவர்-1992இல் தமிழக அரசு வரவு-செலவுக் கூட்டத்தின் போது, முதலமைச்சர் செயலலிதா இடஒதுக்கீடு பற்றிப் பேசிட விவரமான ஆவணம் ஆயத்தப்படுத்தக்கோரி, வற்புறுத்தி என்னைத் தம் வீட்டுக்கு அழைத்தார். ஒரு நாள் முழுதும் இருவரும் கலந்து பேசினோம். நான் சொல்லச் சொல்லத் தட்டச்சு செய்து, மீண்டும் திருத்தி, இறுதி செய்து தந்தேன். 1992 மார்ச்சில் அதை அப்படியே சட்டமன்றத்தில் படித்தார், செயலலிதா. பின்னாளிலும் செயலலிதாவுக்கு அது பயன்பட்டது. எப்படி?

1979ல் தமிழ்நாட்டில், மா.பெ.பொ.க.வின் தனி முயற்சியால் 1980இல், எம்.ஜி.ஆர். ஆட்சிக்காலத்தில் பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டை 31% லிருந்து 60% ஆக உயர்த்திடக்கோரி, 1-2-1980 ஆணையின்படி, 50% பெற்றோம். அதன் விளைவாக-பிற்படுத்தப்பட்டோர், பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர்க்கு ஆனமொத்த இட ஒதுக்கீடு 50+18+1=69 ஆக ஆகிவிட்டது.

அதை எதிர்த்துத் தொடுக்கப்பட்ட வழக்கில் உச்ச நீதிமன்றத் தீர்ப்பு 16-11-1992இல் அளிக்கப்பட்டது.

அத்தீர்ப்பின்படி மொத்த இடஒதுக்கீட்டு அளவு 49.5% தான் இருக்கவேண்டும்.

ஆனால் தமிழ்நாட்டில் மட்டும் 69% இட ஒதுக்கீடு தருவது செல்லாதது என, கே.எம்.விஜயன் என்பவர் வழக்குத் தொடுத்தார். அதை எதிர்கொள்ள, ஒரு சட்டத்திருத்த வரைவை

(Draf) தி.க.தலைவர் கி.வீரமணி தமிழக முதல்வரிடம் அளித்தார். அது சட்டமன்றத்தில் ஒரு சட்டமாக நிறை வேற்றப்பட்டது. (1994ஆம் ஆண்டைய 45 வது சட்டம்).

அச்சட்டப் பிரிவை அரசமைப்புச் சட்டத்தின் ஒன்பதாவது அட்டவணையில் சேர்க்க எல்லாம் செய்தார் முதல்வர் செயலலிதா.

இது அவருடைய முதலாவது சாதனை; 90% தமிழக மக்களின் நலன் காக்கும் சாதனை.

2011 சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று முதல மைச்சராக ஆனவுடன் ஏற்கெனவே காவிரி நீர் தமிழகத்துக்கு 205 டி.எம்.சி. தண்ணீர் தரவேண்டுமென 2007இல் அளித்த இறுதித் தீர்ப்பை, இந்திய அரசின் அரசிதழில் (GOI - Gazette) வெளியிட வற்புறுத்தி 2013இல் சாதித்தார்.

இது செயலலிதாவின் இரண்டாவது சாதனை.

அதேபோல், திருவாங்கூர் அரசருடன்-பழைய சென்னை மாகாண அரசு செய்து கொண்ட ஒப்பந்தப்படி, கேரளாவுக்குச் சொந்தமான நிலத்தைக் குத்தகைக்குப் பெற்று-வெள்ளையர் காலத்தில் ஒரு வெள்ளைஇன அதிகாரியான பென்னிகுக் என்பவரால் கட்டப்பட்டது, முல்லைப் பெரியாறு அணை. அதன் நீர்ப்பிடிப்பு அளவு 152 அடி. ஆனால் இப்போதைய கேரள அரசின் அடாவடியால், 136 அடி நீர் அளவே தேக்கப் பட்டது. இந்த அளவை 152 அடியாக உயர்த்த வேண்டுமெனக் கோரி வழக்குத் தொடுத்து, உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி, 142 அடியாக உயர்த்திப் பெற்றுத் தந்தவர் செயலலிதா.

இது அவருடைய மூன்றாவது சாதனை.

மேல்நிலைப் பள்ளி வரையில் படிக்கும் எல்லா மாணவி-மாணவர்களுக்கு, இலவச மிதிவண்டி அளித்து ஊக்குவித்தார். இது ஒரு சாதனை.

இத்துணைச் சாதனைகளுக்கும் சொந்தக்காரரான செயலலிதா, தம் பதவிக்காலத்தில் செய்தவை வேதனை களையே விளைவிக்கும்.

1. எம்.ஜி.ஆர் 1 கிலோ அரிசி 2 உருவாவுக்கு விற்றார். அவரை மிஞ்சிட நினைத்த கலைஞர் மு.கருணாநிதி, 1 கிலோ அரிசி 1 உருவாவுக்கு விற்றார்.

ஆனால் செயலலிதா 1 கோடி பங்கீட்டு அட்டைக்காரர் களுக்கு இலவசமாகத் தலைக்கு 25 கிலோ அரிசி தந்தார்.

இதற்கு மானியமாக உருவா 5,000 கோடி ஆண்டு தோறும் செலவிட்டனர். இது முதலில் ஊதாரித்தனமானது. இரண்டாவது, உழைக்கச் செய்து அவர்களுக்குக் கூலி தருவதை விட்டுவிட்டு, கையேந்த வைத்திட்ட கெட்ட செயல் இது. மூன்றாவதாக, நிதிபற்றாக்குறையால் இன்றியமையாத வளர்ச்சித் திட்டங்களை முடக்குவது.

2. தி.மு.க. அரசுக்குப் போட்டியாக, வீட்டுக்கு வேண்டிய மின் விசிறி, அரவைப் பொறி (Mixy), தொலைக்காட்சிப் பெட்டி இவற்றை 1 கோடி குடும்பத்துக்குக் கொடுத்து-அவை வெளிச் சத்தையில் விற்கப்படும் அவல நிலையை ஏற்படுத்தியது.

3. ஆயிரக்கணக்கான கோவில்களில் இலவசச் சோறு போட்டு பக்தியை வளர்த்தது.

4. தமிழக அரசுப் பணியில் அமர்த்திட, 15 முதல் 20 இலட்சம் உருவா; வேண்டப்பட்ட இடத்துக்கு மாறுதல்தர 6 இலட்சம், அரசு ஒதுக்கும் இடத்துத்து மாறுதல் 3 இலட்சம் எனக் கைக்கூலி பெற்று, 2011 முதல் 2016 முடிய மக்களைச் சுரண்டியது. மகாபெரும் வேதனையானது.

5. "எவனும் கேட்கமாட்டான்" என்கிற அசட்டுத் துணிச்சலில்-ஒன்றாம் வகுப்பிலேயே, அரசுத் தொடக்கப் பள்ளிகளில் ஆங்கில வழிக் கல்வியைத் தொடங்கி வைத்து தமிழ் வளர்ச்சிக்குத் தடையான கெட்ட செயற்பாடு.

6. எத்தனைப் பெண்கள்-கணவர்கள் குடியால் செத்து மடிந்திருந்தால்-அதனால் தாலி அறுத்தால் என்ன என்று, அடாவடியாக நின்று ஆண்டுதோறும் 25,000-30,000 கோடி உருவா சாராய விற்பனை மூலம் அரசுக்கு வருவாய் வந்தால் போதும் என்று திமிராகவே கருதி, ஊர்தோறும் சாராயக்கடைகளைத் திறந்தது.

7. தி.மு.க. ஆட்சியில் அமர்த்தப்பட்ட சாலைப் பணி யாளர்கள்-மீண்டும் வேலைக்கு அமர்த்தப்பட வேண்டும் என உச்ச நீதிமன்றம் ஆணையிட்ட பிறகும், அதைச் செயற்படுத்த மறுத்து-நூற்றுக்கணக்கான பேரைச் சாகவிட்டது.

இவ்வளவையும்-இவ்வளவுக்கு மேலும் வேதனைகளை விளைவித்தார், முதல்வர் செயலலிதா.

முதல்வர் செயலலிதா 22-9-2016 இரவு உணர்வு அற்ற நிலையில் சென்னை அப்போலா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இலண்டன் மருத்துவர், தில்லி எய்ம்ஸ் மருத்துவர்கள், சிங்கப்பூர் செவிலியர்கள் வந்தார்கள்; 75 நாள்கள் வைத்தியம் செய்தார்கள். எந்த மருத்துவரும் செயலலிதா பிழைப்பார் என்று, உண்மையாகச் சொல்லவில்லை. உருவா 1000 கோடிக்கு மேல் செலவானது, செல்வி செ.செயலலிதா மறைவுதான் மிச்சம்.

7 கோடித் தமிழர்கள் வாழும் நாட்டின் முதலமைச்சர்-மறைந்த மாண்புமிகு செல்வி செ.செயலலிதா. அவர் மறைந்துவிட்ட செய்தி தந்த அதிர்ச்சியிலிருந்து மீளாமல்-ஏறக்குறைய 200 பேர் உயிரை மாய்த்துக் கொண்டனர்.

மறைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி செ.செயலலிதா அவர்களின் மறைவு கருதியும்-அதிர்ச்சியில் உயிரை இழந்த தமிழர் 200 பேர் மறைவு கருதியும் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் சார்பிலும், அனைத்திந்திய ஒடுக்கப்பட்டோர் பேரவை சார்பிலும் ஆழ்ந்த இரங்கலை உரித்தாக்குகிறேம்.

**6-12-2016** **- வே. ஆனைமுத்து**

புரட்சிக் கவிஞரின் வார்ப்படமான

# புரட்சிக் கவிஞர் இன்குலாப் மூச்சு நின்றது!



'இன்குலாப் ஜிந்தாபாத்' என்கிற இந்தி மொழிப் புரட்சி முழக்கத்தின் முற்பகுதிதான் "இன்குலாப்" என்பது.

கவிதையில்-உரைநடையில்-பேச்சில் உணர்ச்சி மழையைக் கொட்டியவர், புரட்சிக் கவிஞர் இன்குலாப்.

சாகுல் அமீது என்பது அவர்தம் பெற்றோர் இட்ட பெயர். 'இன்குலாப்' என்பது தாம் விருப்புடன் இட்டுக் கொண்ட பெயர்.

உண்மையான 'இன்குலாப்' என்பதன் - "புரட்சி" என்பதன் கொள்கலனாக விளங்கியவர், "இன்குலாப்". 'புரட்சி' என்ற கொள்கை உணர்ச்சித் தேக்கம் ஆன சொல், தமிழகத்தில், படாத பாடுபடுகிறது. இத்தகைய சூழலில் உண்மையான புரட்சியாளராக வாழ்ந்தவர் நம் இன்குலாப்.

1982க்குப் பிறகு 2005 வரையில் மெரினா கடற்கரையில் நான் நடைப்பயிற்சி செல்லும் ஒவ்வொரு நாளிலும், அவருடைய துணைவியார் கமருன்னிஷா அம்மையாருடன் இன்குலாப் புன்முறுவல் பூத்த முகத்துடன் அங்கே நடைப் பயிற்சிக்கு வருவார்.

சென்னை புதுக்கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக விளங்கியவர் அப்பெருமகனார்.

அன்னார் படைத்துள்ள "அகிம்சையின் முறையீடுகளை எந்த ஆதிக்கக்காரனும் செவிமடுப்பதில்லை", "இன்குலாப் நாடகங்கள்", "காந்தள் நாள்கள்", "மானுடக்குரல்", "குரல்கள்" என்னும் நூல்கள் என்றும் புரட்சித் தீயைக் கக்கும் கனல் கருவிகளாக விளங்கும்.

அவருடைய நீரிழிவு நோய்க் கொடுமையால் ஒருகால் துண்டிக்கப்பட்ட உடன்காலில் ஊரப்பாக்கம், அய்யஞ்சேரியில் குடியேறியிருப்பதாக அறிந்து - மா.பெ.பொ.க.வைச் சேர்ந்த நானும், தாம்பரம் மா. சுப்பிரமணியம், ஆனை. பன்னீர்செல்வம், தாம்பரம் கிருஷ்ணமூர்த்தி ஆகிய தோழர்களும் நேரில் சென்று தேறுதல் கூறி வந்தோம்.

அதன்பிறகும் இன்குலாப் பல நிகழ்ச்சிகளில் பங்கேற்றார்.

அவருடைய மானுட சமத்துவம் பேசும், கனல் கக்கும் உரிமைப் போர் முழக்கப் பாடல் வரிகள் என்றென்றும் புரட்சியாளர்களின் நெஞ்சங்களில் தேங்கி நிற்கும்; கனல் கக்கச் செய்யும் திறனுடையவை. அப்பாடலின் முதல் வரிகள் :

மனுசங்கடா நாங்க மனுசங்கடா
உன்னைப்போல அவனைப்போல எட்டுச்சாணு ஒசரமுள்ள
மனுசங்கடா நாங்க மனுசங்கடா

இன்குலாப் கடவுள் நம்பிக்கை இல்லாதவர்.

அப்பெருமகனார், தம் 73ஆம் அகவையில், தம் இறுதி மூச்சை, 1.12.2016 வியாழன் அன்று இழந்தார் என அறிந்த தமிழ் உணர்வாளர் ஒவ்வொருவரின் நெஞ்சமும் விம்மி அழுதது.

அன்னாரின் உடல் அவர்தம் குடும்பத்தாரால் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு ஆய்வுக்காக அளிக்கப்பட்டது.


நான் 27.11.2016 முதல் 26.12.2016 முடிய கட்சிப் பணியாகத் தொடர் பயணத்திலிருந்தேன். எனினும் மா.பெ.பொ.க. சார்பில் தோழர்கள் தாம்பரம் மா. சுப்பிரமணியம், ஆனை. பன்னீர்செல்வம், கிருஷ்ணமூர்த்தி மற்றும் சில தோழர்கள் முதலாவதாகச் சென்று, இன்குலாப் உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

மதிப்புறு இன்குலாப் அவர்களை இழந்து ஆறாத் துயருக்கு ஆளாகியிருக்கும் அவர்தம் அன்புத் துணைவியார் கமருன்னிஷா அம்மையார், மகன்கள் செல்வம், இன்குலாப், மகள் அமினா பர்வீன் ஆகியோருக்கும் அவர்தம் உற்றாருக்கும்; ஏக்கத்துடன் விம்மும் எண்ணற்ற தமிழர்களுக்கும் மா.பெ.பொ.க. சார்பில் ஆழ்ந்த இரங்கலை உரித்தாக்கி, இன்குலாப் அவர்களுக்கு வீரவணக்கம் செலுத்துகிறோம்.

**- வே. ஆனைமுத்து**

## நீரியல் பொறியாளர்-கல்வியாளர்-கவிஞர்-பகுத்தறிவாளர்

# வா.செ.குழந்தைசாமி மறைந்தார்!



கரூர் மாவட்டத்தில் காவிரியின் தென்கரை யிலுள்ள வாங்கலாம் பாளையத்தில், 14.7.1929இல் பிறந்தவர் நீரியில் அறிஞரும், கல்வியாளரும், கவிஞரும், பகுத்தறிவாளருமான வா.செ.குழந்தைசாமி அவர்கள் தம் 87ஆம் அகவையில், 10.12.2016 சனி அன்று மறைவுற்றார் என்பதை வருத்தத்துடன் அறிவிக்கிறோம்.

வா.செ.குழந்தைசாமி கல்வி பெற்ற குடும்பத்தைச் சேர்ந்தவர். அவருடைய தம்பி வா.செ.பழநிசாமி தலை சிறந்த வழக்குரைஞர்.

வா,செ.குழந்தைசாமி இந்தியாவில் பொறியியல் பட்டமும், செருமனி, அமெரிக்காவில், உயர் படிப்புகளையும் பெற்றவர்.

அடிப்படையில்-கல்லணை கட்டுமானம் பற்றி நன்கு அறிந்து, நீரியல் பொறியாளராக இருந்தாலும், சிறந்த கல்வியாளராகவும் இருந்தாலும், பகுத்தறிவாளராகவும் திகழ்ந்தவர். 1978-1979இல் மதுரை காமராசர் பல்கலைக்கழகம், இந்திராகாந்தி திறந்த நிலைப் பல்கலைக்கழகங்களிலும் 1981-1990 இல் அண்ணா பல்கலைக்கழகத்திலும் துணைவேந்தராக விளங்கியவர்.

இப்பணிகளுக்கிடையே சிறந்த இலக்கிய இயலாளராகவும், ‘‘குலோத்துங்கன்’’ என்ற புனை பெயரில் இளமை தொட்டுக் கவிதைகளை எழுதுபவராகவும் திகழ்ந்தார்.

தந்தை பெரியாரோடும், ‘‘திருச்சி சிந்தனையாளர் கழகத்தின்’’ தலைவர் கு.ம.சுப்பிரமணியம், மற்றும் தி.க.தோழர்கள் சிலருடனும் நல்ல தொடர்பிலிருந்தவர்.

‘‘திருச்சி சிந்னையாளர் கழகம்’’, 7-3-1970இல், பெரியாரால் தொடங்கி வைக்கப்பட்டது. ‘‘உண்மை’’ தமிழ் மாத இதழ் 15-1-1970இல் திருச்சி பெரியார் மாளிகையில் தொடங்கி வைக்கப்பட்டது.

‘‘பெரியார் ஈ.வெ.ரா.சிந்தனைகள்’’ தொகுக்கும் பணியை 1971-72இல் நான் மேற்கொண்டேன். ஆசிரியர் ந.கணபதி எனக்குத் துணை நின்றார். 4, 5 இளைஞர்கள் மூலங்களைப் பார்த்து எடுத்தெழுதினார்கள்.

**இம் முயற்சியைப் பற்றி யாரோ சிலர் சொன்னதை நம்பி, ‘‘யாரோ நான்கு பேர்-யானையைக் காண முயலும் குருடர்கள் போல்-பெரியார் சிந்தனைகள் என்று தொகுக்கிறார்களாம். என்று கொச்சைப்படுத்தி, 1972இல் ‘‘உண்மை’’, இதழில் எழுதினார், வா.செ.குழந்தைசாமி.**

‘‘பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் நூல், 1.7.1974 இல் வெளியிடப்பட்டது.

அப்பணியைச் செய்தவர்க்கு, எனக்குப் பாராட்டு விழா நடத்திட, எனக்குத் தெரியாமலே கு.ம.சுப்பிரமணியன், நோபின் கு.கோவிந்தராசலு, ச.சோமு, உறையூர் கோ.முத்துகிருஷ்ணன் ஆகியோர் ஏற்பாடு செய்து விட்டனர்.

**எனக்குப் பாராட்டு உரை வழங்க வா.செ.குழந்தை சாமி அவர்களையே அழைப்பது என, வேண்டு மென்றே, முடிவு செய்தனர்.**

**விழாவில் என்னைப் புகழ்ந்து பேசினார். அப்பேச்சின் ஊடே, ‘‘தந்தை பெரியாரின் பேச்சும் மூச்சும் தமிழ்நாட்டுப் புழுதியோடும் காற்றோடும் கலந்து விட்டன. அதை எவரும் அழிக்க முடியாது’’ என்று அப்பெருமகனார் பேசிய பேச்சை ஒலி பெருக்கியில் கேட்ட நூற்றுக்கணக்கான தமிழ்மக்கள் விழா நடந்த தேவர் மன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் ஈயைப் போல் மொய்த்துவிட்டனர்.**

அத்தகைய பேச்சாற்றல் மிக்கவர் அறிஞர் வா.செ. குழந்தைசாமி, அப்பெருமகனாரின் மறைவு தமிழ்-தமிழர் நலனுக்குப் பேரிழப்பாகும். அத்தகைய பேரிழப்புக்கு ஆளாகித் துன்பமடையும் அனைவர்க்கும் ஆழ்ந்த இரங்கலை உரித்தாக்குகிறோம்.

**வாழ்க வா.செ.குழந்தைசாமி புகழ்!**

**- வே. ஆனைமுத்து**

# பல்துறைத் திறனாளர் "துக்ளக்" ஆசிரியர்
# சோ.இராமசாமி மறைந்தார்!



பல்துறைத் திறனாளர் - "துக்ளக்" இதழின் ஆசிரியர் சோ.இராமசாமி அவர்கள், மூச்சுத் திணறலுக்கும் மாரடைப்புக்கும் ஆளாகி, 7.12.16 புதன் காலை 4 மணிக்குத் தம் 82 ஆம் அகவையில் மறைந்தார் என்பதை வருத்தத் துடன் அறிவித்துக் கொள்கிறோம்.

பழைய செங்கற்பட்டு மாவட்டத்தில் ஒரு பெருநிலக் கிழார் குடும்பத்தில் பிறந்தவர் சோ.இராமசாமி.

கல்வித் தகுதியால் வழக்குரைஞர் என்றாலும், அவர் ஓர் இதழ் ஆசிரியர், நாடக நடிகர், திரைப்பட நடிகர், அரசியல் திறனாய்வாளர், நறுக்குத் தெறித்தாற் போல் வினாவுக்கு விடை தரும் துணிச்சல்காரர் என்பவை அவர் பெற்றிருந்த பல்துறைகளைச் சார்ந்த திறமைகள்.

1975-76இல் இந்திராகாந்தி அவசரகால ஆட்சியை (Emergency) அறிவித்தபோது-அவருடைய ஆட்சியைக் கடுமையாகக் கண்டனம் செய்தவர். "துக்ளக் இதழ் அட்டைப்படத்தில் இரண்டு கழுதைகளின் படத்தை வெளியிட்டு அவை பேசிக் கொள்ளுவது மாதிரி திற னாய்வுக் கண்டனம் தெரிவித்தார், சோ.இராமசாமி.

அவர் பிறப்பால் பார்ப்பனர்.

மிகவும் உண்மையான பார்ப்பனியக் கொள்கை களை விளக்கி, மகாபாரதம், இராமாயணம் இவற்றை இளந்தலைமுறையினரிடையே பரப்பி வந்தார். அது தான் உண்மையான தொண்டு.

தமிழின-திராவிட இன உணர்வு கொண்ட சிலரைப் போல்-பார்ப்பன இன நலம் காப்பதில்-வடமொழியின் நலன் காப்பதில் வல்லவர், சோ.இராமசாமி.

அதே நேரத்தில் முதலமைச்சராக இருக்கும் போதும், இல்லாத போதும் நட்பு முறையில் தி.மு.க. தலைவர் கலைஞரும், அ.தி.மு.க. பொதுச் செயலாளர் மறைந்த செயலலிதாவும் அவரை அழைத்துப் பேசும் அளவுக்குத், தம் திறமையை வளர்த்துக் கொண்டவர், அவர்.

தந்தை பெரியார் மறைந்த உடன் காரில்-திருச்சி பெரியார் மாளிகை, எழும்பூர் பெரியார் திடல் இவற்றை யெல்லாம் பார்வையிட்டுத் தம் கருத்தைத் "துக்ளக்" இதழில் பதிவு செய்தவர். ஆனால் எவரிடமும் தன் நிலை பாட்டை மாற்றிக் கொள்ளாதவர்; ஆர்.எஸ்.எஸ்.-இந்துத்துவா கொள்கைகளைக் காப்பதை வாழ்வின் இலக்காகக் கொண்டவர்.

வகுப்புவாரி விகிதாசார இடஒதுக்கீடு கொள்கையை முழுமையாக எதிர்ப்பவர். இது பற்றித் தம் நண்பர் களுடன் உரையாடிக் கொண்டிருந்த போது, சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் க.சுப்பு அவருடன் இருந்தார்.

"மண்டல் கமிஷன்" என்பது பற்றி மற்ற நண்பர் களுடன் சோ.இராமசாமி பேசிக் கொண்டிருந்த போது, க.சுப்பு குறுக்கிட்டு, "மண்டல் கமிஷன்" அமைக்கப்பட எல்லாம் செய்தது ஆனைமுத்து என்பவர்தான். மற்றபடி கருணாநிதியோ, வீரமணியோ அல்ல" என்று சான்றோடு விவரமாகச் சொன்னதை-தம் "துக்ளக்" இதழில் வினா-விடைப் பகுதியில் வெளியிட்டிருந்தார். நான் அதைப் படிக்கவில்லை.

அய்.என்.டி.யு.சி. (INTUC) அலுவலகத்தில், வாழப்பாடி கூ.இராமமூர்த்தி அவர்களோடு நான் பேசிக் கொண் டிருந்தபோது, அங்கே வந்த க.சுப்பு அவர்கள் அதை என்னிடம் சொன்னார்.

என்ன சான்று? என்ன விவரம்?

தந்தை பெரியார் நூற்றாண்டு விழா, லோகியா 70ஆம் ஆண்டு பிறந்தநாள் விழா- மற்றும் இந்தி நூல் வெளியீடு-30,000 பேர் கொண்ட வகுப்புரிமைப் பேரணி 23-3-1979 அன் ஃபெரோஷ்லா கோட்லா மைதானத் திலிருந்து புறப்பட்டு, 8 கி.மீ. நடந்து 30,000 பேரும் போட் கிளப்பில் கூடி, ராம் அவதேஷ்சிங் முன்மொழிய, வே.ஆனைமுத்து தலைமையேற்க-துணைப் பிரதமர் பாபு ஜெகஜீவன்ராம் விழாவைத் தொடங்கி வைக்க, அமைச்சர் ராஜ் நாராயணன் "இந்தி" நூலை வெளியிட பகல் 10 முதல் இரவு 7 மணிவரை நடந்த பேரணியை-விழாவை நேரில் கண்டு பூரித்தவர்கள்: 1) இரா.குசேலர், 2) முனைவர் மு.நாகநாதன், 3)க.சுப்பு, 4) டி.என்.அனந்தநாயகி, 5) காஞ்சி அரங்க.சானகிராமன் ஆகிய மற்ற கட்சியினரும், மா.பெ.பொ.க. தோழர்கள்-தாய்மார்கள் 200 பேருமே ஆவர்.

இதை இங்கே ஏன் குறிப்பிடுகிறேன்? "வசிஷ்ர் வாயால் பீஷ்மர் பட்டம் பெறுவது பெருமை என்று மூடன், நினைப்பது போல-சோ, தம் 'துக்ளக்' ஏட்டில் என்னைப் பற்றி ஒருவரி எழுதிவிட்டார் என்பதற்காக அல்ல. நிற்க.

"துக்ளக்" ஆசிரியரும் தம் ஆருயிர் கணவருமான சோ.இராமசாமி அவர்களின் மறைவால் பேரிழப்புக்கு ஆளாகியுள்ள அவருடைய மனைவி சௌந்தரா அம்மை யார், மகள் சிந்துஜா, மகன் சிறீராம் ஆகியோர்க்கும், உறவினர்க்கும் மனங்கசிந்த இரங்கலை, மா.பெ.பொ.க. சார்பில் உரித்தாக்குகிறேன்.

**வாழ்க துக்ளக் இராமசாமி புகழ்!**

**- வே.ஆனைமுத்து**

# உயர் பணமதிப்பு நீக்க நடவடிக்கை மூலம் கருப்புப் பணத்தை ஒழிப்பதென்பது வெறும் கானல் நீரே

**- க. முகிலன்**


பிரதமர் நரேந்திர மோடியின் இரண்டரை ஆண்டுக்கால ஆட்சியின் மாபெரும் சாதனை இந்த நாட்டையும் நாட்டு மக்களையும் நடுத்தெருவில் திண் டாடும்படி நிற்க வைத்திருப்பதுதான்.

கடந்த நவம்பர் 8 அன்று நள்ளிரவு முதல் ரூ.500, ரூ.1000 நோட்டுகள் செல்லாது என்று அன்று இரவு 8 மணிக்கு நரேந்திர மோடி அறிவித்தார். நாட்டில் புழக் கத்தில் உள்ள பணத்தின் மதிப்பு 17.32 இலட்சம் கோடி யாகும். இதில் ஐநூறு, ஆயிரம் உருபா நோட்டுகளின் மதிப்பு 86 விழுக்காடாகும். அதாவது 14.46 கோடி உருபா. எண்ணிக்கையில் 220 இலட்சம் பணத்தாள் களாகும். ஒரே இரவில் இவ்வளவு பெருந்தொகையை மதிப்பு நீக்கம் செய்யப்படுவதால் பொது மக்களுக்கு ஏற்படக்கூடிய இடர்ப்பாடுகளை, துன்பங்களை இந்திய அரசு கருத்தில் கொள்ளாமல் தடாலடியாக இந்த அறி விப்பைச் செய்தது என்பதைக் கடந்த 45 நாட்களின் அனுபவங்கள் உணர்த்துகின்றன. பணமதிப்பு நீக்கம் தொடர்பாக 8.11.2016க்குப் பிறகு அய்ம்பதுக்கு மேற் பட்ட அறிவிப்புகள் அரசின் சார்பில் வெளியிடப்பட்டுள்ள தானது எதைக் காட்டுகிறது? முறையாகத் திட்டமிடப் படாமல் இத்திட்டம் மோடியால் அறிவிக்கப்பட்டது என்பதையே காட்டுகிறது.

**10.10.2016 முதல் கடந்த ஒன்றரை மாதங்களாக மக்கள் தங்களிடம் செல்லாததாகிவிட்ட ஐநூறு, ஆயிரம் உருபா நோட்டுகளில் ரூ.4000 அளவுக்குப் புதிய நோட்டுகளாக மாற்றவும், மீதித் தொகையை தங்கள் கணக்கில் வங்கியில் செலுத்தவும், வங்கியில் தங்கள் சேமிப்பில் உள்ள பணத்தை எடுக்கவும் நாள் கணக்கில் பல மணிநேரம் கால்கடுக்க நின்று கொண்டிருக்கின்றனர். வங்கிகளின் முன்னால் வரிசை யில் நின்ற துன்பத்தால் துவண்டு விழுந்து இதுவரை எண்பது பேர் மாண்டிருக்கின்றனர்.**

நவம்பர் 8 அன்று நாட்டு மக்களுக்கு நரேந்திர மோடி ஆற்றிய உரையில், “உங்கள் கணக்கில் செல் லாத உருபாய் நோட்டுகளைச் செலுத்திய பிறகு, உங் களுக்கு எப்போது தேவையோ அப்போது உங்கள் பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்” என்று உறுதி அளித் தார். ஆனால் நிலைமை என்ன?

ஒரு கிழமையில் ரூ.24,000 அளவுக்கு ஒருவர் பணத்தை எடுக்கலாம் என்று அரசு அறிவித்தது. வங்கி முன் வரிசையில் மணிக்கணக்கில் காத்திருந்த பிறகும் ரூ.2000, ரூ.4000 அல்லது ரூ.5000



*தப்பித்தோம் - பிழைத்தோம் என்று ஒரு 2000 உருவா தாளுடன் வங்கியிலிருந்து வெளிவரும் முதிய விவசாயி வித்யாராம்*

மட்டுமே தரப்படுகிறது. பணம் தீர்ந்துவிட்டது என்று கூறி மக்கள் திருப்பி அனுப்பப்படுகின்றனர். ஏ.டி.எம். களில் பணம் எடுப்பது என்பது குதிரைக் கொம்பு போலாகிவிட்டது. வங்கிகள் அன்றாடம் செயல்படு கின்றன. ஆனால் ஏ.டி.எம்.கள் எப்போது திறக்கப்படும் என்பதே தெரியாத-கேடான நிலை நீடிக்கிறது. ஏ.டி.எம். இல் பணம் நிரப்பப்பட்ட அரை மணிநேரத் திற்குள் பணம் தீர்ந்துவிடுகிறது. பெரும்பாலான ஏ.டி.எம். களில் பெரும்பாலான நேரங்களில் பணம் இல்லை என்கிற அறிவிப்புப் பலகை வாயிலில் தொங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் நிதி அமைச்சர் அருண் ஜெட்லி 20.12.2016 அன்று, “வங்கிகளுக்குக் போது மான உருபா நோட்டுகளை ரிசர்வ் வங்கி வழங்காத நாளே இல்லை; உருபா நோட்டுகளுக்கு ஏற்படும் தட்டுப்பாட்டைச் சமாளிக்க ரிசர்வ் வங்கி முழு அளவில் தயாராக இருக்கிறது” என்று நாக்கூசாமல் பொய் பேசியிருக்கிறார்.

ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில், 19.12.2016 அன்று வரை ரூ.12,40,000 கோடிக்குப் பழைய - செல்லாத 500, 1000 ரூபாய் தாள்களைப் பெற்றுக்கொண்டு, அதற்கு மாற்றாக ரூ.5,92,000




*நகரங்களில் தெருவோரச் சிறுகடைகளையும் மின்னணுப் பணபரிமாற்றத்துக்கு விரட்டும் மோடி அரசு; இடம் கோவை வ.உ.சி.பூங்கா*

கோடிக்கு மட்டுமே புதிய உருபா நோட்டுகளைப் புழக் கத்திற்குக் கொடுத்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. அதாவது கணக்கில் பெற்றுக்கொண்ட 12 இலட்சம் கோடி உருபா பழைய நோட்டுகளுக்கு மாற்றாக அதில் பாதி அளவான ரூ.6 இலட்சம் கோடிக்குப் புதிய தாள்களை - அவற்றில் பெரும்பாலும் ரூ.2000 மதிப்புள்ள தாள்களைப் புழக் கத்திற்குக் கொடுத்துள்ளது. ஆனால் நிதி அமைச்சர் அருண் ஜெட்லி ரிசர்வ் வங்கியிடம் உருபா நோட்டுத் தட்டுப்பாட்டைச் சமாளிக்கும் அளவுக்குப் புதிய உருபா நோட்டுகள் இருப்பதாகப் புளுகுகிறார். **உண்மை என்ன வெனில் அரசிடம் உள்ள உருபா நோட்டு அடிக்கும் அச்சகங்களில் அவற்றின் முழு உற்பத்தித் திறனைப் பயன்படுத்தினாலும் பழைய செல்லாத நோட்டுகளுக்கு ஈடுகட்டும் அளவுக்குப் புதிய பணத்தாள்களை அச்சிடு வதற்குக் குறைந்தது ஆறு மாதங்கள் முதல் ஓராண்டு ஆகும் என்று கூறப்படுகிறது. அதுவரை மக்கள் அன் றாடம் வங்கிகளில் பணம் எடுப்பதற்காக அல்லாடும் அவல நிலை நீடிக்கும்.**

ஐநூறு, ஆயிரம் உருவா நோட்டுகள் செல்லாது என்ற அறிவிப்பு நாட்டின் பொருளாதார அன்றாட நடவடிக்கைகளைச் சீரழித்துள்ளது. நாட்டின் பொருளா தார நடவடிக்கைகளில் 85 விழுக்காட்டிற்குமேல் ரொக்கப் பணம் பரிவர்த்தனையில் தான் நடக்கிறது. திடீரென ரொக்கப் பணப்புழக்கம் நிறுத்தப்பட்டதால் வேளாண்மை, சிறு, குறு தொழில்கள், கட்டுமானப் பணிகள், சுயதொழில்கள் முதலானவற்றின் உற்பத்தி யில்-செயல்பாடுகளில் பெரும் தேக்கம் ஏற்பட்டுவிட்டது. உழைக்கும் அகவையில் உள்ள உழைப்பாளர்களில் 90 விழுக்காட்டினர் அமைப்புசாராத் தொழில்களில் தான் வேலை செய்கின்றனர். இவர்களுக்கான ஊதியம் நாள் கூலியாகவோ, வார-மாதச் சம்பளமாகவோ ரொக்கமாகத் தரப்படுகிறது. ஒரே இரவில் அதிரடியாக 86 விழுக்காடு அளவிற்கான பணத்தின் மதிப்பு நீக்கம் செய்யப்பட்டுவிட்டதால்; ரொக்கப் பணப்புழக்கம் அடி யோடு முடங்கிவிட்டது. இதனால் ஏற்பட்ட வேலை இழப்பாலும் வருவாய் இழப்பாலும் உழைக்கும் மக்கள் தவித்துக் கொண்டிருக்கின்றனர். நாட்டின் பொருளாதாரம் பெரும் பின்னடைவைக் கண்டுள்ளது. இதுவே உண்மை.

திசம்பர் மாதம் சென்னையைத்தாக்கிய வார்தா புயல் மரங்களையும் மக்கள் வாழ்க்கையையும் புரட்டிப் போட்டது போல், மோடியின் பணமதிப்பு நீக்க நடவடிக்கை மக்களின் அன்றாட வாழ்க்கையை நிலைகுலையச் செய்துவிட்டது. இத்துன்பத்தை நாட்டின் நலனைக் கருத்தில் கொண்டு பொதுமக்கள் அய்ம்பது நாள்களுக்கு - அதாவது திசம்பர் 31 வரை பொறுத்துக் கொள்ள வேண்டும் என்று நரேந்திர மோடி வேண்டு கோள் விடுத்தார். நாட்டில் தலைவிரித்தாடும் ஊழலை யும், கருப்புப் பணத்தையும், கள்ளப் பணத்தையும் ஒழிப்பதற்காக அரசு நடத்தும் இந்த மாபெரும் வேள்வி யில் மக்களும் பங்கேற்று ஒத்துழைக்க வேண்டும் என்று மோடி அழைப்பு விடுத்திருக்கிறார்.

**இந்திய மருத்துவக் கல்விக் கழகத்தின் (MCI) தலைவராக இருந்த கேதன் தேசாய், முறைகேடாக மருத்துவக் கல்லூரிகளுக்கு அனுமதி அளித்ததன் மூலம் இலஞ்சமாகப் பெற்ற ரூ.2500 கோடியை முட்டாள்தனமாகத் தன் வீட்டில் அடுக்கி வைத்திருந் தார். அதனால் கையும் களவுமாகப் பிடிபட்டார்; பணமும் அமலாக்கத் துறையால் கைப்பற்றப்பட்டது. ஆனால் பிணையில் வெளிவந்த இந்த ஊழல் பெருச் சாளியை, குசராத் முதலமைச்சராக இருந்த நரேந்திர மோடி உலக மருத்துவக் கழகத்தின் தலைவராக்கிட உதவி செய்தார். குசராத் மாநில முதலமைச்சராக நரேந்திர மோடி இருந்த போது ஆதித்திய பிர்லா, சஹாரா நிறுவனங்களிடம் கோடிக்கணக்கில் பணம் பெற்றார் என்பதற்கான ஆவணங்கள் அமலாக்கத் துறையின் அதிரடிச் சோதனையில் சிக்கின. இது குறித்த வழக்கு உச்சநீதிமன்றத்திற்குச் சென்றது. கோடிக்கணக்கில் மோடி இரண்டு முதலாளிய நிறுவனங்களிடம் பணம் பெற்றது குறித்து மோடியிடம் விசாரணை மேற்கொள்ளாதவாறு உச்சநீதிமன்றம் மழுப்பலான முறையில் தடுத்துவிட்டது. இந்த மோடி தான் அவ்வப்போது "என்னுடைய கைகள் கறைபடா தவை - தூய்மையானவை" என்று அவருக்கு அவரே நற்சான்று வழங்கிக் கொள்கிறார்.**


கிட்டத்தட்ட கருப்புப் பணம் முழுவதும் பெருமுத லாளிகள், உயர் அதிகாரிகள், அரசியல்வாதிகளிடம் இருக்கிறது. இவர்கள் கேதன் தேசாய் போல் கருப்புப் பணத்தை வீட்டிலேயே அடுக்கி வைக்கும் அளவுக்கு முட்டாள்கள் அல்லர். மொத்த கருப்புப் பணத்தில் ஆறு

விழுக்காடு அளவிற்கு மட்டுமே ரொக்கப் பணமாக இருக்கிறது என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இக் கருப்புப் பண முதலைகள் கருப்புப் பணத்தின் பெரும் பகுதியை அயல்நாடுகளின் வங்கிகளில் சேமித்து வைக்கின்றனர்.

குளோபல் பைனான்சியல் இண்டக்ரிட்டி (Global Financial Integrity) என்கிற அமைப்பு வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில், இந்தியாவில் 2004 முதல் 2013 வரையிலான காலத்தில் ஆண்டுதோறும் 3.3 இலட்சம் கோடி கருப்புப் பணம் இந்தியாவை விட்டு வெளியேறி யுள்ளது; அதாவது கடந்த 12 ஆண்டுகளில் 40 இலட்சம் கோடி கருப்புப் பணம் அயல்நாடுகளில் பெருமுதலாளி களால் பதுக்கி வைக்கப்பட்டுள்ளது என்று கூறப்பட் டுள்ளது. எனவேதான் இந்தியாவில் வருமான வரி ஏய்ப்புச் சிக்கல் ஏற்படும்போது, லலித்மோடி, விஜய் மல்லையா, இறைச்சி ஏற்றுமதி முதலாளி மொயின் குரோஷி, பெரிய ஆயுத விற்பனை வணிகர்களான சுதிர் சவுத்திரி, விபின் கன்னா போன்றவர்கள் அரசின் ஆதரவுடன் வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றுவிடு கின்றனர். இவர்கள் வெளிநாடுகளில் கோடிக்கணக்கில் பதுக்கி வைத்துள்ள பணத்தைக் கொண்டு அரசர் களைப் போல வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்திய நாட்டின் மொத்தக் கருப்புப் பணம் எவ்வளவு என்பது இன்னும் திட்டவட்டமாக வரையறுக்கப்பட வில்லை. பொது நிதி மற்றும் கொள்கைக்கான தேசிய நிறுவனம் (National Institute of Public Finance and Policy - NIPFP) 2013இல் நிதி அமைச்சகத்திற்கு அளித்த அறிக்கையில், வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் உள்ள இந்தியாவின் கருப்புப் பணம் இந்திய நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் (GDP) 75 விழுக்காடு அளவிற்கு உள்ளதாகத் தெரிவித்திருந்தது. அப்போது நிதி அமைச்சராக இருந்த ப. சிதம்பரமும் ஊடகங்களும் இந்த அறிக்கையைப் பொருட்படுத்த வில்லை. 75 விழுக்காடு கருப்புப் பணம் என்பது 120 இலட்சம் கோடியாகும்.

உலக வங்கி அறிக்கையில், இந்தியாவின் கருப்புப் பணம் நாட்டின் மொத்த உற்பத்தி மதிப்பில் 20 முதல் 30 விழுக்காடு அளவுக்கு இருக்கும் என்று கூறப்பட் டுள்ளது என, ஊடகங்களில் குறிக்கப்படுகிறது. வெளி நாடுகளின் வங்கிகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள கருப்புப் பணம் 75 இலட்சம் கோடி என்று முதலில் கூறியவர் எல்.கே. அத்வானிதான். எனவேதான் பா.ச.க.வின் பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்பட்ட நரேந்திர மோடி, 2014இல் நாடாளுமன்றத்திற்கு நடந்த பொதுத் தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில், ‘‘அயல்நாட்டு வங்கிகளில் உள்ள 75 இலட்சம் கோடி கருப்புப் பணத்தை மீட்டு வந்து ஒவ்வொரு இந்தியனின் வங்கிக் கணக்கிலும் 15 இலட்சம் உருவா போடுவேன்’’ என்று போர் முழக்கம் செய்தார். இரண்டரை ஆண்டு கால ஆட்சியில் வெளிநாட்டுக் கருப்புப் பணத்திலிருந்து ஒரு காசு கூட மீட்கவில்லை மோடி. **இதுகுறித்து பா.ச.க.வின் தலைவராகவும் மோடியின் வலது கையாக வும் உள்ள அமித்ஷாவிடம் கேட்ட போது, ‘‘இதெல் லாம் தேர்தல் காலத்தில் பேசுகிற பேச்சுகள்; இதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளலாமா’’ என்று ஊடக வியலாளர்களிடம் திருப்பிக் கேட்டார்.**


*செல்லாத உருபாவை மாற்றுவதற்காக அகமதாபாத்துக்கு அருகில் வங்கி முன் நீண்ட நேரம் வரிசையில் நின்றதால் மயங்கி விழுந்த 74 அகவை முதியவர்*

வெளிநாடுகளில் உள்ள கருப்புப் பணத்தை மீட்க முடியாத நிலையில் உள்நாட்டில் இருக்கும் கருப்புப் பணத்தை மீட்பதற்கான அதிரடி நடவடிக்கையாக - இராணுவத்தின் துல்லிய தாக்குதல் போல் பணமதிப்பு நீக்க நடவடிக்கையை நரேந்திர மோடி அறிவித் துள்ளார். மோடி, ஆட்சியில் அமர்ந்தபின், ‘‘இந்தியாவில் தயாரிப்போம்’’, ‘‘தூய்மை இந்தியா’’, ‘‘டிஜிட்டல் இந்தியா’’, ‘‘ஸ்டார்ட் அப் இந்தியா’’, ‘‘ஸ்டேன்ட் அப் இந்தியா’’ முதலான பல முழக்கங்களை முன்மொழிந்



*பணப்புழக்கம் பாதிக்கும் கீழாகக் குறைந்ததால் விவசாயிகள் தங்கள் தானியங்களை மண்டிகளில் கடனில் கொடுத்துவிட்டு வெறுங்கையுடன் திரும்பும் நிலை ஏற்பட்டுள்ளது.*

தார். அவற்றால் வெளிப்படையான பயன்கள் ஏதும் விளையவில்லை. தன்னுடைய ஆட்சியின் தோல்விகளை மூடி மறைக்கவும், தன் செல்வாக்கைச் சரியாமல் பார்த்துக் கொள்வதுடன், மேலும் உச்சநிலைக்குக் கொண்டு செல்லவும் தேர்ந்தெடுத்த துல்லிய தாக்குதல் தான் - பணமதிப்பு நீக்க நடவடிக்கை. பணமதிப்பு நீக்க நடவடிக்கை ஊழலை, கருப்புப் பணத்தை, கள்ளப் பணத்தை ஒழிக்கும் என்கிற போலியான எதிர்பார்ப்பை, நம்பிக்கையை மக்களிடம் பா.ச.க. தன் பரப்புரைகள் மூலம் ஏற்படுத்தி இருக்கிறது. **எனவேதான் வங்கிகளின் முன்னால் கால்கடுக்கப் பல மணிநேரம் நின்றவாறு காத்திருப்பது துன்பமாக இருக்கிறது என்று புலம்பும் மக்களில் ஒரு பகுதியினர், பணமதிப்பு நீக்க நடவடிக்கை கருப்புப் பணத்தை ஒழிக்கும் என்பதால், வரவேற்கக் கூடியதுதான் என்றும் கூறுகின்றனர்.** கோழியை விரட்டி அமுக்கிப் பிடிப்பதுபோல், நரேந்திர மோடி பணமதிப்பு நீக்க நடவடிக்கை மூலம் நாட்டில் உள்ள கருப்புப் பணத்தை அப்படியே அள்ளி சாக்கு மூட்டைகளில் கட்டி எடுத்து வந்து அரசின் கருவூலத்தில் சேர்த்து விடுவார்; அப்பணம் மக்கள் நலத்திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படும்; தொழில்களில் முதலீடாகச் செய்யப் படுவதன் மூலம் வேலை வாய்ப்புகள் பெருகும்; மக்களின் வாங்கும் சக்தி உயரும்; வறுமை நீங்கும் என்று நடுவண் அரசும், பா.ச.க.வினரும் நாள்தோறும் பரப்புரை செய்து வருகின்றனர்.

இந்திரா காந்தி பிரதமராக இருந்தபோது மக்களிடம் தன் செல்வாக்கை மேலும் உயர்த்திக் கொள்வதற்காக, வறுமையை ஒழிக்க முடியாது என்பதை நன்கு தெரிந்திருந்தும், 1971இல் தேர்தலின் போது ‘‘வறுமையை வெளியேற்றுவோம்’’ (கரிபீ ஹட்டாவோ) என்ற முழக்கத்தை முன்வைத்தார்.

**உள்நாட்டில் உள்ள கருப்புப் பணத்தில் 6 விழுக்காடு அளவிற்கு தான் ரொக்கப் பணமாக - உருவா நோட்டுகளாக இருக்கிறது. மீதி கருப்புப் பணம் நிலம், வீட்டு மனை வணிகம், பெரும் கட்டடங்கள், தங்கம், வைரம், பங்குச் சந்தை முதலீடுகள் என அசையாச் சொத்துகளாகவும் அசையும் சொத்துகளாகவும் அரசின் நடவடிக்கையால் தொட முடியாத வகையில் பாதுகாப்பாக உள்ளன. அதாவது கருப்புப் பணம் உருவாக, உருவாக அதில் 95 விழுக்காட்டிற்குமேல் அது வெள்ளையாகக் கருப்புப் பண முதலாளிகளால் மாற்றப்பட்டுக் கொண்டே இருக்கிறது.**

அயல்நாடுகளில் வங்கிகளில் பதுக்கப்பட்டுள்ள கருப்புப் பணமும் சும்மா தூங்கிக் கொண்டிருப்பதில்லை. முதலாளித்துவப் பொருளாதார அமைப்பில் மூலதனம் மேலும் இலாபத்தை ஈட்டுவதற்கான வழி வகைகளைத் தேடி ஓடிக்கொண்டே இருக்கும். ஆகவே வெளிநாடுகளில் உள்ள கருப்புப் பணம் அந்நிய மூலதனமாகவும் ஹவாலா மூலமும் மீண்டும் இந்தியாவுக்குள் வந்து கொண்டிருக்கின்றது. இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் 2.5 இலட்சம் கோடி உருவா அளவுக்குக் கருப்புப் பணம் இந்தியப் பொருளாதாரத்தில் உருவாகிறது. இதில் ஒரு பகுதி அயல்நாடுகளில் உள்ள வங்கிகளுக்குச் சென்று கொண்டே இருக்கிறது. அதேபோல் அயல்நாடுகளின் வங்கிகளில் உள்ள கருப்புப் பணம் பல்வேறு வழிகளில் மீண்டும் இந்தியாவுக்குள் வந்துகொண்டே இருக்கிறது.

வாஜ்பாய் ஆட்சிக் காலத்தில், அந்நிய முதலீட்டை இந்தியப் பங்குச் சந்தையில் ஈர்ப்பதற்காகப் பங்கேற்புப்

பத்திர முறையைக் (Participatory Notes) கொண்டு வந்தார். இதன்படி பங்குச் சந்தையில் இந்தியாவில் உள்ள ஒருவரோ, அயல்நாடுகளில் இருப்பவர்களோ எவ்வளவு தொகையை வேண்டுமானாலும் இந்தியப் பங்குச் சந்தையில் முதலீடு செய்யலாம். அவர்களின் பின்னணி குறித்து அரசு விசாரிக்காது என்பதுடன், அவர்களின் பெயர் குறித்த விவரங்கள் இரகசியமாய் வைத்திருக்கும். இந்தப் பங்கேற்புப் பத்திரங்கள் மூல மாகத்தான் வெளிநாடுகளில் பதுக்கப்பட்டுள்ள கறுப்புப் பணம் இந்தியப் பங்குச் சந்தையில் குளித்தெழுந்து வெள்ளைப் பணமாக மாறிவிடுகிறது.

இந்தியாவில் அதிகமாக முதலீடு செய்திருப்பது அமெரிக்காவோ, சீனாவோ அல்ல. இந்துமாக்கடலில் அமைந்துள்ள மொரீசியஸ் என்ற குட்டித்தீவு 40 விழுக் காட்டுக்கு மேலான அந்நிய முதலீட்டை இந்தியாவில் போட்டுள்ளது. மொரீசியஸ், கேமன் போன்ற குட்டித் தீவுகள், சிங்கப்பூர் போன்ற சில குட்டி நாடுகளுடன் இந்தியா ''இரட்டை வரிவிதிப்புத் தவிர்ப்பு'' என்கிற ஒரு மோசடியான உடன்பாடு செய்து கொண்டுள்ளது. இதன்மூலம் வெளிநாடுகளில் உள்ள கருப்புப்பணம், பங்கேற்புப் பத்திரங்கள் என்கிற வடிவில் இந்தியப் பங்குச்சந்தைக்குள் நுழைந்து வெள்ளைப் பணமாக மாறிக்கொண்டே இருக்கிறது. கருப்புப்பண ஒழிப்பு நடவடிக்கையாகப் பங்கேற்புப் பத்திர முறையை ஒழிக்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் பலரும் கூறிவரு கின்றனர். மன்மோகன் சிங் ஆட்சியோ, கருப்புப் பணத்தை ஒழிப்பதற்காகவே அவதாரம் எடுத்திருப்ப தாகக் கூத்தாடும் மோடியோ இதை ஒழிக்க முன்வர வில்லை.

பாக்கிஸ்தானில் உயர்மதிப்புக் கொண்ட இந்திய உருவா பணத்தாள்களை அச்சிட்டு இந்தியாவுக்குக் கொண்டுவந்து, இங்கு பயங்கரவாதச் செயல்களுக்குப் பயன்படுத்துவதைத் தடுப்பது என்பது, பணமதிப்பு நீக்க நடவடிக்கையின் நோக்கங்களில் ஒன்று என மோடி கூறியிருப்பது மிகவும் நகைப்புக்கிடமான தாகும். இப்போது புதியதாக வெளியிடப்பட்டுள்ள ரூ.2000 மதிப்பு கொண்ட பணத்தாள்களைக் கள்ள நோட்டாக அச்சிட முடியாதா? இந்தியாவில் இப்போதே ரூ.2000 கள்ள நோட்டுகள் புழக்கத்திற்கு வந்துவிட்ட தாகச் செய்திகள் வெளிவந்துள்ளனவே! பாக்கிஸ்தானிய பயங்கரவாதிகள் இந்த அளவுக்குத் தொல்லைப்பட வேண்டியதில்லை. ஏனெனில் பாக்கிஸ்தானிய பயங்கர வாதிகள் பங்கேற்புப் பத்திரங்கள் மூலம் இந்தியப் பங்குச் சந்தையில் முதலீடு செய்வதற்குத் தடை இல்லை. அந்தப் பங்குச் சந்தை முதலீட்டிலிருந்து கிடைக் கும் ஈவுத்தொகையை அல்லது முதலீட்டை விற்றுக் கிடைக்கக்கூடிய வெள்ளைப் பணத்தைத் தீவிரவாதி களுக்கு விநியோகிப்பது எளிது என்பதை அறியாத முட்டாள்களா அவர்கள்?

**கருப்புப் பணம் இரண்டு வழிகளில் உருவாகிறது. போதை மருந்து வணிகம்-கடத்தல், ஆயுதக் கடத்தல், ஆள் கடத்தல், விபச்சாரம் முதலான முறைகேடான தொழில்கள் மூலம் கிடைக்கும் பணம் ஒருவகை. முறையாகத் தொழில் செய்பவர்களும் பலவகைகளில் வரி ஏய்ப்பு செய்வது, குறிப்பாக ஏற்றுமதி-இறக்கு மதிகளில் பெருமுதலாளிய நிறுவனங்கள் செய்யும் தில்லுமுல்லுகள் மூலம் கருப்புப் பணம் உருவாவது மற்றொரு வகை.**

நாட்டில் உள்ள கருப்புப் பணத்தில் 64 விழுக்காடு கார்ப்பரேட் முதலாளிகளிடம் உள்ளது. மீதி அரசியல் வாதிகள், உயர் அதிகாரிகள், கிரிமினல்கள் ஆகியோரிடம் இருக்கிறது. எனவே முதலாளிகள் - அரசியல்வாதிகள் - உயர் அதிகாரிகள்-கிரிமினல்கள் கூட்டுதான் கருப்புப் பணம் உருவாவதற்கும் நிழல் பொருளாதாரம் நிலவு வதற்கும் காரணர்கள் ஆவர்.

முதலாளிகளும் முறைகேடான தொழில்களைச் செய்வோரும் அரசியல்வாதிகளுடன், கட்சிகளுடன் அணுக்கமாக இருப்பதுடன் அவர்களுக்குப் பெருந்தொகையை இலஞ்சமாகவும் நன்கொடை என்ற பெயரிலும் அளித்து வருகின்றனர். அதற்குக் கைம்மாறாக அரசியல் கட்சிகள் அவர்களின் முறைகேடுகளுக்குப் பாதுகாப்பு அரணாக விளங்குகின்றன. தேசியக் கட்சி, மாநிலக் கட்சி என்கிற வேறுபாடு இதில் இல்லை. கடந்த பத்து ஆண்டுகளில் ''யாரிடமிருந்து என்று கூறப்படாத வகையில்'' (Unknown Sources) தேசிய கட்சிகள் பெற்ற நன்கொடை விவரம் :

| வ. எண். | கட்சியின் பெயர் | பெற்ற நன்கொடை ரூ. கோடியில் |
|---|---|---|
| 1. | காங்கிரசு | 3,323 |
| 2. | பா.ச.க. | 2,125 |
| 3. | சி.பி.எம். | 471 |
| 4. | பகுஜன் சமாஜ் | 448 |
| 5. | தேசியவாத காங்கிரசு | 243 |

அரசியல் கட்சிகளுக்கு ரூ.20,000க்குக் குறை வாக அளிக்கப்படும் நன்கொடைகள் வருமான வரி விதிப்புச் சட்டத்தின்கீழ் வரமாட்டா என்று 1951ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தில் எழுதப்பட்டு விட்டது. ஏனெனில் இந்திய அரசமைப்புச் சட்டம் என்பது அடிப்படையிலேயே முதலாளிகளையும் பெரும் பணக் காரர்களையும் காப்பாற்றும் சட்டம் என்பதை நாம் எப்போதும் மறந்துவிடக்கூடாது.

**அரசியல் கட்சிகள் முறைகேடாகப் பெறும் பணம் முழுவதையும் ரூ.20,000க்குக் குறைவாகப் பெற்ற**

**நன்கொடையாகவே கணக்குக் காட்டுகின்றன. மேலும், 1961ஆம் ஆண்டு வருமான வரிச் சட்டத்தில் அரசியல் கட்சிகளுக்கு வருமான வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுவிட்டது. எனவே அரசியல் கட்சி என்பது கறுப்புப் பணத்தை வெள்ளைப் பணமாக மாற்றுவதற்கான சிறந்ததோர் அமைப்பு என்றாகிவிட்டது. இந்தியாவில் இப்போது இருக்கின்ற அரசியல் கட்சிகள் எண்ணிக்கை எத்தனை தெரியுமா? தேர்தல் ஆணையத்திடம் அரசியல் கட்சிகளாகப் பதிவு செய்யப் பட்டிருப்பவைகளின் எண்ணிக்கை 1900. இவற்றுள் 400 அரசியல் கட்சிகள் கூட, தேர்தல்களில் வேட்பாளர்களை நிறுத்துவதில்லை. கருப்புப் பணத்தை எளிதாக வெள்ளையாக்குவதற்கான சாதனமாக அரசியல் கட்சிகள் இருக்கின்றன (Economic and Political Weekly, December 17, 2016).**

சென்னையில் இருக்கும் எஸ்.ஆர்.எம். பல்கலைக் கழகத்தின் நிறுவனரும் இணைவேந்தருமான பச்சமுத்து என்கிற பாரிவேந்தர் இந்திய சனநாயகக் கட்சி என்கிற அரசியல் கட்சியை நடத்துவதன் நோக்கம், கல்விக் கொள்கையின் கருப்புப் பணத்தை வெள்ளையாக்குவதற்கே ஆகும். சாதிச் சங்கங்களும் அரசியல் கட்சிகளை நடத்துவதன் பின்னணியும் இதுவே ஆகும். எனவே தேர்தல் ஆணையம் இந்திய அரசுக்கு அனுப்பிய அறிக்கையில், ரூ.2000 அல்லது அதற்கு அதிகமான தொகையில் பெயரிடப்படாமல் வழங்கும் நன்கொடைகளைப் பெறுவதற்கு அரசியல் கட்சிகளுக்குத் தடைவிதிக்க வேண்டும்; தேர்தல் அரசியலில் பங்கேற்காத கட்சிகளின் அங்கீகாரத்தை இரத்து செய்யும் அதிகாரம் தேர்தல் ஆணையத்துக்கு இருக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

ஆனால் பணமதிப்பு நீக்க அறிவிப்புக்குப்பின் கூடிய நாடாளுமன்றக் கூட்டத் தொடரில், மோடி அரசு, வெளிநாடுகளிலிருந்து இந்தியாவில் உள்ள அரசியல் கட்சிகளுக்கு வரும் நன்கொடைகளுக்கு உள்ள தடைகளை நீக்கும் வகையில் வெளிநாட்டு நன்கொடை ஒழுங்காற்றுச் சட்டத்தில் (FCRA) பின் தேதியிட்டு நடைமுறைக்கு வருவதாகத் திருத்தம் செய்துள்ளது - வேதாந்தா, ஸ்டர்லைட், அனில் அகர்வால் ஆகியோரை வழக்கிலிருந்து காப்பாற்ற!

கள்ளப் பணத்தை ஒழிப்பேன் என்பது மக்களை ஏமாற்றுவதற்கான ஒரு முழக்கமே ஆகும். 2012 முதல் 2015 வரையிலான காலத்தில் கைப்பற்றப்பட்ட போலி உருவா நோட்டுகள் எனப்படும் கள்ளப் பணம் 147 கோடி ஆகும். கொல்கத்தாவில் உள்ள இந்தியப் புள்ளி விவர அமைப்பு 2015இல் மேற்கொண்ட ஆய்வில், புழக்கத்தில் உள்ள கள்ளப்பணம் 400 கோடி உருபா என மதிப்பிட்டுள்ளது. இது மொத்தம் புழக்கத்தில் உள்ள பணத்தில் 0.022 விழுக்காடு மட்டுமே ஆகும். கள்ளப் பண மதிப்பீடு நூறு மடங்கு அதிகமாக அதாவது 40,000 கோடி என்று வைத்துக் கொண்டால்கூட, அது மொத்த மதிப்பில் ஒரு விழுக்காடு கூட இருக்காது. எனவே கள்ளப்பணம் கருப்புப் பணத்தைப் போல் அல்லாமல், பொருளாதார நடவடிக்கைகளில் குறிப்பிடும்படியான பாதிப்பை ஏற்படுத்துவதில்லை.

பணமதிப்புநீக்க நடவடிக்கையால் அரசு எதிர்பார்த்தபடி கருப்புப் பணம் கண்டுபிடிக்கப்பட முடியாது என்பதை உணர்ந்தாலும், மக்கள் பல வகையில் அலைக்கழிக்கப்படுவதால் ஏற்பட்டுள்ள எதிர்ப்பாலும், மோடி அரசு தன் குரலை மாற்றிக் கொண்டிருக்கிறது. ஊழலை, கருப்புப் பணத்தை, கள்ளப் பணத்தை ஒழிக்காமல் உறங்கமாட்டேன் என்று கொக்கரித்த மோடியும், பா.ச.க.வும் பணமதிப்பு நீக்கத்தின் நோக்கம் ரொக்கப் பணம் இல்லாத பொருளாதார நிலையை (Cashless Economy) உருவாக்குவதே என்பதற்கு முதன்மை தந்து பேசிவருகின்றனர். இதுவும் இல்லாத ஊருக்குப் போகாத வழிகாட்டுவது போன்றதே ஆகும்.

**இந்தியாவில் உள்ள மொத்த வங்கிகளின் கிளைகள் 1,35,263. இவற்றில் ஊரகப் பகுதிகளில் 47,455 கிளைகள் மட்டுமே உள்ளன. 15 அகவைக்கு மேற்பட்டவர்களில் 2016ஆம் ஆண்டில் 53 விழுக்காட்டினர் மட்டுமே வங்கிகளில் கணக்கு வைத்துள்ளனர். நாட்டில் மொத்தம் 2,02,000 ஏ.டி.எம்.கள் உள்ளன. ஊரகப் பகுதிகளில் 20 விழுக்காட்டிற்கும் குறைவான ஏ.டி.எம்.களே இருக்கின்றன. ஆகவே மோடி கூறும், 'பணம்மற்ற பொருளாதாரத்திற்கான' போதிய கட்டமைப்பு வசதிகள் இல்லாத நிலையில் வெறும் வாய் வீராப்புப் பேசுவதால் என்ன பயன்?**

**ஸ்மார்ட் செல்பேசிகள் மூலம் பணப்பரிமாற்றம் செய்து கொள்ள மக்கள் பழகிக் கொள்ள வேண்டும் என்று மோடி சொல்கிறார். நாட்டில் 83 விழுக்காட்டினரிடம் ஸ்மார்ட் செல்பேசி இல்லாத நிலையில், இதைப் பரிந்துரைக்க மோடி அரசு வெட்கப்பட வேண்டாமா? 2011ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கின்படி 25 விழுக்காட்டினர் எழுத்தறிவற்றவர்கள். மேலும் பள்ளிகளில் முதல் வகுப்பில் சேருவோரில் 39 விழுக்காட்டினர் 5ஆம் வகுப்பை முடிப்பதற்குள் பள்ளியிலிருந்து நின்று விடுகின்றனர். இவர்களால் ஸ்மார்ட் ஃபோன் மூலம் பணப்பரிவர்த்தனை செய்ய முடியுமா? வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் 40 விழுக்காடு மக்களால் ஸ்மார்ட் கைப்பேசி வாங்க முடியுமா?**

பிரெஞ்சுப் புரட்சிக்குமுன் மக்கள் ரொட்டியும் கிடைக்காமல் பட்டினியால் தவித்த போது, மன்னரின் மனைவி கேக் சாப்பிடுமாறு மக்களுக்குக் கூறியது போல், வங்கிகளிலும் ஏ.டி.எம்.களிலும் தங்கள் பணத்தை

எடுக்க முடியாமல் மக்கள் தவித்துக் கொண்டிருக்கும் போது, ஸ்மார்ட் கைப்பேசிக்கு மாறுங்கள் என்று கூறுவது முட்டாள்தனமாக இருக்கிறது.

2016 சூலையின் கணக்கின்படி, இந்தியாவில் 69.77 கோடி பற்று அட்டைகள் (Debit Card) வழங் கப்பட்டுள்ளன. 2.59 கோடி கடன் அட்டைகள் (Credit Card) வழங்கப்பட்டுள்ளன. இவை இரண்டும் பொதுவாக பிளாஸ்டிக் அட்டைகள் எனப்படுகின்றன. 69 கோடி பற்று அட்டைகள் இருந்தாலும் இவற்றில் 90 விழுக்காடு பற்று அட்டைகள் ஏ.டி.எம்.களில் பணம் எடுப்பதற்கு மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. பொருள் களை வாங்கப் பயன்படுத்துவதில்லை. ஏனெனில் உழைக்கும் மக்களில் 90 விழுக்காட்டினர் அமைப்பு சாரா தொழிலாளர்களாக இருப்பதாலும் ஏழை, எளிய, நடுத்தர வர்க்கத்தினராகவும் இருப்பதாலும்-சிறு அளவி லான ரொக்கப் பரிமாற்றச் சந்தைதான் நாட்டில் நிலவுகிறது. உழவர்களில் 85 விழுக்காட்டினர் சிறு, குறு உழவர்களாக இருக்கும் நிலையில் அவர்களின் விளைபொருள்களை முன்பேர வணிகத்திலா விற்க முடியும்? குறிப்பாக காய்கறிகள், பூ வகைகள், பழங்கள் முதலானவை சிறிய அளவில் ரொக்கத்திற்குச் சந்தைப் படுத்தப்படுகின்றன. மோடி ஆட்சி, இந்த நடப்பு உண் மைகளை மறந்துவிட்டு மின்னணுப் பணப்பரிவர்த்த னையை முன்னெடுப்பது மக்களை எள்ளிநகையாடுவது போன்றதல்லவா? 30 விழுக்காடு கிராமங்களுக்கு மின் இணைப்பே இந்த 2016ஆம் ஆண்டிலும் இல்லை என்பது மோடிக்குத் தெரியுமா?

**இரசீதுகள் இல்லாமல் ரொக்கப் பரிமாற்றத்தின் மூலம் நடக்கும் வணிகத்தால்தான் கருப்புப் பணம் உருவாகி வருகிறது என்கிற பழியை சிறு வணிகர்கள் மீது மோடி சுமத்துகிறார். இதன் உள்நோக்கம் சில் லறை வணிகத்தை ஒழித்து ரிலையன்ஸ், வால்மார்ட், பிக் பஜார் போன்ற பெருமுதலாளிகளின் சந்தை ஏகபோகத்திற்கு வழியமைப்பதே ஆகும்.**

மின்னணுப் பணப் பரிமாற்றத்துக்கு மாறிவிட்டால் ஊழலும் கருப்புப் பணமும் ஒழிந்துவிடும் என்பது ஒரு மாயை. பிளாஸ்டிக் பணத்தைப் பயன்படுத்தும் ஏகாதி பத்திய நாடுகளில்கூட, கருப்புப் பொருளாதாரம் ஒழிந்து விடவில்லை. அமெரிக்காவில் 1,60,000 கோடி டாலர் அளவுக்கும், சப்பானில் 48,000 கோடி டாலர் அளவுக் கும் கருப்புப் பொருளாதாரம் இருப்பதாக உலக வங்கி அறிக்கை தெரிவிக்கிறது. பணப்புழக்கம் குறைவாக இருக்கும் பிரேசில் நாட்டில் ஊழலும் கருப்புப் பணமும் கோலாச்சுகின்றன.

எனவே மோடி கூறுகின்ற ரொக்கப் பணம் இல்லாத பொருளாதாரம் என்பது சிறுவணிகர்களை, சுயதொழில் செய்வோரை, உழவர்களை, மற்ற உழைக்கும் பிரிவினரை வங்கி வலைப் பின்னலில் சிக்கவைத்து,



*மோடி பணமதிப்பு நீக்க அறிவிப்பு செய்து 45 நாள்களுக்குப் பிறகும் பணம் எடுக்க முடியாமல் தவிக்கும் மக்கள்*

அவர்களிடம் நேரடியான வரியை மேலும் வசூலிப்பதும், மக்களின் சேமிப்புப் பணத்தைக் கார்ப்பரேட் முதலாளி களுக்குக் கடனாகத் தருவதும், பிறகு அவற்றில் பெரும் பகுதியை வாராக்கடன் என்ற பெயரில் தள்ளுபடி செய்வதும் ஆகும். **நடுவண் அரசு ஆண்டுதோறும் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு 5 இலட்சம் கோடி அளவுக்குப் பலவகையான வரிச்சலுகைகளை அளித்து வருகிறது.**

**பணமதிப்பு நீக்க நடவடிக்கை கருப்புப் பணத்தை வெளிக்கொண்டுவரும் என்று சொன்னார் மோடி. வெகுமக்கள் வங்கிகளிலும், ஏ.டி.எம்.களிலும் தங்கள் பணத்தை எடுக்க முடியாமல் நடுத்தெருவில் வெய்யி லில், குளிரில் திண்டாடிக் கொண்டிருக்க, கருப்புப் பண முதலைகளோ நேரடியாக ரிசர்வ் வங்கியி லிருந்தே தங்களிடமிருந்த செல்லாத நோட்டுகளைப் புதிய 2000 உருவா பணத்தாள்களாக மாற்றிக் கொண்டுவிட்டன. மற்ற வங்கிகளிலிருந்தும் குறிப் பாகத் தனியார் வங்கிகளிடமிருந்து புதிய உருபா நோட்டுகளைப் பெற்றுக் கொண்டனர். கருப்பு பண முதலைகள் மோடிக்கு 'பெப்பே' காட்டிவிட்டார்கள்.**

ஏழைகள் நிம்மதியாகத் தூங்குகிறார்கள்; கருப்புப் பணம் வைத்திருப்போர் தூங்க முடியாமல் தூக்க மாத்திரையை விழுங்கிக் கொண்டிருக்கின்றனர் என்று நவம்பர் 8க்குப் பிறகு மோடி சொன்னார். ஆனால் இப்போது ஏழைகள் மட்டுமின்றி நடுத்தர மக்களும் நடுத்தெருவில் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். பணமதிப்பு நீக்க நடவடிக்கை கருப்புப் பணத்தையும் ஊழலையும் ஒழிக்கும் என்பது வெறும் கானல் நீரே என்பது வெட்டவெளிச்சமாகிவிட்டது. ஆனால் வெகு மக்களின் துயரம் இன்னும் பல மாதங்களுக்குத் தொடரும். மோடி இதற்கு விடை சொல்ல வேண்டிய காலம் விரை வில் வரும். கருப்புப் பண முதலைகள் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

# புதிய பணத்தாள் அச்சடிக்கும் போதே, மோடி அரசு செய்த பெரிய மோசடி

## உச்சநீதிமன்றம் தானாக முன்வந்து, உண்மையைக் கண்டுபிடிக்க வேண்டும்!

இந்தியா சுதந்தரம் பெற்ற ஒரு நாடு.

சுதந்தரம் பெற்று 70 ஆண்டு ஆகப் போகிறது.

சுதந்தரம் பெற்ற நாள் முதல் ‘‘பார்ப்பான் பண்ணையம் கேட்பார் இல்லை’’ என்கிற தன்மையில் தான் இன்றும் இந்திய அரசு நீடிக்கிறது.

30 ஆண்டுகள் தொடர்ந்து இந்தியாவை ஆண்ட காங்கிரசுக் கட்சி ஆட்சிகள் காலத்தில் நடந்த அழிம்புகளைவிட, கடந்த 2 ஆண்டுகளாக நடைபெறும் பாரதிய சனதாக் கட்சி ஆட்சி படுகேவலமாக - மோசடியானதாக இருக்கிறது. எப்படி?

இந்தியாவிலுள்ள 127 கோடி மக்களும் உண்ண, உடுக்க, வைத்தியம் பெற, பயணம் போக, குழந்தைகளைப் படிக்க வைக்க தோராயமாக ஒரு நாளைக்கு எவ்வளவு பணம் மொத்தத்தில் செலவாகும் என்கிற புள்ளிவிவரம் இந்திய அரசிடம் உள்ளது. ஒருவருக்கு, எல்லாவற்றுக்கும் ரொக்கமாகப் பணம் தேவைப்படுகிறது.

பழைய 1000; 500 பணத்தாள்கள் செல்லாது என்று, 8.11.2016 இரவு பிரதமர் மோடி அறிவித்தார். வங்கியில் பணம் எடுக்காமல் ஓர் இரண்டு, மூன்று நாள்களுக்கு அக்கம் பக்கத்தாரிடம் கடன் வாங்கி அன்றாடச் செலவுகளைச் செய்ய முடியும்.

இந்த இரண்டே நாள்களில், போதிய அளவில் ஏற்கெனவே அச்சடிக்கப்பட்ட புதிய பணத்தாள்களை இந்தியா முழுவதிலும் உள்ள வங்கிக் கிளைகளுக்கு அனுப்பியிருக்க முடியும். அதற்கு ஏற்பாடு செய்யவும், இரண்டு நாள்கள் கழித்து, அவரவர் சேமித்துள்ள பணத்தை அன்றாடம் வேண்டிய அளவு எடுத்திடவும், ஏன் அரசு தடைபோட வேண்டும்?

அந்தத் தடை 53, 54 நாள்களுக்கு ஏன் நீடிக்க வேண்டும்?

இந்திய அரசு பணத்தாள் அச்சிடும் பணியையும், நாணயங்கள் வார்க்கும் பணியையும் மிக முன்கூட்டியே செய்யாதது ஏன்?

**மோடி அரசு பணத்தாள் அச்சிடுவதிலேயே மாபெரும் மோசடி செய்திருப்பதை நம்மால் நம்பிக்கையாக 9.12.2016இல் பெங்களூரில் அறிய முடிந்தது. அதன் விவரம் என்ன?**

இந்திய ரிசர்வ் வங்கியின் 23ஆம் ஆளுநராக டாக்டர் ரகுராம்ராஜன் என்பவர் அமர்த்தப்பட்டார். அவர் 4.9.2013 முதல் 4.9.2016 முடியப் பதவியில் இருந்தார். அந்த மூன்றாண்டுக் காலம் வரையில் பணத்தாள் அச்சடிக்கப்பட்டிருக்கும்.

ரகுராம்ராஜனை அடுத்து, டாக்டர் உர்ஜித் ஆர். படேல், 24ஆம் கவர்னராக 4.9.2016 அன்றே கவர்னர் பொறுப்பை ஏற்றார்.

பிரதமர் மோடி 8.11.2016 இரவு தான், பழைய 1000; 500 பணத்தாள்கள் செல்லமாட்டா என அறிவித்தார். அத்துடன் அந்தப் பழைய 1000, 500 பணத்தாள்களாக உள்ள பணத்தில், உடனே எவரும் 2.50 இலட்சத்தை வங்கியில் செலுத்தலாம் என்றும், அதற்கு மேற்பட்ட தொகையைச் செலுத்தினால், வருமானவரி மற்றும் தண்டத்தொகை போக, மீதத்தொகையை அவரவர் பெறலாம் என்றும் மோடி அறிவித்தார்.

**அதை அப்படியே பின்பற்றி, கருநாடக மாநிலத்தில், பெங்களூரில் உள்ள விசய நகரில் இயங்கிவரும் ‘‘சர்.எம். விஸ்வேஸ்ரய்யா கூட்டுறவு வங்கி லிமிடெட்’’ என்னும் கிளையில் கணக்கு வைத்துள்ள ஒருவர், 29.11.2016 அன்று நான்கு 2000 பணத்தாள்களாக இந்த வங்கிக் கிளையில் ரூபா 8,000 பணம் பெற்றார்.**

**அதில் இரண்டு பணத்தாள்களில், 4.9.2016 இல் பதவியிலிருந்து விலகிய ரகுராம்ராஜன் கையொப்பமிட்டுள்ளார். மீதி இரண்டு பணத்தாள்களில் 4.9.2016 அன்று பொறுப்பேற்ற உர்ஜிர் ஆர். படேல் கையெழுத்திட்டுள்ளார். இவற்றிலிருந்து நாம் அறிவது என்ன?**

**ரகுராம்ராஜன் ஆளுநராக இருந்த போதே, மோடி அரசால், புதிய 2,000 ரூபா பணத்தாள் அச்சிடப்பட்டிருக்கிறது என்பதுதான்.**

ஒரு செய்தி இரண்டாம் பேருக்குத் தெரியாமல் காக்கப்பட்டால்தான் அது கமுக்கம் (அ) இரகசியம். புதிய 2000 ரூபா பணத்தாள் அச்சடிப்பு 4.9.2016க்குப் பிறகு தொடங்கப்பட்டிருந்தால், அச்செய்தி முதலாவதாக பிரதமர் மோடிக்கும், இரண்டாவதாக கவர்னர் உர்ஜித் சிங் ஆர். படேலுக்குந்தான் தெரிந்திருக்க வேண்டும். படேல் கையெழுத்து மட்டும்தான் பணத்தாளில் இடம் பெற முடியும். அதுபோலவே ரகுராம்ராஜன் கையெழுத்து புதிய பணத்தாளில் இடம்பெற்றிருக்க முடியாது; கூடாது. ஆனால் அவருடைய கையெழுத்தும் புதிய பணத்தாளில் இருந்தது.

இதை நாம் என்னவென்று சொல்வது?

4.9.2016-க்கும் முன்னரே புதிய பணத்தாள் அச்சடிப்பு தொடங்கிவிட்டது என்று தானே நாம் கொள்ள வேண்டும்! இதுவே உண்மை.

அப்படி, 4.9.2016க்கும் 8.11.2016இல் பிரதமர் மோடியின் அறிவிப்புக்கும் இடையில் 26 + 31 + 7 = 64 நாள்கள் இடைவெளி இருந்தபோது புதிய பணத்தாள் 2000 ரூபா கௌதாம் அதானி போன்ற பல பகாசுர முதலாளிகளுக்கு 8.11.2016க்கு முன்னரே தெரிந்திருந்து, அவர்கள் பழைய பணத்தாளுக்கு மாற்றாக, புதிய 2000 ரூபா பணத்தாளை ஆயிரக்கணக்கான மதிப்புள்ள கோடிகள் தொகைக்கு மாற்றாகப் பெற்றிருக்கிறார்கள் என்பது உறுதி.

இவை மட்டுமா?

பணத்தாள் அச்சடிக்கும் தொழிற்சாலை இயக்குநர் பணத்தாள் மற்றும் பணியாள்கள், ரிசர்வ் வங்கி கவர்னர்கள் மற்றும் அலுவலர்கள், வங்கிக் கிளைகளின் மேலாளர்கள் மற்றும் அலுவலர்கள், பணத்தாள் மாற்றும் தொழிலை மேற்கொண்ட தரகர்கள், மாற்றப்பட்ட புதிய பணத்தாள்களைப் பெற்றுக் கொண்ட திருடர்கள் ஆகியோர் இந்தத் திட்டத்தின் மூலம் கருப்புப் பணம் வளர இடந்தந்துவிட்டார்கள் என்பதே விளைவு.

இது மோடி அரசின் மிகப்பெரிய மோசடி அல்லவா?

இதுபற்றிய உண்மை என்ன என்பதைத் தானே முன்வந்து *(Suomotto)* ஆராய்ந்து அறிய வேண்டும் என, மாண்புமிகு உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்களை வேண்டுகிறோம்.

**- வே. ஆனைமுத்து**

## விழுப்புரம் சிந்தாமணி அம்மையார் மறைந்தார்



விழுப்புரம், குமரன் அச்சக உரிமையாளர் பெரியார் பெருந்தொண்டர் கு. புருஷோத்தமன் அவர்களின் துணைவியார் திருமதி சிந்தாமணி அம்மாள் 30-9-2016 அன்று மறைவுற்றார். 1953ஆம் ஆண்டில் சுயமரியாதைத் திருமணம் ஏற்றது முதல் தம் இறுதிநாள் வரை தந்தை பெரியாரின் வழியிலேயே தம் குடும்பத்தை நடத்தச் சென்றவர் சிந்தாமணி அம்மையார். தம் வீட்டுக்கு வரும் பெரியார் தொண்டர்களை இன்முகத்தோடு வரவேற்று விருந்தோம்பும் பண்பாளர். அம்மையாரின் மறைவுக்குப் பின் அவரது கண்கள் கொடையளிக்கப்பட்டன. எவ்விதச் சடங்குமின்றி இறுதி நிகழ்ச்சி நடந்தேறியது. அம்மையாரின் மறைவுக்கு மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் சார்பில் ஆழ்ந்த இரங்கலை உரித்தாக்குகிறோம்.

செய்தி : **ஆ.கு. ஆறுமுகம்,**
மா.பெ.பொ.க விழுப்புரம் மாவட்டச் செயலாளர்

# தனித்தமிழ் இயக்கக் காவலர் புலவர் மகிபை பாவிசைக்கோ மறைந்தார்!



மகிபாலன்பட்டி என்னும் ஊர் சிறந்த தமிழ்-வடமொழிப் பேரறிஞர் கதிரேசன் செட்டியார் பிறந்த ஊர். மகிபாலன் பட்டியில் தமிழ் இஸ்லாமியக் குடும்பத்தில், 15-12-1942 இல் தோன்றியவர் பீர் முகமது.

அப்பெருமகனார் முன்னாளில் திராவிடர் இயக்கத்திலும், பின்னாளில் தனித்தமிழ் இயக்கத்திலும் ஈடுபட்டவர். தம் வாழ்நாளைத் தனித்தமிழ், தமிழீழ விடுதலைச் செயல்பாடுகளுக்கு ஒப்படைத்தவர்.

சிறந்த தமிழ்ச் சிற்றிதழ்களான ‘முஸ்லிம் முரசு; ‘செம்பரிதி’, ‘அஞ்சி மாலை’ போன்ற இதழ்களின் பொறுப்பாசிரியராக விளங்கினார்.

தந்தை பெரியார், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், பாவலர் பெருஞ்சித்திரனார்; தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன், தமிழ்ச் செல்வன் ஆகியோருடன் நெருங்கிப் பழகியவர்.

தனித்தமிழ் உணர்வு மேலீட்டால் பீர் முகமது எனும் தம் இயற்பெயருடன்-ஊர்ப்பெயரின் சுருக்கத்தையும் சேர்த்து ‘‘மகிபை பாவிசைக்கோ’’ எனச் சூட்டிக் கொண்டவர்.

பெங்களூருவில் குடியேறிய பெருமைக்குரிய மகிபை பாவிசைக்கோ உடல் நலன் குன்றி, மருத்துவமனையில் வைத்தியம் பெற்ற நிலையில், 13.12.16 செவ்வாய் மாலை மறைவுற்றார் என்பதை வருத்தத்துடன் அறிவிக்கிறோம். பொதுமக்கள் அவருடைய உடலுக்கு அஞ்சலி செலுத்திய பின்னர், பெங்களூரு இலட்மிபுரம் கல்லறையில், அவர்தம் 74 ஆம் பிறந்த நாளான 15.12.2016 அன்று அவரது உடல் அடக்கம் செய்யப் பெற்றது.

அப்பெருமகனாரை இழந்து துன்புறும் அவர்தம் குடும்பத்தார்க்கும், தனித்தமிழ்-தமிழ்த் தேசிய இன விடுதலை இயக்கத்தினர்க்கும் ஆழ்ந்த இரங்கலை உரித்தாக்குகிறோம்.

**வாழ்க பீர் முகமது பாவிசைக்கோ புகழ்!**

**- வே. ஆனைமுத்து**

# மீண்டும் திராவிட நாடா?

- குட்டுவன்

ஆய்வாளர் தாரா. கிருஷ்ணசாமி, தென் மாநிலங்கள் இணைந்து கோரிக்கைகள் வைத்தால் தில்லியில் அக்கோரிக்கைகள் ஏற்கப்படுமா? என்ற கேள்வியை எழுப்பி ஐக்கிய தென்னிந்திய மாநிலங்கள் (United States of South India) என்ற தலைப்பில், 2016 ஜூலை 14 அன்று எழுதிய கட்டுரை தற்போது சமூக வலைத் தளங்களில் பெரும் வரவேற்பினைப் பெற்று வருகிறது.

அக்கட்டுரையில் குறிப்பிட்டுள்ள முதன்மையான கருத்துகளை, 24.12.2016 நாளிட்ட "முரசொலி" நாளிதழ் வெளியிட்டுள்ளது.

குறிப்பாக இந்திய மக்கள் தொகையில் 20 விழுக்காடு உள்ள தென்னிந்திய மாநிலங்கள் இந்தியாவின் மொத்த வரிவருவாயில் 30 விழுக்காட்டினை அளிக்கின்றன. இந்தியாவின் ஒட்டுமொத்த வருமானத்தில் நான்கில் ஒரு பங்கை இந்த ஐந்து மாநிலங்கள் அளிக்கின்றன. இந்தி பேசுகின்ற மாநிலங்களைவிட இரட்டிப்பான தொழில் வளர்ச்சியும் தனிநபர் வருமானமும் (Per Capita), குறைந்த அளவில் வேலையின்மையும் இருந்து வருகிறது. மேலும் சமூக வளர்ச்சியிலும் மானுட மேம்பாட்டுக் குறியீடுகளிலும் தென் மாநிலங்கள் மேலோங்கி உள்ளன.

இருப்பினும் நடுவண் அரசின் வரிவருவாய் பகிர்விலும், நிதிப்பகிர்விலும் தென்னக மாநிலங்கள் மிகக் குறைந்த அளவே நிதியைப் பெறுகின்றன. இந்த மாநிலங்கள் நடுவண் அரசின் மொத்த வரிவருவாயில் 18 விழுக்காடு நிதியையே பெறுகின்றன. சான்றாக, தமிழ்நாடு இந்திய அரசிற்கு அளிக்கும் ஒவ்வொரு ரூபாய் வரிவருவாயிலும் 40 காசு மட்டுமே நிதிப்பகிர்வாகப் பெறுகிறது. ஆனால் உத்தரபிரதேசத் திற்கு ஒரு ரூபாய்க்கு, 80 காசு பகிர்ந்தளிக்கப்படுகிறது. இவ்வாறு தென்னக மாநிலங்கள் தங்களது பொருளாதார நடவடிக்கைகளால் தொழில்-பணித்துறை முன்னேற்றங் களால் ஏற்படுத்திக் கொள்ளும் வளர்ச்சியையும் பெருக்கி, வரும் வரி நிதியாதாரங்களையும் வட மாநிலங்கள் எடுத்துச் செல்கின்றன என்றும் இந்தக் கட்டுரையாளர் குறிப்பிடுகிறார்.

தென்னக மாநிலங்களுக்கிடையே இயற்கையாக அமைந்த அடையாளமும் பொதுவான மொழிக் குடும்பமும் பண்பாட்டுக் கூறுகளும் சமூகத் தொடர்புகளும் பல நூற்றாண்டுகளாக இருந்து வருகின்றன. ஐரோப்பிய, ஆப்பிரிக்க ஒன்றியங்களில் வர்த்தக எல்லை, சந்தை ஒப்பந்தங்கள் உள்ளது போன்று தென்னிந்திய மாநிலங்கள் இந்தியாவோடு ஒப்பந்தங்கள் மேற்கொண்டு இருந்திருந்தால், முறையற்ற நெறியற்ற வகையிலும் வெளிப்படையாகவும் அதிக மக்கள் தொகையுள்ள வட மாநிலங்களுக்குத் தென் மாநிலங்களின் நிதி சென்றிருக்காது என்று இக்கட்டுரையாசிரியர் குறிப்பிடுகிறார்.

மேற்குறிப்பிட்ட தாரா, கிருஷ்ணசாமியின் கருத்துக்கள் கூட்டாட்சியியல் அறிஞர்களால் சுட்டப்பட்டுள்ளன. அதிகாரப் பரவலுக்கான அரசியல் விவாதம் என்பது ஒரு நாட்டின் பலதரப்பட்ட வேற்றுமைகளையும் அளவையும் பொறுத்தே அமைகின்றது. நாட்டின் ஒருமைப்பாட்டை இழந்திடாமல் பல பகுதிகளில் காணப்படுகிற பண்பாட்டு, சமூக, பொருளாதார, இன சமய வேற்றுமைகளைப் பாதுகாத்து, அவற்றின் விளைவாக எழுந்திடும் அரசியல் விளைவுகளைச் சந்திப்பதற்குக் கூட்டாட்சி முறை அரசே சிறந்ததாகக் கருதப்படுகிறது. அதிக அதிகாரமும் உரிமைகளும் வேண்டும் எனப் பல இனப்பிரிவுகள் அவ்வப்போது எழுப்பிடும் கோரிக்கைகள் அதாவது தன்னாட்சி கோரும் இயக்கங்களின் கோரிக்கைகள் (Self Determination Demands) பல பண்பாட்டுக் கூறுகள் நிறைந்த சனநாயக அமைப்புகளில்-அதிலும் குறிப்பாக வளரும் சனநாயக நாடுகளில் எழுவது இயற்கையானதாகும். ஓரிடத்தில் அதிகாரக் குவிப்பு ஏற்படும்போது கோரிக்கைகளை முன்னிறுத்தும் அமைப்புகள் மேலும் மோதல்களை விரிவுப்படுத்தவும் ஆழப்படுத்தவும் வாய்ப்புகள் உள்ளன. கூட்டரசுக் கூறுகளை விரிவுப் படுத்தி மக்களின் நலன்களை- உரிமைகளைப் போற்றித் தன்னாட்சி உரிமைக் கோரிக்கை தீவிரமடையாமல் இருப்பதற்கு உரிய அணுகுமுறைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அறிஞர் கோலி (1998) குறிப்பிட்டுள்ளார்.

இந்திய அரசமைப்புச் சட்டம் உருவாகிற காலத்தில் அண்ணல் அம்பேத்கர் இராஜாஜியைச் சந்தித்தார். அப்போது தென் மாநிலங்கள் இணைந்த தட்சணப் பிரதேசம் உருவானால் மிகச் சிறப்பான முறையில் இயங்கும் என இராஜாஜி கூறியுள்ளார். அண்ணல் அம்பேத்கர் வியந்து போனார். மொழிவழி மாநிலங்கள் குறித்து அம்பேத்கர் பேசும்போது-வடக்கு பிற்போக்கானது தெற்கு முற்போக்கானது (The North is Reactionary and the South is Progressive) எனக் குறிப்பிட்டார்.

மொழிவழி மாநிலங்கள் அமைக்க இந்திய அரசமைப்புச் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வந்தபோது, வட்டார மன்றங்கள் (Zonal Council) அமைக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மாநிலங்களை உள்ளடக்கி உருவாக்கப்பட்ட ஐந்து வட்டார மன்றங்களில், தென்னக வட்டார மன்றமும் (The Southern Zonal Council) ஒன்றாகும். தமிழ்நாடு ஆந்திரா கர்நாடகா கேரளா புதுச்சேரி ஆகிய மாநிலங்களின் முதலமைச்சர்கள் 1957 ஆம் ஆண்டு முதல் 26 முறைகள் கூடியுள்ளனர். 1984க்குப் பிறகு மாநிலங்களிடையேயான முதன்மையான பிரச்சினைகள் குறித்துக் கலந்துரையாடப்படவில்லை. ஒரு வேளை நடுவண் அரசு மாநிலங்களிடையேயான சுமூகமான நல்லுறவுகள் பேணப்படுவதை விரும்பவில்லையோ எனக் கருதப்படுகிறது. காலப் போக்கில் இந்த அமைப்பு இன்று நடுவண் அரசின் துறையாகவே இயங்கி வருவதால், பல

முற்போக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு மாநிலங்களிடையே நல்லுறவை ஏற்படுத்த முழுமை யான முறையில் தவறிவிட்டது.

இந்தியத் துணைக்கண்டத்தில் 1950க்குப் பிறகு பிரிவினை கோரும் இயக்கங்கள் வடகிழக்கு மாநி லங்களிலும், சில நேரங்களில் தமிழ்நாடு, பஞ்சாப் போன்ற மாநிலங்களிலும் எதிரொலித்துள்ளன. தமிழ் நாட்டில் ஓர் அரசியல் கட்சி என்கிற முறையில் திராவிட முன்னேற்றக் கழகம் 1962 வரை பிரிவினையைக் கோரியே சட்டமன்றத் தேர்தல்களில் போட்டியிட்டது. 1957இல் 15 சட்டமன்றத் தொகுதிகளையும், 1962இல் 50 சட்டமன்றத் தொகுதிகளையும் பெற்ற பிறகு, தில்லிப் பேரரசு சட்டமன்றங்களில் போட்டியிடும் கட்சிகள் பிரிவினைக் கோரிக்கையை முன்வைத்தால், அவை தேர்தல்களில் போட்டியிடும் தகுதியை இழக்கின்றன என்ற சட்டத்திருத்தத்தை 1963இல் கொண்டு வந்தது. இதன் பிறகு திமுக பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்டது.

இருப்பினும் 1967இல் ஆட்சியமைத்த போது, சட்டமன்றத்தில் பேசுகிற போது அறிஞர் அண்ணா, பிரிவினையைக் கைவிட்டுவிட்டேனே தவிர பிரிவி னைக்கான காரணங்கள் அப்படியே உள்ளன என்று சுட்டினார். மாநிலங்களுக்குத் தன்னுரிமை அளிப்பதன் வாயிலாகவே இந்தியாவின் ஒற்றுமை வலிமை பெறும் என்று அறிஞர் அண்ணா வலியுறுத்தினார். 1980ஆம் ஆண்டிற்குப் பிறகு பஞ்சாப் மாநிலத்தில் பிரிவினை கோரி பிந்தரன் வாலே தலைமையில் இளைஞர்கள் போராட முற்பட்டனர். முதன்முதலாக பஞ்சாப் மாநிலப் பொற் கோயிலுக்குள் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு, பிந்தரன் வாலே கொல்லப்பட்டார். தற்போது சில ஓய்வு பெற்ற இராணுவத் தளபதிகள் தங்களின் கட்டு ரைகளில் மூத்த இராணுவ அதிகாரிகள் பொற்கோயிலுக் குள் இராணுவத்தை அனுப்பக்கூடாது என்று பிரதமர் இந்திராகாந்தியிடம் குறிப்பிட்டனர். இக்கருத்தை வலியுறுத்தியதனால் ஓர் இராணுவ தளபதிக்குத் தலைமைப் பதவி தரப்படவில்லை என்றும், இராணுவத் தளபதி வைத்யா தலைமைத் தளபதியாக நியமிக்கப் பட்டார் என்றும், இராணுவத்தில் பின்பற்றப்பட்ட மரபுகள் இந்திரா காந்தியால் தூக்கியடிக்கப்பட்டன என்றும் குறிப்பிடுகின்றனர்.

இந்திரா காந்தியின் இராணுவ நடவடிக்கைக்கு ஒப்புதல் அளித்த தளபதி வைத்யா தீவிரவாதிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதே போன்ற நிலைதான் மணிப்புரிலும் தொடர்கிறது. வடகிழக்கு மாநிலங்களில் கொண்டு வரப்பட்ட சிறப்பு இராணுவச் சட்டம் மக்களின் சனநாயக உரிமைகளைப் பறிக்கிறது என்று இரோன் சர்மிளா பல ஆண்டுகள் உண்ணாவிரதம் மேற்கொண்டு, தற்போது அதனை முடித்து, அரசியல் களத்தில் இறங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. தனது ஆட்சி அமையப் பெற்றால் இராணுவச் சட்டத்தைத் திரும்பப் பெறுவேன் என்றும் குறிப்பிட்டுள்ளார். தேசிய சனநாயக் கூட்டணியில் வாஜ்பாய் பிரதமராக இருந்த போது அமைச்சரவையில் இடம் பெற்ற உமர் அப்துல்லா தற்போது காஷ்மீரில் மற்ற மாநிலத்தவர்கள் தொழில் தொடங்கப் போகிறோம் என்ற காரணத்தைக் கூறிச் சொத்துகளை வாங்கலாம் என்ற சட்டத்திருத்தத்தைக் கடுமையாகச் சாடியுள்ளார். நடுவண் அரசின் இத்தகையப் போக்கு இந்திய ஒற்றுமைக்குப் பெரும் பின்னடைவையும் பிரிவினை கோருகின்ற இளைஞர் இயக்கங்கள் வலிமை பெறுவதற்கு வழிவகுக்கும் என்று குறித்துள்ளார்.

மேற்கு வங்கத்தில் முதல்வர் மம்தா பானர்ஜி 2016 டிசம்பர் திங்களில் முதலமைச்சருக்குத் தெரியாமலேயே இராணுவம் மேற்கு வங்கத்தின் தலைமைச் செயலகத் திலும் மற்ற பகுதிகளிலும் நடமாடியதைக் கண்டித்துத் தலைமைச் செயலகத்திலேயே 12 மணிநேரம் உள்ளி ருப்புப் போராட்டத்தை நடத்தினார். இது இராணுவம் செய்கின்ற அன்றாட நடவடிக்கை என்று நடுவண் அரசு விளக்கமளித்தாலும், ஒளி ஊடகங்கள் இராணுவத்தினர் சுங்கச்சாவடிகளில் நின்று கொண்டு வரிவசூல் நடவடிக் கைகளை மேற்கொண்டதைப் படம் பிடித்துக் காட்டின. தமிழ்நாடு அரசின் சென்னை தலைமைச் செயலகத்தில் தலைமைச் செயலாளர் இராம மோகன ராவ் அறைக்கே சென்று, நடுவண் அரசின் புலனாய்வுத் துறை சோதனை யிட்ட போது துணை இராணுவம் குவிக்கப்பட்டதைத் தற்செயலாக நடந்ததாக எடுத்துக் கொள்ள முடியாது. ஒருபுறம் நடுவண் அரசின் அதிகாரக் குவிப்பும் தனி மனிதப் பேராதிக்கமும் வலிமை பெற்று வரும் இக் காலத்தில் தாரா. கிருஷ்ணசாமியின் கட்டுரையைச் சமூக வலைத்தளங்களில் பல இளைஞர்கள் வரவேற்றுத் தங்களின் ஆதரவினைத் தெரிவித்துள்ளனர்.

1983இல் நடுவண் அரசு எட்டாம் நிதிக்குழுவை அமைத்த போது தென்னக மாநிலங்கள் போதிய நிதியாதாரங்களை நடுவண் அரசிற்கு அளித்தாலும் இம்மாநிலங்கள் வஞ்சிக்கப்படுகின்றன என்று அன்றைய கர்நாடக முதல்வர் இராமகிருஷ்ண ஹெக்டே எதிர்ப்புக் குரல் எழுப்பினார்.

தமிழ்நாட்டின் முதல்வர் எம்.ஜி.ஆர். ஆந்திர முதல்வர் என்.டி.இராமராவ் பாண்டிச்சேரி முதல்வர் தெ.இராமசந்திரன ஆகியோர் கர்நாடக முதலமைச்சர் கூட்டிய தென்னக மாநில முதல்வர்கள் மாநாட்டில் கலந்து கொண்டனர். அப்போது மத்திய-மாநில உறவுகளை முழுமையான அளவில் சீரமைக்க வேண்டும் என்ற தீர்மானத்தை வழிமொழிந்தனர். இன்றைய ஆய்வாளர் தாரா. கிருஷ்ணசாமி குறிப்பிடுகிற பல கருத்துகளைத் தீர்மான வடிவில் நடுவண் அரசிற்கு அளித்தனர். இதன் காரணமாகத்தான் மத்திய-மாநில உறவுகளைச் சீராய்வதற்கு 1983இல் நடுவண்அரசு நீதிபதி சர்க்காரியா தலைமையில் குழு அமைத்தது. இக்குழு அளித்த பரிந்து ரைகள் பயனற்ற முறையில் இன்றும் நடுவண் அரசிடம் தூங்கிக் கொண்டிருக்கின்றன.

1975இல் நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்ட காலத்தில் இக்கட்டுரையாளர் பெருந்தலைவர் காமராசர்

அவர்களை தனது மாமனார் விடுதலைப் போராட்ட வீரர் க.ரா.ஜமதக்னியுடன் சென்று சந்தித்த போது, இந்தியாவில் கூட்டாட்சி முறையை வலிமைப்படுத்தவில்லை என்றால் சனநாயகத்திற்கு இன்று போல் எதிர்காலத்திலும் பேராபத்து ஏற்படும் என்று காமராசர் வலியுறுத்தினார். தென்னக மாநிலங்கள் ஒன்றிணைந்து தங்களுடைய நீர்வள ஆதாரங்களையும் மின்சாரத்தையும் அரிசியை யும் பங்கிட்டுக் கொண்டு தங்களுக்குள் மேற்கூறிய துறைகளில் ஏற்படுகின்ற பற்றாக்குறையைப் போக்கிக் கொள்ளலாம். இவ்வித முயற்சியால் தென்னக மாநிலங் களுக்கு இடையே ஒரு புதிய கூட்டாட்சி முறைமை உருவாகும். இந்தியக் கூட்டாட்சியலுக்கு இது பெரும் உதவி யாக இருக்கும் (இந்தியக் கூட்டாட்சியியல்-அதிகாரக் குவிப்பா? பகிர்வா?.பக்284) என்று பெருந்தலைவர் காமராசர் நுண்மாண் நுழைபுலத்தோடு குறிப்பிட்டார்.

இன்றைய நடுவண் அரசு ஒரு தனிநபரின் செயலுக்குத் துணை போய் மக்களுக்கும், மக்களாட்சிக் கும் கூட்டாட்சி இயலுக்கும் பெரும் பாதிப்புகளை உருவாக்கி வருகிறது. உயர் மதிப்பு ரூ.1000 ரூ.500 பணத்தாளைச் செல்லாது என்று அறிவித்ததுகூட, நடுவண் அரசின் அமைச்சர்கள் பெரும்பான்மை யோருக்குத் தெரிவிக்கப்படவில்லை என்று கூறுகின்றனர். மாநிலங்களில் உள்ள பெரும்பான்மையான மக்கள் கடந்த 50 நாட்களாக உழைத்துச் சேமித்த பணத்தை வங்கிகளில் செலுத்திவிட்டு, திரும்பப் பெற முடியாமல் விழி பிதுங்கி நிற்கின்றனர். ஊரகப் பொருளாதாரமும் சிறுகுறு தொழில்களும் நொறுங்கி வருகின்றன. இந்திரா காந்தி காலத்தில் அறிவிக்கப்பட்ட நெருக்கடி நிலையை விட, இது மோசமானது என்று நினைக்கும் அளவிற்கு மக்கள் நாள்தோறும் வங்கிகளிலும் ஏடிஎம்களிலும் நிற்கும் நிகழ்வுகள் உலகின் எந்த நாட்டிலும் நடைபெறவில்லை. இது அதிகாரக் குவியலால் ஏற்பட்ட மமதையின் விளை வேயாகும் என்று பல ஏட்டாளர்கள் தொடர்ந்து குறிப்பிட்டு வருகின்றன.

மேலும் மாநிலங்களின் உரிமைகளில் நாள்தோறும் நடுவண் அரசு குறுக்கிட்டு மாநில அதிகாரங்களைப் பறித்துக்கொள்ளும் போக்குகள் வெளிப்படையாகத் தென்படுகின்றன. தென் மாநிலங்களின் நிதியாதாரங் களைச் சுரண்டும் போக்கு ஒருபுறம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே, மற்றொருபுறம் மருத்துவப் படிப்பிற்கான நுழைவுத் தேர்வை அகில இந்திய அளவில் நடத்த முற்படும் வேளையில் நடுவண் அரசு நடத்தும் கல்வி நிலையங்களுக்கு இது பொருந்தாது என்றும் மாநிலங்கள் நடத்தும் கல்வி நிலையங்களுக்கு மட்டுமே பொருந்தும் என்று கூறுவது கூட்டாட்சியியலையும் மக்களாட்சி முறையையும காலில் போட்டு மிதிக்கும் செயலாகும்.

"ஜல்லிக்கட்டு நடத்தக்கூடாது, இராஜபாளையம் கோம்பை, சிப்பிப்பாறை போன்ற நாய்களின் இனப் பெருக்க மையத்தை மூடவேண்டும், மூன்றாவது பாட மொழி என்ற பெயரில் சமஸ்கிருதத்தைத் திணிப்பது போன்ற மக்கள் விரோதச் செயல்களும் நடவடிக்கைகளும் மாநிலங்களின் மீது திணிக்கப்பட்ட அரசியல் சமூகப் பொருளாதாரப் பண்பாட்டு போராகவே கருத வேண்டி யுள்ளது. பாஜக-குறிப்பாக பிரதமர் மோடியின் எதேச் சதிகாரமான செயல்பாடுகள் இந்திய ஒற்றுமைக்கு ஊறு விளைவித்திடும் என்று பல ஆய்வாளர்கள் குறிப்பிடும் அளவிற்கு நிகழ்வுகள் நடந்தவண்ணம் உள்ளன.

இச்சூழலில் வடஇந்தியா, தென்னிந்தியாவைச் சுரண்டுகிறது என்று தாரா கிருஷ்ணசாமியின் குரல் திராவிட நாடு கோரிக்கையை மீண்டும் நினைவூட்டு கிறது. இதுபோன்ற போக்குகளைத் தடுக்க வேண்டு மென்றால், மாநிலங்கள் முழு உரிமை பெற்றுத் தங்கள் மொழி, இன, பண்பாட்டு, கல்வி உரிமைகளைப் பெறும் வண்ணம் இந்திய அரசமைப்புச்சட்டத்தை மாற்றிய மைத்திடல் அவசியமாகிறது.

## பெரியார் பெருந்தொண்டர் து.சே. பெரியசாமி மகன்கள் மறைந்தனர்



பெரம்பலூர் மாவட்டம், துங்கபுரம் ஓய்வு பெற்ற ஆசிரியரும், தந்தை பெரியார் அவர்களின் பெருந்தொண்ட ருமான து.சே. பெரியசாமி- வள்ளியம்மை இணையரின் இளைய மகன் பெ.வ. அசோகன் (40), 3.11.2016 அன்றும், இரண்டாவது மகன் பெ.வ. கௌதமன் (கிராம நிர்வாக அலுவலர்) - (44) 4.12.2016 அன்றும் மறைந்தனர் என்பதை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். ஒரு மாத இடைவெளியில் இரண்டு மகன்களை இழந்து துன்பத்துக்கு ஆளாகி இருக்கும் பெற்றோர் து.சே. பெரியசாமி - வள்ளியம்மை மற்றும் உடன்பிறந்தோர் பெ.வ. காந்தி, சகோதரிகள் ப. தமயந்தி, பெ. செந்தாமரை, பெ. பூபதி ஆகியோருக்கும் மற்றும் உறவினர்களுக்கும் மறைந்த கௌதமன், அசோகன் துணை வியர் அ. சுசீலா, கௌ. ராணி, பெ.கா. வனராணி, மைத்து னர்கள் ஆகியோருக்கும் மா.பெ.பொ.க. சார்பில் ஆழ்ந்த இரங்கலையும் வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

மறைந்த இருவரின் படங்களை தோழர் வே. ஆனைமுத்து 18.12.2016 பகல் 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத் தில் திறந்து வைத்தார். உடன் மாவட்டச் செயலாளர் வரகூர் மா. நாராயணசாமி பங்கேற்றார்.

**- ஆசிரியர் குழு**

# மனித குலத்துக்கும் மற்ற உயிரினங்களுக்கும் உலை வைப்பவை காங்கிரசு - பா.ச.க. அரசுகளின் திட்டங்களே!

- வே. ஆனைமுத்து

உலகப் பரப்பில் மனிதருக்கும் மற்ற உயிரினங்களுக்கும் இயற்கையில் அமைந்த பாதுகாப்புகள் இரண்டு. ஒன்று - கரியமில வாயு என்கிற கரிக்காற்று பரவாத நல்ல, தூய காற்று. இரண்டு - மாசுபடுத்தப் படாத - தரையால் வடிகட்டித்தரப்படுகிற நல்ல குடிநீர்.

இவை இரண்டும் மிக மிக வேகமாக உலக ஏகாதிபத்திய நாடுகளான அமெரிக்கா, பிரிட்டன், சப்பான், இந்தியா போன்ற நாடுகளால் திட்டமிட்டு அழிக்கப் படுகின்றன.

1945இல் - இரண்டாவது உலகப் போரின் முடிவில், சப்பான் நாகசாகி, ஹிரோஷிமா நகரங்களின் மீது அமெரிக்கா அணுகுண்டை வீசியது. குண்டு வீசப்பட்ட ஒரு நொடியில் பல இலட்சம் சப்பானியர் கொல்லப் பட்டனர்; பல ஆயிரம் சதுர மைல் நிலம் பளிங்கு போல் மாறிவிட்டது.

இது உலக வளரும் நாடுகளுக்கு அச்சத்தை ஏற்படுத்தியது. இந்திய அரசும் அஞ்சியது.

1966இல் அய்.நா. அவையில் இந்திய அரசின் பிரதிநிதியாக இருந்த வி.சி. திரிவேதி (V.C. TRIDEVI) பின்வருமாறு பேசினார் :

“மாஸ்கோவில் ஏற்கெனவே உலக நாடுகள் கூடிப் பேசியபடி-அணு ஆயுத சோதனையை உலகின் எந்தப் பகுதியிலும் நடத்தக்கூடாது என்கிற ஒப்பந்தத்தை எல்லா நாடுகளும் மதித்துப் பின்பற்ற வேண்டும்” என்பதே, 23.11.1966இல், வி.சி. திரிவேதி, அய்.நா. அவையின் முன்வைத்துப் பேசிய கருத்து.

ஆனால் அமெரிக்கா இதை மீறியது; பிரிட்டன் மீறியது; இந்தியாவும் பாக்கித்தானும் மீறின. எப்படி மீறின?

அணுகுண்டுகளையும், அணு ஏவுகணைகளையும் இந்நாடுகள் செய்தன; குவித்தன. அவற்றை மக்கள் இல்லாத பகுதியில் வீசிச் சோதித்தன.

**இந்திய அரசு எப்படி இதை மீறியது?**

பாரதிய சனதாக் கட்சிப் பிரதமர் வாஜ்பேயி ஆட்சிக் காலத்தில் இந்திய அரசு செய்த அணுகுண்டை, 5 தடவைகள் 1998 மே-இல் பொக்ரானில் இரகசியமாக வீசி, வெடிக்கச் செய்து பரிசோதனை செய்தது.

**அந்தச் செயலை சப்பான் அரசு கடுமையாகக் கண்டித்தது. அத்துடன் சோதனை நடத்தப்பட்ட சில மணிநேரங்களிலேயே சப்பான் அரசு இந்தியாவுக்கு அளித்த பொருளாதார உதவியை நிறுத்தியது; மற்ற உறவுகளை அறுத்துக் கொண்டது. 2001இல் அத்தடைகளை சப்பான் அகற்றிக் கொண்டது. பிறகு, 2009இல் சப்பானும் இந்தியாவும் பேச்சுவார்த்தை யைத் தொடர்ந்தன.**

அதன் தொடர்ச்சியாக, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, முதன்முதலில் 2014இல் சப்பானுக்குச் சென்றார். 2015இல் மீண்டும் சென்று, சப்பானின் உதவியைப் பெற்று, இந்தியாவில் அணுமின் நிலையம் அமைப் பதற்கான ஒப்பந்தம் போட ஏற்பாடு செய்தார்.

11.11.2016, 12.11.2016 இரண்டு நாள்களில் சப்பானுக்குச் சென்று, ஒப்பந்தம் பற்றிப் பிரதமர் மோடி பேசினார். 2015 திசம்பரிலேயே மோடி அரசும், சப்பானிய அரசும் இதுபற்றிய பேச்சுவார்த்தையைத் தொடங்கி யிருந்தன.

1945இல் அணுகுண்டால் பாதிப்புக்கு உள்ளான நாடு, சப்பான். எனவே இந்திய அரசு மக்கள் பயன் பாட்டுக்கு-மக்கள் நுகர்வுக்கு மட்டுமே அணுஉலையைப் பயன்படுத்துவோம் என்ற உறுதிமொழியை இந்திய அரசிடம் சப்பான் எதிர்பார்க்கிறது.

**மக்கள் பயன்பாட்டுக்கு என்றால், அது என்ன?**

அதாவது, அணுஉலைகள் வைத்து மக்களின் பயன்பாட்டுக்கான மின்சாரத்தை உற்பத்தி செய்வது தான், அது. சரி!

எந்த சப்பான் நாட்டு உதவியுடன் இந்தியாவில், மேலும் அணு மின் உலைகளை அமைக்க மோடி அரசு விரும்பிகிறதோ, அந்த சப்பான் நாட்டில், புகுஷி மாவில் உள்ள அணுமின் உலையில், 2011இல் ஏற் பட்ட பூகம்பத்தில் ஏன் வெடிப்பு ஏற்பட்டது? ஏன் புகுஷிமா அணுஉலைகளின் மின் உற்பத்தி அடியோடு நிறுத்தப்பட்டது? இப்போது ஏன் இரண்டு உலைகளில் மட்டும் சப்பான் மின் உற்பத்தி செய்கிறது?

இந்த இழிந்த நிலையில், 22.11.2016இல் சப்பா னைத் தாக்கிய பூமி அதிர்ச்சியில், புகுஷிமா அணுமின்

உலையை சுனாமி தாக்கியது. அது, பூகம்பம் ஏற்பட்ட இடத்திலிருந்து 230 கி.மீ. தொலைவிலுள்ள சப்பானின் தலைநகர் டோக்கியோவையும் பதம் பார்த்தது.

இப்படிப்பட்ட அழிம்புகளைக் கொண்டுவரும் அணுமின் உலை ஒப்பந்தம் - சப்பானுடன் இந்தியா மேற்கொண்டுள்ள 15 இலட்சம் கோடி டாலர் மதிப்புள்ள வணிக உறவை வலுப்படுத்தும் என்று, இரு நாடு களும் நம்புகின்றன.

இந்த அணுமின் உலை இந்தியாவின் எந்த மாநிலத்தில் அமைக்கப்பட்டாலும்-அம்மாநில மக்களுக் குக் கேட்டையே விளைவிக்கும்.

அப்படி என்ன கேடுகள் நேரும்?

1. முதலில் அணுஉலைக்கான கருவிகள், மூலப் பொருள்கள், உதிரி பாகங்கள் சப்பானிலிருந்துதான் வரவேண்டும்.

2. கருவிகளைப் பூட்டவும், இயக்கவும், பழுது பார்க்கவும் சப்பான் நாட்டு அணுவியல் அறிஞர்கள் தான் வரவேண்டும்.

**3. அணுமின் உலை எரிப்புக் கழிவுகள் இந்தி யாவின் கடலில் கொட்டப்பட்டாலும், அணுஉலைக்குப் பக்கத்தில் தரையில் குவிக்கப்பட்டாலும் அதிலிருந்து வெளிவரும் அணுஉலைக் கதிர்கள் மனிதரைத் தாக்கும்; நீர்வாழ் உயிர்களை அழிக்கும்; நீரிலும், நிலத்திலும் வாழும் உயிர்களை 60, 70 ஆண்டு களுக்குப் பிறகும் தாக்கும்.**

தமிழகத்தில் கூடங்குளத்தில், சோவியத் இரஷ்யா வாக இருந்த காலத்தில் தொடங்கப்பட்ட 6 அணு உலைகளையும் இயக்கும் போது - 2014 தொடங்கி கி.பி.3000 வரைக்குள் தமிழக இந்துமாக் கடற்கரை வாழ் தமிழ் மக்களையும், கடல்வாழ் உயிர்களையும், மரம் செடி கொடிகளையும், விலங்குகளையும், நீர் நிலைகளையும் அணுக்கதிர் தாக்கித் தீராத நோய் களை உண்டாக்கும்; உயிர்களை வாங்கும்.

**ஆதலால், மக்கள் நல்வாழ்வுக்கு எதிரான அணு மின் உலைகளை இரு கை நீட்டி வரவேற்ற காங்கிரசு அரசும், அதை வளர்த்தெடுத்து நிறைவேற்றத் துடிக் கும் பாரதிய சனதாக் கட்சி மோடி அரசும் - இந்திய ஒட்டுமொத்த மக்களின் நலன்களுக்கு எதிரானவை என்பதை ஒவ்வொரு இந்தியனும், ஒவ்வொரு தமிழ்க் குடிமகனும் உணரவேண்டும்.**

**அதற்கான விழிப்புணர்வுப் பரப்புரையை எல்லாத் தமிழக இயக்கங்களும் ஒன்றுபட்டு மேற்கொள்ள வேண்டும்.**

**இது அகத்தியம்! மிக மிக அகத்தியம்!**

## காஞ்சி வட்டம், கீழம்பி மா.பெ.பொ.க. அமைப்பாளர் வ. வேதகிரி தந்தையார் நா. வரதப்பன் மறைவு



*காஞ்சி வட்டம், கீழம்பி கிராமம், மா.பெ.பொ.க. அமைப் பாளரும், மறைந்த அலிகர் பல்கலைக் கழகப் பேரா சிரியர் டாக்டர் து.மூர்த்தி தலைமையில் 24.4.1989 இல் சுயமரியாதை திருமணம் செய்து கொண்டவருமான தோழர் வ.வேதகிரியின் தந்தையார் நா. வரதப்பன் 5 ஆண்டுகள் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்தார். பொது நலத்தில் ஈடுபாடு கொண்ட அவர் விவசாயத் தில் கடுமையாக உழைத்துத் தன் மக்களை வளர்த்தெடுத்தவர்.*

*28.11.2016 அன்று தோழர் வே.ஆனைமுத்து, காஞ்சி மாவட்டத் தோழர்களுடன் வ.வேதகிரி இல்லத்திற்குச் சென்று நோயால் பாதிக்கப்பட்ட அன்னாரைக் கண்டு நலம் உசாவினார். அன்னாருக்கு உயர் மருத்துவம் அளித்தும் 5.12.2016 அன்று தம் 78ஆம் அகவையில் இரவு 1.00 மணியளவில் மறைவுற்றார்.*

*காஞ்சி நகர மா.பெ.பொ.க. தோழர்கள் சி. நடராசன், அரங்க சானகிராமன், தீ. கோபால கிருட்டிணன், குறளமிழ்தன், சிவகுமார், பொன்னப்பன், மு.செயப்பிரகாசு, இரா.நாராயண மூர்த்தி, இரா.இராசசேகர், மா.கோதண்ட பாணி, கீழம்பி மு. சந்திரமோகன், ஆலயம் பெரும்பாக்கம் வ. கிருட்டிணன் மற்றும் தி.மு.க. காஞ்சித் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசன், பி.எம்.குமார், கீழம்பி மாரிமுத்து, சி.பழனி ஆகியோர் இறுதி அஞ்சலி செலுத்தினர்.*

*அன்னாரது மறைவு கருதி அவர்தம் துணைவியார், மகன்கள், மருமகள்கள், மகள் மற்றும் இல்லத்தினர் அனைவருக்கும் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் சார் பில் மாவட்டச் செயலாளர் காஞ்சி மாவட்டம் ஆழ்ந்த இரங்கலையும் வருத்தத்தையும் உரித்தாக்குகிறோம்.*

**- சி. நடராசன்**

# பண்டைய இந்தியாவில் பார்ப்பனியத்தின் சகிப்புத்தன்மை?

- டி.என். ஜா

இந்து மதம் சகிப்புத் தன்மை கொண்டது என்னும் கருத்து வரலாற்றில் மிக அண்மையில் உருவாக்கப்பட்ட ஒன்றாகும். மேலை நாட்டவர் எழுதியவற்றில் தான் இக்கருத்து முதன்முதலாக இடம்பெற்றுள்ளது. 17ஆம் நூற்றாண்டில் பிரான்சு நாட்டைச் சேர்ந்த மருத்துவர் பிரான்காய்ஸ் பெர்னியர் (1620-1688) இந்தியாவில் பரந்த அளவில் பயணம் செய்தார். இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்த தொடக்க கால அய்ரோப்பியர்களுள் இவரும் ஒருவர். பிரான்காய்ஸ் பெர்னியர் தான் முதன்முதலாக இந்துக்கள் சகிப்புத் தன்மை கொண்ட மக்கள் என்று பதிவு செய்துள்ளார்.

18ஆம் நூற்றாண்டில் செருமானிய தத்துவ இயலாளரான ஜோகன் காட்பிரைடு வான் ஹெர்டர் (1744-1803) என்பவர் தான் முதன்முதலாக இந்தியாவைப் பெருமை மிகுந்த நாடாகப் புகழ்ந்து எழுதியவர். அவர், இந்துக்கள், ‘மனித குலத்திலேயே மென்மையான இயல்புடைய பிரிவினர்’ என்றும், சகிப்புத் தன்மை கொண்டவர்கள் என்றும் எழுதினார். புகழ் பெற்ற தத்துவ மேதையான இம்மானுவேல் காண்ட் (1724-1804) இந்துக்கள், “மற்ற மதத்தவரை வெறுப்பதில்லை; அதே சமயம் தங்கள் நம்பிக்கைகள் சரி என்று கருதுபவர்கள்” என்று குறிப்பிட்டுள்ளார். கீழை இயலாளர்கள் (Orientalists) பலரும் இதேபோன்ற கருத்துக்கு முதன்மை தந்துள்ளனர். சர்.வில்லியம் ஜோன்ஸ், “இந்துக்கள் விவிலியத்தில் (பைபிள்) உள்ள கருத்துகளை உண்மை என்று ஏற்பார்கள்; ஆனால் அவை அவர்களுடைய சாத்திரங்களில் உள்ள கருத்துகளுடன் ஒத்திருப்பதாகக் கூறுவார்கள்” என்று எழுதியுள்ளார்.


19ஆம் நூற்றாண்டில் சில இந்தியர்களும் இந்து மதம் சகிப்புத் தன்மை கொண்டது என்று பேசத் தொடங்கினர். அதனால் அவர்கள் மற்ற மதங்களை விட இந்துமதமே உயர்ந்தது என்று கூறினர்.

தயானந்த சரசுவதி (1824-1883) 1875ஆம் ஆண்டு ஆரிய சமாஜத்தை நிறுவினார். ஆரிய சமாஜத்தின் கொள்கை அனைவருக்கும் பொதுவான விழுமியங்களைக் கொண்ட மதத்தை அடிப்படையாகக் கொண்டது; அத்துடன் மற்ற சமயக் கோட்பாடுகள்மீது வெறுப்பு உணர்ச்சி கொண்டிராதது என்று தயானந்த சரசுவதி கூறினார். ஆனால் மற்ற எல்லா மதங்களையும் கடுமையாக எதிர்த்தார். முகமது நபியை, “மக்களைத் தன்வயப்படுத்துவதற்காகத் தன்னைக் கடவுளின் தூதர் என்று சொல்லிக் கொண்ட ஒரு ஏமாற்றுக்காரர்” என்று கூறினார். ஏசுவை, “அறியாமை கொண்ட ஒரு சாதாரணமான ஆள்; ஏசு கற்றறிந்தவரோ ஒரு யோகியோ அல்லர்” என்று தயானந்த சரசுவதி கூறியிருக்கிறார்.

தயானந்த சரசுவதியின் சமகாலத்தவரான இராமகிருஷ்ண பரமஹம்சர் (1836-1886) எல்லா மதங்களும் சமம் என்று பேசியிருந்தாலும், இந்து மதம் மட்டுமே சனாதன தர்மத்தைக் கொண்டிருக்கிறது என்று சொன்னார். இராமகிருட்டிணரின் சீடரான விவேகானந்தர் (1863-1904) இந்து மதம் சகிப்புத் தன்மை கொண்டது என்பதை வலியுறுத்தினார். “ஞானி ஒன்றைப் பற்றிப் பல வழிகளில் பேசுவான்” (The wise speak of what is one in many ways) என்கிற ரிக் வேதத்தின் வரியை மேற்கோள் காட்டி, “இந்தியா மட்டுமே சகிப்புத் தன்மை கொண்ட நாடு” என்று கூறினார், விவேகானந்தர்.

ஆனால் விவேகானந்தர் இதற்கு நேர் எதிரான தன்மையிலும் நிறைய பேசியிருக்கிறார். “பசிபிக் முதல் அட்லாண்டிக் வரையிலான நாடுகளில் அய்நூறு ஆண்டுகள் குருதி ஆறாகப் பாய்ந்தது; இதற்குக் காரணம் இசுலாமிய மதமே ஆகும்” என்று விவேகானந்தர் சொன்னார். ஆனால் விவேகானந்தர் ரிக் வேதத்திலிருந்து எடுத்துக்கூறிய வரியை மட்டும் அரசியல்வாதிகள் தங்கள் அரசியல் ஆதாயத்திற்காக அடிக்கடி மேற்கோளாகச் சுட்டிக்காட்டுகின்றனர் - அந்த வரிக்கான உண்மையான பொருளை நம் சமூகம் இழந்துவிட்டுள்ள போதிலும்! பாலகங்காதர திலகரும் (1856-1920) விவேகானந்தர் எடுத்தாண்ட ரிக் வேத வரியைத் தன்னுடைய உரைகளில் பயன்படுத்தினார்; இந்து மதம் சகிப்புத் தன்மை கொண்டது என்று கூறினார். ஆனால் உண்மையில் அவர் தீவிரமான இந்துமத உணர்ச்சியை வளர்த்தெடுத்தார்.

முசுலீம்களை வெறுப்பவரான எம்.எஸ். கோல்வால்கர் கூட (1906-1973), உலகிலேயே இந்துக்கள் தான் மிகுதியான சகிப்புத்தன்மை உடைய மக்கள் என்று பேசினார். இது சாத்தான் வேதம் ஓதுவது போன்றதாகும். ஏனெனில், முசுலீம்கள், கிறித்தவர்கள், கம்யூனிஸ்ட்டுகள் இந்திய நாட்டுக்குப் பேராபத்தானவர்கள் என்று கூறியவர் கோல்வால்கர். தயானந்தர் முதல் கோல்வால்கர் வரை, அவர்கள் கூறிய சகிப்புத் தன்மை என்பது, இந்துக்களின் வஞ்சகத்தையும், மற்ற மதங்களுக்குரிய உரிமையை மறுக்கும் ஆதிக்கச் சிந்தனையையும் மூடி மறைப்பதற்கான ஒரு மூடு திரையாகவே பயன்படுத்தப்பட்டது. இவர்களைப் போல் அல்லாமல், இந்துக்கள்-முசுலீம்கள் ஒற்றுமைக்காகவே வாழ்ந்து மடிந்த மகாத்மா காந்தி, இருக்கின்ற மதங்களிலேயே இந்து மதம் அதிக சகிப்புத்தன்மை உடையது என்று உளமார உணர்ந்தார். ஆயினும் அனைத்துச் சிந்தனைகளுக்கும் இடமளிப்பது இந்து மதம் என்கிற பெருமித உணர்ச்சிக்குக் காந்தி அதிக அழுத்தமும் முதன்மையும் தந்ததால், இந்துமதம் மற்றவர்களை விலக்குவதாக இருந்தது.



*சங் பரிவார வெறிக்கும்பலால் 1992 திசம்பர் 6 அன்று பாபர் மசூதி இடிக்கப்பட்டது. இதுதான் இந்து மதத்தின் சகிப்புத் தன்மையா?*

**இந்துமதம் சகிப்புத்தன்மை கொண்டது என்கிற கருத்துக்குக் கற்றறிந்த அறிஞர்களிடையே இரு வேறுபட்ட எதிர்வினைகள் எழுந்தன. நிரத் சி. சவுத்திரி போன்ற அறிஞர்கள் இந்தியாவில் மதசகிப்புத் தன்மை என்கிற சிந்தனை அடியோடு இல்லை என்றனர். "இந்தியாவில் இணக்கமாக இருக்க வேண்டும் என்ற மனப்போக்கும் சகிப்புத் தன்மையும் இருப்பது உண்மையானால், மக்களிடையே ஆழமான அய்யுறவும் பகையும் இருப்பது ஏன்?" என்று சவுத்திரி வினவினார். அதேசமயம் சில வரலாற்றியலாளர் களும் சமூக ஆய்வாளர்களும்-குறிப்பாக அமர்த்தியா சென் போன்றவர்கள் பண்டைய இந்தியாவில் எதையும் உள்வாங்கிக் கொள்ளும் தன்மையும் மத சகிப்புத் தன்மையும் நிலவியதாகப் பெருமிதம் கொள்கின்றனர்.**

இந்தியாவில் இருந்த பல்வேறு சமயப் பிரிவுகள் தமக்கிடையே ஒத்திசைவாக இயங்கியதற்கும், ஒன்றன் கருத்தை மற்றது ஏற்றுக் கொண்டதற்கும் அறிஞர்கள் பல சான்றுகளைச் சுட்டிக்காட்டுகின்றனர். பிராமணி யத்திற்கு முற்றிலும் மாறுபட்ட மதத்தை நிறுவிய புத்தர், ஆறாம் நூற்றாண்டில் விஷ்ணுவின் அவதாரமாக ஏற்றுக்கொள்ளப்பட்டார். 11ஆம் நூற்றாண்டில் கிஷ்மேந்தரா எழுதிய "தசவதச்சத்திரா" விலும், 12ஆம் நூற்றாண்டில் ஜெயதேவா எழுதிய "கீதாகோவிந்தா" விலும், மற்றும் பல புராணங்களிலும், கல்வெட்டு களிலும் புத்தர், விஷ்ணுவின் அவதாரம் என்பதற் கான சான்றுகள் உள்ளன. 11ஆம் நூற்றாண்டில் அல்பெருனியும் புத்தரை விஷ்ணுவின் அவதாரம் என்று குறிப்பிட்டுள்ளார்.

அதேசமயம் புத்தரைப் பற்றி, புராணங்களில் திருடன் என்றும் நாத்திகன் என்றும் தூற்றப்பட்டிருக் கிறார். புத்த அவதாரத்தை எதிர்ப்பதற்காகவே சிவன் (ஆதி) சங்கரன் வடிவத்தில் இப்புவியில் தோன்றி னான் என்று நம்பப்படுகிறது. ஆனால் 14ஆம் நூற்றாண் டில் வைணவ நூலில் சங்கரன் முறைதவறிப் பிறந்த பிள்ளை என்று இகழப்பட்டுள்ளது. பாகவத புராணத்தில் சமண மதத்தின் முதல் தீர்த்தங்கரரான அதிநாதாவை விஷ்ணுவின் அவதாரமாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக் கிறது. ஏசு கிறிஸ்துவும், இஸ்லாம் மதத்தில் ஒரு பிரிவை ஏற்படுத்திய இமாம் ஷாகியும், அக்பரும்கூட விஷ்ணுவின் அவதாரம் என்று கூறப்பட்டுள்ளனர். குர்-ஆன் அதர்வ வேதத்தின் ஒரு பகுதியே என்று கூட எழுதப்பட்டது.

**பிராமணியம் மற்ற மதப் பிரிவுகளுக்கும் இட மளித்தது என்பதற்கான சான்றுகளாக மேலே குறிப் பிட்டுள்ளவற்றை ஏற்றுக்கொள்வதாயினும், இந்தியா மதச்சகிப்புத் தன்மை கொண்டதாக இருந்தது என்னும் கருத்தை மறுப்பதற்கும் எண்ணற்ற சான்று கள் உள்ளன. பிராமணியத்துக்குள் இருந்த பிரிவு கள் தமக்குள் சண்டை போட்டுக் கொண்ட போதிலும், பவுத்த சமண மதங்களின்பால் கடும் வெறுப்பும் பகையும் கொண்டிருந்தன.**

சமண மதத்தில் அதிகாரபூர்வமானதாகவும் புனித மானதாகவும் கருதப்படும் "அச்சரங்க சூத்தம்" என்ற நூலில் தாங்கள் ஒற்றர்கள் என்ற அய்யத்திற்கு ஆளாகி விடுவோமோ என்கிற அச்சத்தால் சமணத் துறவிகள் பகல் பொழுதில் மறைந்து வாழ்ந்து இரவில் பயணம் மேற்கொண்டனர் என்று கூறப்பட்டுள்ளது. சாணக்கியன் எழுதிய அர்த்தசாத்திரத்தில் வேத மரபைப் பின்பற்றாத சாக்கியர், அஜ்விக்கர் போன்றவர்களைக் கடுமையாக வெறுத்துள்ளார். அவர்கள் சுடுகாட்டு அருகில்தான் வாழவேண்டும் என்று விதித்துள்ளார். பிராமணியத் துக்கு எதிரான பவுத்தமும் சமணமும் "சிராமணிய" மதங்கள் என்று பண்டைக் காலத்தில் குறிக்கப்பட்டன. அவற்றைப் பின்பற்றுவோர் "சிராமணியர்" என்று

குறிப்பிடப்பட்டனர். மவுரியர் ஆட்சிக்குப்பின் சிராமணிய மதங்கள் மீதான வெறுப்பும் பகையும் அதிகமாயின

பதஞ்சலி எழுதிய மகாபாஷ்யத்தில், பிராமணர்களும் சிராமணர்களும் பாம்பும் கீரியும் போல் பகை கொண்டவர்கள் என்று குறிக்கப்பட்டுள்ளது. 3ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திவ்யவதனா எனும் பவுத்தத் துறவி, புஷ்யமித்திர சுங்கன் பவுத்தர்களைக் கொடுமையாக ஒடுக்கியவன் என்றும், பவுத்தரைக் கொன்று கொண்டு வரப்படும் ஒவ்வொரு தலைக்கும் நூறு வராகன் பரிசு அளிக்கப்படும் என்று அறிவித்தவன் என்றும் கூறியிருக்கிறார். சிராமணிய சமயங்களை ஒடுக்குதல் என்பது மத்திய காலத்தில் மேலும் அதிகமாயிற்று. குமரிலப் பட்டரும், ஆதிசங்கரரும் பவுத்த சமண மதங்களைக் கடுமையாக எதிர்த்தனர். பவுத்தர்களும் சமணர்களும் தாக்கப்பட்டனர்.

**சாஸ்ஹந்தா என்னும் மன்னன் கயாவில் போதி மரத்தை வெட்டினான்; கோயிலிலிருந்து புத்தர் சிலையை அகற்றினான் என்று யுவான் சுவாங் குறிப்பிட்டுள்ளார். தீவிர சிவபக்தனான மிதிரகுலன் எனும் அரசன் 1600 பவுத்த தூண்களையும் மடங்களையும் இடித்தான்; ஆயிரக்கணக்கான பவுத்த துறவிகளைக் கொன்றான்.**

**வடஇந்தியாவில் மட்டுமின்றி தென்னிந்தியாவிலும் பவுத்தர்களும் சமணர்களும் தாக்குதலுக்கு இலக்காயினர். தமிழ்நாட்டில் சைவ நாயன்மார்களும் வைணவ ஆழ்வார்களும் பவுத்தர்களையும் சமணர்களையும் தாக்குவதில் முன்னணியில் நின்றனர். 7ஆம் நூற்றாண்டினரான அப்பரும் திருஞானசம்பந்தரும் சமணர்களை இழிமொழிகளால் பழித்தனர். 12ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட பெரிய புராணத்தில் சமயம் சார்ந்த விவாதங்களில் சமணர்கள் தோற்கடிக்கப்பட்டது பற்றியும், சமணராக இருந்த பாண்டிய மன்னனைச் சைவனாக மாற்றியது பற்றியும் கூறப்பட்டுள்ளது. அதன்பின் மதுரையில் 8000 சமணர்கள் கழுவேற்றப்பட்டனர் என்று கூறப்படுகிறது. ஆனால் இதற்கான உறுதியான சான்று இல்லை.**

13ஆம் நூற்றாண்டில் வைணவத் துறவியான திருமங்கை ஆழ்வார் நாகைப்பட்டினத்தில் புத்த மடத்தில் இருந்த பொன்னாலான புத்தர் சிலையைத் திருடினார். அச்சிலையை உருக்கி வைணவக் கோயில் கட்டப் பயன்படுத்தினார். காஞ்சிபுரம், திருநெல்வேலி போன்ற பல ஊர்களில் எண்ணற்ற சமணக் கோயில்கள் சைவக் கோயில்களாக மாற்றப்பட்டன. காஞ்சியில் கைலாசநாதர் கோயில் சுவர் சிற்பங்களும், மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் உள்ள பொற்றாமரைக் குளத்தின் மண்டபத்தில் உள்ள சிற்பங்களும் சமணர்கள் மீது சைவர்கள் கட்டவிழ்த்துவிட்ட கொடுமைகளுக்குச் சான்றாக விளங்குகின்றன. இதேபோன்று கர்நாடகப் பகுதியில் 12ஆம் நூற்றாண்டில் பசவர் தொடங்கிய வீரசைவ - லிங்காயத் பிரிவினர் சமணர்களைக் கொன்றனர்; அவர்களின் கோயில்களைக் கைப்பற்றினர்.

பவுத்தர்களும் சமணர்களும் தங்கள் மீது ஏவப்பட்ட ஒடுக்குமுறைகளை அமைதியாக ஏற்காமல் திருப்பித் தாக்கினர். பிராமணியக் கருத்துகளையும் சடங்குகளையும் பழித்தனர். 8ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சிறந்த சமண அறிஞரான அகலந்தாவும், 12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புகழ்பெற்ற சமண அறிஞரான ஹேமச்சந்திராவும் வேதங்களில் கூறப்பட்டுள்ள வேள்விகளில் உயிர்களைப் பலியிடுதலையும் மநுஸ்மிருதியையும் கண்டித்தனர். சமணர்களைப் போலவே பவுத்தர்களும் பிராமணியத்தை எதிர்த்தனர்.

புத்தர் வேதங்களை “முட்டாள்தனமான பேச்சு” என்றும், “நீர் இல்லாத பாலைவனம்” என்றும் சாடினார். வேத அறிவு என்பது “பாதையே இல்லாத ஒரு காடு”, “இறப்புக்குப் பின்னும் தண்டனை உண்டு என்று அச்சுறுத்தும் நெறி” என்று புத்தர் சொன்னார். புத்தரைப் பின்பற்றிய பவுத்தர்கள் பிற்காலத்தில் பிராமணியத்தைக் கடுமையாகச் சாடினர். ‘கங்கையில் நீராடினால் பாவங்கள் தொலையும்’ என்கிற பார்ப்பனியக் கருத்தைக் கண்டித்தனர். பிராமணியக் கடவுள்களை இகழ்ந்தனர். பவுத்தக் கடவுள்களைவிட பிராமணியக் கடவுள்களைத் தாழ்ந்தவர்களாக இலக்கியங்களிலும் சிற்பங்களிலும் சித்தரித்தனர்.

**பிராமணிய ஒடுக்குமுறையைச் சிராமணிய மதங்கள் எதிர்த்தன என்பது உண்மை. ஆனால் பிராமணியம் பிற மதங்கள்பால் சகிப்புத்தன்மையுடன் பண்டைக் காலம் முதலே நடந்து வந்துள்ளது என்று கூறப்படுவது உண்மை அல்ல. மாறாக, பண்டைக்காலத்திலும், மத்திய காலத்திலும் பிராமணிய மதம் சிராமணிய மதங்களான பவுத்தம், சமணம் மீது கொடிய வன்முறைகளை ஏவியது. அதனால் 11ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அல்பெருனி இந்துக்களைப் பற்றி, “முரட்டுத் தனமான பகை உணர்வு கொண்டவர்கள், முட்டாள்தனமான தற்பெருமை பேசுபவர்கள், தங்களுடைய மதத்தைப் போல் உயர்ந்த மதம் வேறொன்றும் இல்லை என்று நம்புபவர்கள்” என்று எழுதியிருக்கிறார்.**

**அரசர்களிடமும் ஆளும் வர்க்கத்தினரிடமும் பொருளாதார ஆதாயங்களைப் பெறுவது, கோயில் சொத்துகளைப் பற்றுவது ஆகியவற்றில் ஏற்பட்ட போட்டி மற்றும் பல்வேறு காரணிகளால் பார்ப்பனர்களுக்குச் சிராமணிய மதத்தவர் மீது காழ்ப்புணர்ச்சி ஏற்பட்டது. பார்ப்பனர்கள் வன்னெஞ்சினராக இருந்ததற்கு அவர்கள் ஆயுதம் ஏந்தியவர்களாக இருந்ததும் ஒரு முதன்மையான காரணியாகும். பார்ப்பனர்களும் துறவிகளும் ஆயுதமேந்தியிருந்தனர் என்பதற்குச் சமற்கிருத நூல்களில் பல சான்றுகள் உள்ளன.**

**8ஆம் நூற்றாண்டில் உத்யோதனசூரி என்பவர் பிராகிருதத மொழியில் எழுதிய சமண நூலான குவலயமாலாவில், பார்ப்பனர்கள் முறையான ஆயுதப்**

பயிற்சிகளைப் பெற்றது பற்றி விளக்கப்பட்டுள்ளது. விஜயா என்ற இடத்தில் இருந்த மடத்தில் இந்தியா வின் பல பகுதிகளிலிருந்து வந்திருந்த பார்ப்பன மாணவர்களுக்கு வில்வித்தை, வாள், ஈட்டி முதலான பலவகையான ஆயுதங்களுடனும் போரிடும் பயிற்சி அளிக்கப்பட்டதை அந்நூல் விளக்குகிறது. 5ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த "சந்ரோத்ஸ்வம்", 7ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த "கேரலோலப்பட்டி"யிலும் பார்ப்பனர்கள் ஆயுதங்களுடன் போர்ப்பயிற்சி பெற்றனர் என்பது குறிக்கப்பட்டுள்ளது. கோயில்களிலும் மடங் களிலும் வேதம் பயின்ற பார்ப்பன மாணவர்கள் ஆயுதப் பயிற்சியும் பெற்றனர் என்பதைப் பல கல் வெட்டுகள் கூறுகின்றன.

இவ்வாறாகக் கோயில்களில் பார்ப்பனர் ஆயுதப் பயிற்சி பெற்ற சூழ்நிலையால் பிராமணியம் அல்லாத மதப்பிரிவுகள் மீது தாக்குதல் நடத்துவது அதிகமா யிற்று.

"இந்து மதம் மாற்றுக்கருத்துகளை வெறுத்து ஒதுக்காமல் தன்வயப்படுத்திக் கொள்ளும் இயல்பு டையது" என்றும் "இந்து மதத்தின் சாரமே அதன் சகிப்புத்தன்மை" என்றும் கூறப்படுவதை மேலே கூறப் பட்டுள்ள உண்மைகள் மறுதலிக்கின்றன.

('Social Scientist' எனும் இதழில் (2016 மே-சூன்) சிறந்த வரலாற்று ஆசிரியரான டி.என். ஜா, "Brahmanical Intolerance in Eary India" என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையின் சுருக்கப்பட்ட தமிழாக்கம். தமிழாக்கம் : க. முகிலன்.

டி.என். ஜா எழுதிய "பசுவின் புனிதம்", "பண்டைக் கால இந்தியா" எனும் இரண்டு நூல்கள் தமிழ் மொழிபெயர்ப்பாக வெளிவந்துள்ளன).

## முருக்கன்குடி வே. இளங்கோவின் துணைவியார் சரோசா (எ) சரசுவதி படத்திறப்பு

*முருக்கன்குடி வே. ஆனைமுத்துவின் தம்பி வே. இளங்கோவின் துணைவியாரும், க. வெங்கடாசலம்-அலமேலு இணையரின் மகளுமான சரோசா (எ) சரசுவதி அவர்கள் 16.11.2016 புதனன்று மறை வுற்றார். அன்னாரின் உருவப் படத்திறப்பு விழா, சி. கிருட்டிணமூர்த்தி இல்லக் கூடத்தில், 1.12.2016 வியாழன் காலை 11 மணிக்கு வீ. பாலுசாமி தலைமையில் நடை பெற்றது. வே. ஆனைமுத்து, சரசுவதி அவர்களின் உருவப் படத்தைத் திறந்து வைத்து இரங்கல் உரையாற்றி னார்.*

*இறுதியில் மகன்கள் இ. வேம்புதுரை-தமிழ்ச் செல்வி; இ. சரவணன்-செல்வி; மகள்கள் மஞ்சள் அழகி-திருமாவளவன்; கண்ணகி-தனராசு ஆகியோர்க்கு ஆறுதல் கூறப்பட்டது. சரசுவதியின் தமையனார் ஆசிரியர் வெ. வீரமுத்து நன்றிகூறலுடன், விழா பிற்பகல் 1 மணிக்கு நிறைவுற்றது.*

# சோழ மண்டல தி.மு.க. காவலரும், தமிழக முன்னாள் அமைச்சருமான குடந்தை கோ.சி.மணி மறைந்தார்!



பழைய தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த குடந்தை சுயமரியாதை இயக்கத்தின் நெஞ்சாங்குலையாக அன்று விளங்கியது. இதற்கு அடிப்படை கே.கே.நீலமேகம், பெரியார் மாரிமுத்து, வழக்குரைஞர் தனபால், ஆர்.பி. சுந்தரம் ஆகியோர் ஆவர். அடுத்த தலைமுறையில் கோ.சி.மணி, வழக்கறிஞர்கள் பாலகுரு, கீதாலயன், ஆர்.பி.எஸ்.ஸ்டாலின் அறிவியக்க முருகேசன், ஆசிரியர் கும்பலிங்கம், ஆனை கோவிந்தராசன் போன்றோர் விளங்கினர். இன்று, மேலே கண்டார்வகளுள் ஒருவரான கோ.சி.மணி அவர்கள் 2.12.2016 வெள்ளி இரவு, தம் 87ஆம் வயதில் மறைந்துவிட்டார் என்பதை அறிவிக்க மிக வருந்துகிறோம். கொஞ்ச காலமாகவே உடல் பருத்து அதனால் துன்புற்றார்; அப்போது நான் நேரில் பார்த்தேன். இன்று அவர் இல்லை. ஆர்.பி.எஸ். ஸ்டாலினும் இல்லை.

கோ.சி.மணி அவர்கள் 4 தடவைகள் தமிழகச் சட்டமன்ற உறுப்பினராகவும்; மூன்று தடவைகள் முறையே வேளாண்துறை, உள்ளாட்சித் துறை, கூட்டுறத்துறை அமைச்சராகவும் விளங்கினார். சாதி மறுப்பில் பற்றுக் கொண்டவர் கோ.சி.மணி அவர்கள். அன்னாரை இழந்து துயருறும் அவர்தம் குடும்பத்தார், மற்றும் தி.மு.க. தோழர்கள் அனைவர்க்கும் மா.பெ.பொ.க. சார்பில் மனங்கசிந்த இரங்கலை உரித்தாக்குகிறோம்.

**வளர்க குடந்தை கோ.சி.மணி புகழ்!**

**- வே. ஆனைமுத்து**

# பெரம்பலூர் - அரியலூர் மாவட்டங்களில்
# நீராண்மைப் பாதுகாப்பு விழிப்புணர்வுப் பரப்புரை

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியும்,**
**தமிழக விவசாயிகள் சங்கமும் இணைந்து,**

2017 சனவரி 24 செவ்வாய் முதல் 18 நாள்கள் மேற்கொள்ளும்
பரப்புரைப் பயணம் மற்றும் ஆர்ப்பாட்டம்

**கட்டம் : I**

பெரம்பலூர் மாவட்டத்தில் பயணத் திட்டம்
24-01-2017, செவ்வாய் முதல் 31-01-2017 செவ்வாய் முடிய

1. குன்னம் வட்டம்
2. பெரம்பலூர் வட்டம்
3. வேப்பந்தட்டை வட்டம்
4. ஆலத்தூர் வட்டம்

**01-02-2017, புதன் அன்று**
**பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்னர்,**

## வேளாண் மக்கள் கோரிக்கை ஆர்ப்பாட்டம்

---

**கட்டம் : II**

அரியலூர் மாவட்டத்தில் பயணத் திட்டம்
02-02-2017, வியாழன் முதல் 09-02-2017 வியாழன் முடிய

1. அரியலூர் வட்டம்
2. உடையார்பாளையம் வட்டம்
3. ஆண்டிமடம் வட்டம்
4. செந்துறை வட்டம்

**10-02-2017, வெள்ளி அன்று**
**அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்னர்,**

## வேளாண் மக்கள் கோரிக்கை ஆர்ப்பாட்டம்

**வேளாண் பெருமக்களும், வேளாண் தொழிலாளர்களும்,**
**இளைஞர்களும், மாணவர்களும் நல்லாதரவு தாருங்கள்!**

**வே. ஆனைமுத்து,** பொதுச் செயலாளர்
மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி

பேராசிரியர் **எஸ்.ஏ. சின்னசாமி**
தலைவர், தமிழக விவசாயிகள் சங்கம்



# தி.கோ.சீனிவான் துணைவியார் தி.கோ.சீ.இளங்கோவன் அன்னையார் தி.கோ.சீ.சரசுவதி மறைந்தார்!

திராவிடர் இயக்கத்தில் எண்ணற்ற எழுத்தாளர்களும் பேச்சாளர்களும் அன்று திகழ்ந்தனர். அவர்களுள் தி.கோ. சீனிவாசன் தனித்தன்மையுடன் விளங்கியவர் ஆவார். எதனால்?

அவருடைய குரலும் பேச்சின் சாயலும் அறிஞர் சி.என்.அண்ணாதுரை அவர்கள் பேசுவது போன்றதாகவே 100க்கு 90 பங்கு அமைந்திருக்கும். எட்டத்திலிருந்து எவர் சீனிவானுடையப் பேச்சைக் கேட்டாலும் அப்படித்தான் தோன்றும்.

தி.கோ.சீனிவாசன் திராவிடர் இயக்கக் கொள்கைகளை விளக்கிச் சில நூல்களையும், சில புதினங்களையும் படைத்துள்ளார். அவற்றுள் பலரையும் கவர்ந்த நூல் "ஆடும் மாடும்" என்ற புதினம் ஆகும். அந்நூலுக்குக் கருவாக அமைந்தவர்-தி.கோ.சீனிவாசன் அவர்களுக்கும், வே.ஆனைமுத்து ஆகிய எனக்கும் மட்டுமே தெரியும். அந்த நண்பர் அண்ணாமலை நகரில் (1946-49) பல்கலைக்கழகத்தில் பயின்று கொண்டிருந்தவர்.

நான் 1950-51இலும், 1957 முதற்கொண்டும் திருச்சியில் தங்கி, "குறள்மலர்", "குறள்முரசு" இதழ்களை வெளியிட்டேன்.

"குறள் முரசு" இதழில் தி.மு.க.வின் போக்கைத் தாக்கி இதழ்தோறும் எழுவேன். அதை முதலில் படிப்பவர்கள் எம்.எஸ்.மணி. அன்பில் பெ.தர்மலிங்கம், இரா.நாகசுந்தரம் ஆகிய தி.மு.க.தோழர்கள் ஆவர். அவர்கள் என்னைப் பார்த்துவிட்டால் சிரிப்பார்கள் அவ்வளவே. ஒரு தடவை தி.கோ.சீனிவாசனும் நானும் எழும்பூரிலிருந்து மலைக் கோட்டை வண்டியில் சென்று, திருச்சி நகர நிலையத்தில் இறங்கினோம். கனமான அவருடைய பெட்டியை நான் எடுத்துக் கொண்டேன். தெப்பக்குளம் வரையில் இருவரும் பேசிக் கொண்டே சென்றோம். அதன் பிறகு அவரை நான் சந்திக்கவில்லை. இப்போது அவரிருந்தால் அவருடைய அகவை 94 ஆனால் அவர் இல்லை.

அவரும் சரசுவதி அம்மையாரும் தி.கோ.சீ.இளங்கோவன், வில்லாளன், மணிவண்ணன் ஆகிய மூன்று ஆன்மக்களையும், மகள் தமிழ்ச் செல்வி-தமிழ் மணியையும் பெற்றெடுத்து வளர்த்து நல்ல கல்வி தந்தனர். அவர்களுள் தி.கோ.சீ.இளங்கோவன், தி.மு.கழகத்தில், இன்று பெரிய பொறுப்பில் சிறப்பாக விளங்குகிறார். ஏற்கெனவே நாடாளுமன்ற மேலவை உறுப்பினராக விளங்கினார். இப்போதும விளங்குகிறார்.

நாங்கள் ஒடுக்கப்பட்டோர் பேரவை சார்பில் புது தில்லியில் ஆண்டுதோறும் நடத்தும் இடஒதுக்கீடு மாநாட்டில், அவர் ஒருவரே அட்டியின்றிப் பங்கேற்பார். தோழியர் கனிமொழி 2015இல் நாங்கள் நடத்திய மாநாட்டில் பங்கு பெற்றார். எங்கள் இடஒதுக்கீடு முயற்சிக்கு முன்னாள் அமைச்சர் பெரம்பலூர் ஆ.இராசா, தொல்.திருமாவளவன் ஆகியோர் தொடர்ந்து ஊக்கம் அளிக்கின்றனர்.



இச்சூழலில் என் மதிப்புக்குரிய தி.கோ.சீனிவாசன் (T.k.Srinivasan) அவர்களின் அன்புத் துணைவியாரு மான திருவாட்டி சரசுவதி அம்மையார் அவர்கள் சிறிது காலம் உண்ணமுடியாத நோய் ஏற்பட்டு, தம் 82ஆம் அகவையில் 26-12-2016 திங்கள் பிற்பகலில் மறைந்து விட்டார் என்கிற துன்பச் செய்தியை அறிவிக்க வருந்துகிறோம்.

மா.பெ.பொ.க.சார்பில் நானும், கலச.இராமலிங்கம், வாலாசா வல்லவன், ப.வடிவேலு மற்றும் தோழர்களும் 27-12-2016 செவ்வாய் பிற்பகல் 3 மணிக்குச் சென்று, அம்மையாரின் உடலுக்குக் கருப்பு உடை போர்த்தி இறுதி அஞ்சலி செலுத்தினோம்.

தம் அன்னையாரை இழந்து துயருறும் அன்பு மகன்கள், மருமகள்கள், மகள்-மருமகன் மற்றும் உறவினர்களுக்கு மனங்கசிந்த இரங்கலை உரித்தாக்குகிறோம்.

**வாழ்க தி.கோ.சீ.சரசுவதி புகழ்!**

**- வே.ஆனைமுத்து**

கட்டுரைத் தொடர்-47

# திராவிடர் இயக்கங்கள்; தமிழ்த் தேசியத்திற்குத் தடைக்கல்லா? படிக்கல்லா?

- வாலாசா வல்லவன்

பெரியார் அவர்களுக்குச் சிறை தண்டனை விதிக்கப்பட்டு அவர் சிறை சென்ற பின்பும் இந்தி எதிர்ப்புப் போராட்டம் தொய்வின்றி நடைபெற்று வந்தது. ஆண்களும், கைக்குழந்தைகளுடன் பெண்களும் தொடர்ச்சியாக மறியல் செய்து சிறை சென்றனர்.

இங்கே சிறையில் அடைத்தால், தொண்டர்கள் அவரைப் பார்த்து ஆலோசனை பெற்று வருவார்கள் என்பதால், பெரியாரை, பெல்லாரி சிறையில் அடைத்தார் இராசாசி.

பெரியார் சிறை செல்லும் முன்னே நீதிக்கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1938ஆம் ஆண்டு திசம்பர் 6ஆம் நாள் பெரியார் சிறையில் அடைக்கப் பட்டார். அதே திசம்பர் மாதம் இறுதியில் 29, 30, 31 நாள்களில் சென்னையில் நீதிக்கட்சியின் மாநில மாநாடு சென்னையில் நடைபெற்றது.

கி.ஆ.பெ. விசுவநாதம், ஏ.டி. பன்னீர்செல்வம் இருவரும் பெல்லாரி சென்று பெரியாரைச் சிறையில் சந்தித்து, கட்சியின் எதிர்காலம் குறித்தும், இந்தி எதிர்ப்புப் போராட்டம் தொடர்வது குறித்தும் ஆலோசனைகளைப் பெற்று வந்தனர். நீதிக்கட்சியின் தலைவர் என்ற முறையில் மாநில மாநாட்டில் அவருடைய தலைமை உரையைப் படிப்பதற்காக எழுதி வாங்கி வந்தனர். மாநாட்டில் பெரியாரின் உருவப் படத்திற்கு மாலை அணிவித்துவிட்டு பெரியாரின் தலைமை உரையை ஏ.டி. பன்னீர்செல்வம் முதல் பாதியையும், இரண்டாவது பாதியை கி.ஆ.பெ. விசுவநாதமும் உணர்ச்சி பொங்கப் படித்தனர்.

அவ் உரை ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க உரையாகும். அவ்வுரையின் முக்கியப் பகுதிகளைக் கீழே காணலாம்.

‘‘தேசியம், ஆத்மார்த்தம் என்னும் பெயர்களால் ஒரு சிறு கூட்டத்தினரால் ஏமாற்றப்பட்டு, வஞ்சிக்கப்பட்டு, சமுதாயம், கல்வி, செல்வம், அரசியல் இத்துறைகளிலே பின்தள்ளப்பட்டு, தாழ்த்தப்பட்டு, தீண்டப்படாதவராகவும், கீழ்ச் சாதியாராகவும், மிலேச்சர்களாகவும், பிறவி அடிமை (சூத்திரர்)களாகவும் இழிவுபடுத்திவைக்கப்பட்டுமுள்ள 100க்கு 97 பகுதியுள்ள இம்மாகாணத்தின் பழம்பெருங் குடிகளும், பலகோடி மக்களுமான நம்மவரின் விடுதலைக்கும், முன்னேற்றத்திற்கும் உழைப்பதற்கென்றே ஏற்படுத்தப்பட்டுள்ள மாபெரும் ஸ்தாபனத்தின் பெயரால் நடத்தப்படும் இந்த மகாநாட்டிற்குத் தலைமை வகிக்கும் பெருமையை எனக்கு அளித்ததற்கு உங்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.



**தென்னிந்திய நலவுரிமைச் சங்கம்**

தென்னிந்திய நலவுரிமைச் சங்கமென்னும் இந்த ஸ்தாபனமானது, இன்றைக்கு 22 வருடங்களுக்குமுன், அதாவது 1916ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20ஆந் தேதியன்று தோற்றுவிக்கப்பட்டதாகும். இதை ஆரம்பித்தவர்கள் முதிர்ந்த அனுபவமும், சிறந்த அறிவும், நிறைந்த ஆற்றலும், மக்கள் உண்மை விடுதலை பெற்று, உயர்நிலையடைந்து, இன்பமெய்தி வாழவேண்டும் என்ற பேரவாவுமுடைய சான்றோர்களாயிருந்ததோடுகூட, சிறிதும் தந்நலமற்ற பெருந்தியாகிகள் என்பதையும், அவர்கள் இவ்வியக்க வளர்ச்சிக்கு எவ்வளவு பாடு பட்டார்கள் என்பதையும் உங்களுக்கு நான் சொல்ல வேண்டியதில்லை.

இந்த ஸ்தாபனத்தை அவர்கள் ஏற்படுத்திய காலை, நாம் எந்நிலையில் இருந்தோம் என்பதும், இத்தகைய ஒரு இயக்கத்திற்கு அக்காலத்தில் எவ்வளவு அவசியம் இருந்தது என்பதும், இன்றுள்ள நம் வாலிபர்களுக்கோ, அன்றிப் பள்ளிப்படிப்பை விட்டவுடன் தேசபக்தியில் மூழ்கி, தேசிய வீரர்களெனப் பட்டம் பெற்ற தேசாபிமானிகள் எனக் கூறிக்கொள்ளும் சிலருக்கோ சரியாகத் தெரியாதென்றே சொல்லுவேன். ஏனெனில் இயக்கம் தோற்றுவிக்கப்பட்டு இன்றைக்கு 22 ஆண்டுகள் கழிந்துவிட்டபடியால், நமது அன்றைய நிலைமையைப் பலர் மறந்திருக்கக்கூடும்.

சர். பி. தியாகராயரும், டாக்டர் நாயர் பெருமானும் எவ்வளவு இன்னல்களுக்கிடையிலும், எதிர்ப்புகளுக் கிடையிலும் அக்காலத்தில் இவ்வியக்கத்தை ஆரம்பித்து, அதை வளர்த்து நமக்கு அழியாத பெரும் பொக்கிஷமாக வைத்து விட்டுப் போனார்கள் என்பதை உணர்ந்தவர்கள் அப்பெரியோர்களுக்கு என்றென்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டவர்களாவார்கள். இந்த இயக்கத்தை ஒழிப்பதற்கு இதன் எதிரிகள் அன்று தொடங்கி இன்றளவும் கையாண்டுவரும் சூழ்ச்சிகளுக்கும், கொடுத்துவரும் இடையூறுகளுக்கும் ஓர் அளவுண்டோ?

**உரிமை வேண்டுவது வகுப்புவாதமா?**

**இந்த இயக்கம் ஆரம்பிக்கப்பட்ட காலமுதற் கொண்டு இன்றுவரை நம் எதிரிகள் இதை ''வகுப்புவாத இயக்கமென்று'' சொல்லி இதை நசுக்க முயற்சிகள் பல செய்து வருகின்றனர். ஒரு நாட்டில் 100க்கு 97 பெயரினராக உள்ள மக்கள் ஒன்றுபட்டுத் தங்களுக்கு உரிய சமுதாய உரிமைகளைப் பெற முயற்சிப்பது வகுப்புவாதமானால் 100க்கு 3 பெயராகவுள்ள ஒரு சிறு கூட்டத்தினர் நாட்டில் எல்லாத் துறைகளிலும் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருப்பதும், அந்நிலை என்றும் மாறாமல் அப்படியே நிலைத்திருப்பதற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளும் செய்து கொண்டு வருவதும் என்ன வாதமாகும்?**

நம்மில் ஒரு சிலர் நெஞ்சுரமில்லாததாலும், நேர்மைக் குணமில்லாததாலும், பேராசையாலும், சமூகத்தை விற்றாவது தான் வாழ்வது குற்றமன்று என்று கருதி எதிரிகட்குக் கையாளாகி, அவர்கள் பின்னின்று தாளம் போடுவதாலேயே நமது எதிரிகள் நமது உரிமைகளைப் பெற நாம் முயற்சிப்பதை வகுப்புவாதம் என்று சொல்லத் துணிந்துவிட்டனர். நாம் இந்த நாட்டின் எந்த ஒரு தனி வகுப்புக்கோ, சிறுபான்மை சாதிக்கோ தனி உரிமைகள் வேண்டுமென்று கேட்கின்றோமோ? அல்லது நம்மில் எந்தக் கூட்டத்தாராவது இந்நாட்டிலுள்ள எல்லோரினும் தாங்களே உயர்ந்த சாதியினராதலால் தனிச்சலுகை தங்களுக்குக் காட்டப்பட வேண்டுமென்று கேட்கின்றோமா? சூழ்ச்சியிலும், சுயநலத்திலும் தேர்ச்சி பெற்ற ஒரு சிறு-மிகச் சிறு கூட்டத்தாரால், அதுவும் அவர்கள் வஞ்சகத்தால் ஏமாற்றப்பட்ட பெருஞ் சமூகம் விழிப்படைவது வகுப்புவாதமானால், அந்த வகுப்பு வாதம் நம் உரிமைகளை நாம் பெறும்வரை நம்மை விட்டு விலகாதிருக்க வேண்டுமென்பதே நமது ஜீவாதார கோரிக்கையாக இருக்க வேண்டுமென்று கூற ஆசைப்படுகின்றேன்.

இந்நாட்டில், இந்தியா முழுவதையும் எடுத்துக் கொண்டாலும், அல்லது தென்னிந்தியாவை மட்டும் எடுத்துக் கொண்டாலும் சரித்திர காலந்தொட்டே வகுப்புவாதம், வகுப்புவாதப் போர் இல்லாத காலம் எப்போதாவது இருந்ததா என்று யாராவது ஆதாரம் காட்ட முடியுமா?

ஒரு சிலரடங்கிய ஒரு சிறு கூட்டத்தினர் தங்கள் நாகரிகம், கலைகள், ஆசார அனுஷ்டானம், பழக்க வழக்கங்கள் இவைகளில் 100க்கு 97 பேர்களிலிருந்து தாங்கள் வேறுபட்டவர்கள் என்றும், தம்மை ஒப்பாரும், மிக்காரும் இல்லையென்றும், பூதேவரென்றும் ஆதலால் தங்களுக்குத் தனி உரிமை வேண்டுமென்றும், தாங்கள் மெய் வருந்தி உழைக்கக் கூடாதவர்கள் என்றும் சொல்லிக் கொண்டும் மற்றவர்களை இழிவுபடுத்தி வைத்திருக்கும் இவர்கள், மற்றவர்களைப் பார்த்து ''வகுப்புவாதிகள்'' என்று சொல்வது யோக்கிய மாகுமா என்றும், அவர்கள் சொல்வது சரியென மற்றவர்கள் ஒப்புக்கொள்வது வீரமாகுமா என்றும் கேட்கின்றேன்.

நம்மை வகுப்புவாதிகள் என்று அழைக்கும் நம் எதிரிகள் நாம் அரசியல் சுதந்தரங்களிலும், அரசாங்கப் பதவிகளிலுந்தான் மிகுதியாக வகுப்புவாத உணர்ச்சி காட்டி, நாட்டின் பொது நன்மைக்குப் பாதகம் விளைவிக்கின்றோம் என்று குற்றஞ்சாட்டுகின்றனர். 100க்கு 97 பேர்களாக உள்ள நாம் நமக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய நம் பங்கு உரிமைகளைப் பெற விரும்புகின்றோமா? அன்றி அளவுக்கு மீறிய உரிமை களை அநியாயமாக அனுபவிக்க விரும்புகின்றோமா என்பதை நாம் ஒவ்வொருவரும் ஆராய்ந்து பார்த்தல் அவசியமாகும்.

**நமது நிலை**

இவ்வியக்க ஆரம்பகாலத்தில் நம் நிலை எப்படி இருந்தது?

**ஹிட்லர் ஜெர்மன் யூதர்களிடம் கொண்டுள்ள மனப் பான்மைக்குக் காரணங்கள் என்னென்னவென்று அவர் சொல்லுகின்றாரோ-அவைகளும் அவைகளுக்கு மேற்பட்ட காரணங்களுமே இங்கே நமது பெருந்தலை வர்கள் இவ்வியக்கத்தை ஆரம்பிப்பதற்குக் காரணங் களாயிருந்தன.**

**கல்வி**

1916-வது ஆண்டில், நம்இயக்கம் ஆரம்பிக்கப்படுமுன் கல்வித் துறையில் பார்ப்பனரல்லாத மக்கள் எந்நிலை யிலிருந்தார்கள் என்பதைச் சிறிது கவனிப்போம்.

**கல்வி இலாகா நிர்வாகத்தில் மொத்தம் 518 உத்தியோகங்களில் 400 உத்தியோகங்கள் பார்ப்பனர் கள் கையிலிருந்தன. 73 உத்தியோகங்களை ஆங்கிலோ இந்தியர்கள், யூரேஷியர்கள், கிறிஸ்தவர் இம்மூன்று வகுப்பினரும், 28 உத்தியோகங்களை முஸ்லீம்களும் வகித்து வந்தனர். வகுப்புவாதம் பேசுவதாகச் சொல்லப்படும் நமக்கு, அதாவது ''பார்ப்பனரல்லாத இந்துக்கள்'' என்பவர்களுக்கு 18 உத்யோகங்களே இருந்தன. 400 எங்கே? 18 எங்கே?**

ஜெர்மனியில் அப்பொழுதிருந்த யூதர்கள் நம் நாட்டுச் சிறு கூட்டத்தாரைப்போல இவ்வளவு அதிகப்படியான உத்தியோகங்களைக் கைப்பற்றியிருந்திருப்பார்களா என்பது எனக்குச் சந்தேகமாகவே இருக்கின்றது.

**நம் இயக்கம் தோன்றிய காலத்தில் இந்நாட்டில் 100க்கு 7 பேரே எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். அந்த**

**எழுதப் படிக்கத் தெரிந்த மக்களில் 100க்கு 90 பேருக்கு மேல் பார்ப்பனர்களே. படித்த இந்தியரில் ''பார்ப்ப னரல்லாத இந்துக்கள்'' தொகை 100க்கு 5-க்கு மேல் இருந்திருக்க முடியாது. நூற்றுக்குத் தொண்ணூறு எங்கே? ஐந்தெங்கே! ஆனால் கல்வித் திறமையிலோ பார்ப்பனரல்லாத மாணவர்கள் பார்ப்பன மாணவர் களுக்கு இளைக்காமலே இருந்து வந்திருக் கின்றார்கள்.**

1915-ம் வருடத்திய சென்னைப் பல்கலைக்கழக அறிக்கைப்படி, 1914-ம் ஆண்டில் எப்.ஏ. (F.A.) பரீட் சைக்கு அனுப்பப்பட்ட 1900 பார்ப்பனப் பிள்ளைகளில் 775 பேர் தேறியிருந்தால், 340 பார்ப்பனரல்லாத இந்து மாணவர்களில் 240 பேர் தேறியிருக்கின்றார்கள். பி.ஏ. பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் பரீட்சை கொடுத்த 469 பார்ப்பனப் பிள்ளைகளில் 210 பேர் தேறியிருந்தால், 133 பார்ப்பனரல்லாத மாணவர்களில் 60 பேர் தேறியிருக் கின்றனர். பி.ஏ. சையன்ஸ் பரீட்சையில் 442 பார்ப்பனப் பிள்ளைகளில் 159 பேர் தேறியிருந்தால், பார்ப்பனரல் லாத பிள்ளைகளில் 107க்கு 49 பேர்கள் தேறியிருக் கிறார்கள். பி.ஏ. (புதிது) முதல் பகுதியில் 430க்கு 270 பார்ப்பனப் பிள்ளைகளும் 108க்கு 64 நம் சமூகப் பிள்ளைகளும் தேறியிருக்கின்றனர். இரண்டாவது பகுதியில் 426 பார்ப்பனப் பிள்ளைகளுக்கு 203 பேரும், 117 பார்ப்பனரல்லாத மாணவர்களுக்கு 63 பேரும் தேறியிருக்கிறார்கள். எம்.ஏ. (M.A.) பரீட்சையில் பரீட்சைக்கு அனுப்பப்பட்ட 157 பார்ப்பனப் பிள்ளைகளுள் 67 பேரும் பார்ப்பனரல்லாதவர்களில் 20 மாணவர் களுக்கு 9 பேரும் தேறியிருக்கின்றனர். பி.ஏ., எல்.டி., (B.A., L.T.) என்ற உபாத்திமைத் தொழிற் பரீட்சைக்குச் சென்ற 104 பார்ப்பனப் பிள்ளைகளில் 95 பேர் தேறியிருந்தால் நமது சமூக மாணவர்கள் 11 பேரில் 10 பேர் தேறியிருக்கின்றார்கள்.

பரீட்சைத்தாள் திருத்துபவர்கள் எல்லோரும் அநேகமாகப் பார்ப்பனர்களாகவே இருந்தும்- கல்வி யிலாகா அவர்கள் கையிலிருந்தும் நம் மாணவர்கள் பார்ப்பன மாணவர்களுக்கு மேலாகவே அநேக பரீட்சைகளில் தேறியிருப்பது கவனிக்கத் தக்கது. கூடவே இன்னொன்றும் கவனியுங்கள். பார்ப்பனப் பிள்ளைகள் 100 பேர் ஒரு பரீட்சைக்கு அனுப்பப்பட்டால், பார்ப்பனரல் லாத பிள்ளைகள் அதில் 4-இல் ஒரு பாகத்திற்குக் குறைவாகவும் சில பரீட்சைகளுக்கு 100க்கு 10 விகிதத் துக்குக்கூட குறைவாகவுமேதான் அனுப்பப்பட்டிருக் கின்றார்கள்.

**இவற்றிற்குக் காரணம் யாதாக இருந்திருக்கலாம்?**

பரீட்சை கொடுக்கும் திறமையில் சரி சமமான, ஏன், மேலான சக்தி உடையவர்களாக இருந்தும் பரீட்சைக்கு அனுப்பப்படும் கணக்கு விகிதத்தில் மாத்திரம் நம் மாணவர்கள் இவ்வளவு குறைந்திருப்பதற்குக் காரணம், கல்வி இலாகாவை அவர்கள் கைப்பற்றிவிட்ட ஒரு காரணம் அல்லாமல் வேறு என்னவாக இருக்கக்கூடும்? இவ்வொரு காரணத்தாலேயே உத்தியோகங்களிலும் நம்மவர்கள் சரியான விகிதம் பெற முடியாமல் செய்யப் பட்டுப் போய்விட்டது என்று கூசாமல் சொல்லலாம்.

**உத்தியோகம்**

1916ஆம் ஆண்டில் புரோவின்ஷியல் சிவில் சர்வீஸ் என்னும் உயர்தர நிர்வாக உத்தியோகத்தில் ஜனத் தொகையில் 100க்கு 3 பேர் எண்ணிக்கை கொண்ட பார்ப்பனர்களில் 100 உத்தியோகஸ்தர்கள் இருந்திருக் கிறார்கள். ஆனால் அதே சமயத்தில் அப்பதவியிலிருந்த பார்ப்பனரல்லாதவர்கள் 29 பேரேயாகும். நீதி இலாகா வில் 190 பார்ப்பனர்கள் பதவி வகித்திருந்தார்கள். பார்ப்பனரல்லாதவர்களில் 35 பேர்தான் பதவி வகித்திருந்தார்கள்.

**மற்றும் கொழுத்த சம்பளங்களும், ஏகபோக அதிகாரங்களுமிருந்த எல்லா உத்தியோகங்களிலும் இவ்விரண்டு வகுப்பாருக்கும் மேல்காட்டிய விகிதாசார முறையிலோ, அன்றி, இதைவிட மோசமான விகிதாசார முறையிலோ தான் உத்தியோகங்கள் இருந்து வந்திருக்கின்றன.**

**மேலும், ''உத்தியோகத்தில் கெட்டிக்காரர் பார்ப்பனர்; வக்கீல்களிலே கெட்டிக்காரர் பார்ப்பனர்; ஆங்கில அறிவிலே சிறந்தவர்கள் பார்ப்பனர்; தமிழில் பாண்டித் தியம் உடையவர்கள் பார்ப்பனர்; அறிவு நூல் தேர்ச்சி மிக்கவர்கள் பார்ப்பனர்; ஆராய்ச்சியில் வல்லவர்கள் பார்ப்பனர்'' என்று கெட்டிக்காரப் பட்டமெல்லாம் பார்ப்பனர்களுக்கே ஒழிய, மற்றவர்களுக்குக் கிடையாது என்ற நிலை இருந்து வந்தது.**

**பொருளாதாரம்**

பாடுபடாமல் பொருள் திரட்டுவதில் பார்ப்பனர்களுக்கே சகல வசதியும் இருந்து வந்தது. பார்ப்பனரல்லாதாரோ நெற்றி வேர்வை நிலத்திற் சொட்ட பாடுபட்டு ஈட்டும் பொருளையும் பல வழிகளிலும் பார்ப்பனர்களுக்கே கொடுக்க வேண்டியவர்களாயிருந்து வந்தார்கள்.

**சமுதாயத் துறை**

சமுதாயத் துறையிலோ, மிக்க இழிந்த பார்ப்பனன் கூட, உயர்ந்த சாதியான் ஆகவும்; மிகச்சிறந்த, அறிவுள்ள, ஒழுக்கம் பூண்ட செல்வந்தனான பார்ப்பனரல்லாதான் கீழ்ச் சாதியானாகவும் மதிக்கப்படுவதாக இருந்தது. ஆகவே கல்வி, பதவி, நிபுணத்வம், செல்வம், சமூக உயர்வு, இதுபோன்ற நன்மைகள் எல்லாம் ஒரு சிறு சாதிக்கும், அதற்கு மாறுபட்டதெல்லாம் நமக்கும், என்ற

நிலையிருந்தால் இது, ஹிட்லர், ஜெர்மன் யூதர்களைப் பற்றிக் கூறும் குறைகளுக்கு அதிகமாக இருந்தனவா, அன்றிக் குறைவாக இருந்தனவா? என்பதை ஆலோசித் துப் பாருங்கள்.

**துவேஷம் உண்டா?**

நம் நிலைமை இப்படியிருந்தும், நாம் யாதேனும் ஒரு தனிமனிதன் மீதோ, அன்றி வகுப்பு மீதோ வெறுப்புக் கொண்டிருக்கின்றோமா? எங்களது வீழ்ச்சிக்குக் காரண மான தடைகளை நீக்கி, தளைகளை அறுத்து மேல் நிலை அடைய வேண்டுமென்றும், மக்கள் அனைவரும் சமமாகவும், சகல உரிமைகளையும் அனுபவிக்க சம சந்தர்ப்பம் உடையவர்களாகவும் இருக்க வேண்டு மென்றுந் தானே விரும்புகின்றோம்? இது துவேஷமா?

**கொசுவலை உபயோகிப்பதால் நாம் கொசுக்களுக்கு துவேஷிகளாகி விடுவோமா? மூட்டைப்பூச்சி பிடிக்கா மலிருப்பதற்கு நம் வீட்டை அடிக்கடி சுத்தம் செய்வதால் நாம் மூட்டைப்பூச்சி துரோகிகள் ஆகிவிடுவோமா? இப்படிப்பட்ட துவேஷத்திற்கும் துரோகத்திற்கும் நாம் ஆளாகக் கூடாது என்று பயந்து பயந்து, பார்ப்பனர் தூஷணைகளுக்கு நடுங்கி நடுங்கி நம் குறைகளை வெளியிலே எடுத்துச் சொல்வதற்கும் அவைகளை நிவர்த்திப்பதற்கும் இயலாத அவ்வளவு மோசமான பயங்காளிகளாக ஆகிவிட்டோம்.**

**இன்றுதான் என்ன?**

இப்படிப்பட்ட ஒரு ஸ்தாபனத்தைத் தோற்றுவித்தும் நம்மில் தலைசிறந்த அறிவாளிகளும், செல்வந்தர்களும் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர்களும், கடந்த 22 வருடங்களாக, இந்த ஸ்தாபனத்திற்காக எவ்வளவோ பாடுபட்டு வந்திருந்தும் நமது தற்போதைய நிலைமை தான் என்னவென்று பாருங்கள்.

அநேக விஷயங்களில் முன்நிலை சிறிதும் மாறுதல் அடையாமல் பழையபடி தானேயிருந்து வருகிறது? இந்த 22 வருடங்களில் நமது நிலைமையை உயர்த்துவதற் குச் செய்துவந்த வெகு சிறு காரியங்களும் இப்பொழுது நம் எதிரிகளால் அழிக்கப்படுகின்றன. நாம் என்றென்றும் தலைதூக்க முடியாவண்ணம் எவ்வித முன்னேற்றத் திற்கும் முயற்சிகூட செய்ய முடியாதபடி நம் எதிரிகள் ஏற்பாடு செய்து வருகின்றனர். நம் இயக்கத்திற்கும் நம் நன்மைக்கும் உண்மையாக உழைத்துவந்த பெரியோர் களில் ஏதோ இரண்டொருவர் தவிர மற்றவர்களெல்லாம் தங்கள் செல்வத்தை இழந்தார்கள்; தங்கள் வருவாயைக் கெடுத்துக் கொண்டார்கள்; குடும்பப் பெருமையை இழந்தார்கள்; கெட்ட பெயரும் சுமத்தப்பட்டார்கள். மற்றும் பல வழிகளிலும் துன்பப்பட்டிருக்கிறார்கள். உண்மை இப்படியிருந்தும், நம் இயக்கம், தனிப்பட்ட சிலருடைய சுயநல இயக்கம் என்றும், பணம், உத்தியோகம், இவைகள் தேடும் இயக்கம் என்றும், அழிவு வேலை செய்யும் இயக்கம் என்றும், தேசத் துரோகமும், வகுப்புத் துவேஷமும் கொண்ட இயக்கம் என்றும், ஒரு சுயநலக் கூட்டத்தாரால் கூறப்படுவது விந்தையினும் விந்தையே!

**தோழர்களே!**

இந்தச் சந்தர்ப்பத்தில் நமது தலைவர் பொப்பிலி அரசர் அவர்களைப் பற்றிச் சில வார்த்தைகள் குறிப்பிட வேண்டியது மிகவும் அவசியமாகும். நமது கட்சியானது பல வழிகளிலும் சிதறுண்டு, பலஹீனப்பட்டிருந்த காலத் தில் பொப்பிலி அரசர் அவர்கள் தன் முயற்சியையும் செல் வத்தையும் கட்சியின் வளர்ச்சிக்காகவே பயன்படுத்தி னார்கள் என்பது நீங்கள் யாவரும் அறிந்ததேயாகும். எந்தக் காரணத்தைக் கொண்டு அவர் கட்சித் தலைமைப் பதவியை ராஜீனாமா செய்திருந்தாலும், என்னைப் பொறுத்தவரையில் அவரேதான் நம் கட்சிக்கு இன்னும் தலைவர் என்றே கருதிக் கொண்டிருக்கிறேன். ஏனெனில், பொப்பிலி அரசர் அவர்களுடைய நெஞ்சுறுதி, கட்சிப் பற்றுதல், தியாகம் முதலிய அருங்குணங்கள் ஒருவரிடம் ஒருங்கு சேர்ந்திருப்பதென்பது மிக மிக அருமையாகும். ஆகையால் இன்னமும் நான் அவர்கள் இட்ட கட்டளை யை மீறாமல் அவருக்கு ஒரு உதவித் தொண்டனாகவே இந்த ஸ்தானத்தை வகிக்கிறேன் என்பதே எனது எண்ணமாகும்.

இச்சந்தர்ப்பத்தில் இதுகாறும் என்னுடன் கூட, பல கஷ்ட நஷ்டங்களுக்கிடையில் நம் மக்களுக்கு இடை விடாத் தொண்டு புரிந்து கொண்டு வருகின்ற என தருமைத் தோழர்களான, சௌந்திரபாண்டியர் அவர் களுக்கும் விசுவநாதம் அவர்களுக்கும் எனது நன்றி யைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**(தொடரும்)**

**காஞ்சி வட்டம், ஓரிக்கை இரா. ஆதிகேசவன் மாமனார்**
**க. தேவராஜ் மறைவு**

காஞ்சி வட்டம், ஓரிக்கை மா.பெ.பொ.க. உறுப்பி னரும், கவிஞர் தமிழேந்தி தலைமையில் சுயமரியா தைத் திருமணம் செய்துகொண்டவருமான இரா. ஆதிகேசவன் மாமனாரும், தே. ஈஸ்வரி தந்தையு மான க. தேவராஜ், 28.11.2016 திங்கட்கிழமை அதி காலை 2.30 மணியளவில், உத்திரமேரூர், எண். 13, வாழைத் தோட்டப் பின் தெரு இல்லத்தில் மறை வுற்றார். அன்னாரின் மறைவு கருதி மருமகன், மரு மகள், மகன், மகள் மற்றும் இல்லத்தார் அனை வருக்கும் மா.பெ.பொ.க. சார்பில் ஆழ்ந்த இரங்க லையும் வருத்தத்தையும் உரித்தாக்குகிறோம்.

**- சி. நடராசன்**

## மணமகன் தேவை

| | | |
|---|---|---|
| பெயர் | : | **க. இளையசெல்வி** |
| பிறந்தநாள் | : | 05-08-1981 |
| கல்வித் தகுதி | : | M.Sc., M.Tech., |
| பணி | : | உதவி இயக்குநர் (Assistant Director) சென்னை. ஆணையரகம், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, கிண்டி, சென்னை. |
| மாதச் சம்பளம் | : | ரூ.45,000/- |
| நிறம் | : | மாநிறம் |
| உயரம் | : | 4 அடி 7 அங்குலம் |
| எடை | : | 47 கி.கி. |
| சாதி | : | இந்து, வன்னியர் |
| தந்தை பெயர் | : | மு. கந்தசாமி, ஆசிரியர் (ஓய்வு) |
| தாயார் பெயர் | : | மு. சரஸ்வதி (இயற்கை எய்திவிட்டார்) |
| உடன் பிறந்தோர் | : | மூத்த சகோதரி மூவர்- திருமணமானவர். |
| முகவரி | : | எண்.21, சுப்பரமணியர் கோவில் தெரு, திண்டிவனம் - 604 001. செல்பேசி : 90032 37472 |
| எதிர்பார்ப்பு | : | சாத்திர சம்பிரதாயங்கள் மறுப்பு. அய்யர் இல்லாத் திருமணத்தை ஏற்கும் நிலையுள்ளவர்களுக்கு முன்னுரிமை. |

## பாராட்டு வரவேற்பு விழா

கி. விஷ்ணு குமார் - பி. நேஹா ஆகிய புதுமணத் துணை வர்களுக்கான பாராட்டு விழா, வெங்களூரில், இராசாசி நகரிலுள்ள கடம்பா உணவு விடுதியின் 3ஆம் மாடியிலுள்ள "அம்பாரி விழா மண்டபத்"தில், பேரவையின் புரவலர் - தலைவர் வே. ஆனைமுத்து தலைமையில், 10.12.2016 சனி அன்று பகல் 12 மணிக்குச் சிறப்புற நடைபெற்றது. பேர வையின் பொதுச் செயலாளர் கலச. இராமலிங்கம் அறிமுக உரையாற்றினார்.

பெங்களூர் அன்வர், மதுரை ராசா, மதுரை அலெக் சாண்டர், கோவை முத்துச்சாமி, தஞ்சை சோதிவேலு, பொன்னமராவதி திருமதி. மலர், பெங்களூர் அமர்சோதி நகர் புலவர் கி.சு. இளங்கோவன் ஆகியோர் வாழ்த்துரை வழங் கினர். ஆர். கிருஷ்ணமூர்த்தி-சர்வமங்களா இணையரின் மருமகன் பிரின்ஸ் நன்றி கூறலுடன் மணமக்கள் வரவேற்பு விழா நிறைவுற்றது. அனைவர்க்கும் இனிய நண்பகல் விருந்து அளிக்கப்பட்டது.

## BRIDE-GROOM WANTED

| | | |
|---|---|---|
| Name | : | **V. Ponni Puviarasi** |
| Date of Birth | : | 13-07-1994 |
| Place of Birth | : | Thiruvannamalai |
| Qualification | : | B.Tech., I.T., (M.Tech.-II Year) Anna University, Guindy |
| Father's Name | : | Dr. D. Veerasamy, B.Sc., M.B.B.S. Chief Civil Surgeon (Retd.) Govt. Head Quarters Hospital, Thiruvannamalai. |
| Mother's Name | : | V. Ambujam, C.D.D.M. (Dip) |
| Elder Brother | : | Dr. Deena Dayalan, B.S.M.S., P.G. (Yoga) Deena Hospital, Kilpennathur. |
| Sister-in-law | : | D. Latha, M.Sc., B.Ed., Working in Sastra Higher Sec. School, Kilpennathur |
| Elder Brother's Daughter | : | D. Kirthikaasini |
| Elder Brother | : | Dr. V. Kisore Kaviarasan BPT, MBT, Ortho Elite Health Care Unit, Dubai. |
| Address | : | 29, Vettavalam Salai, Kilpennathur Post & Taluk, Tiruvannamalai District. Pin - 604 601. |
| Height | : | 167 cm. |
| Weight | : | 48 Kg. |
| Community | : | Hindu - Adidravidar |
| Contact Cell No. | : | 99402 15616<br>95003 63341<br>96774 64464 |

# இது எப்படி இருக்கு? நீங்கள் தேடுங்கள்!

"தமிழ்நாட்டில் 2011 முதல் அ.இ.அ.தி.மு.க. தொடர்ந்து ஆட்சி செய்கிறது. அரசு பொறுப்பேற்ற அதே ஆண்டில் பேருந்துக் கட்டணம், மின் கட்டணம், பால் விலை அதிக அளவில் உயர்த்திவிட்டது. ஆனால் இன்று வரை நாங்கள் எந்தக் கட்டணத்தையும் உயர்த்தவில்லை என்று பேசுகின்றனர்.

பத்து ஆண்டுகளில் படிப்படியாக உயர்த்த வேண்டியதை ஆரம்பத்திலேயே உயர்த்திவிட்டது. இப்பொழுது பேருந்துகளில் அதிகக் கட்டணம் உள்ள விரைவு மற்றும் சொகுசுப் பேருந்துகளை மட்டுமே இயக்குகின்றது. இது நியாயமில்லை" என்று ஒரு பயணி நடத்துநரிடம் கூறினார்.

அதற்கு நடத்துநர் "உங்களுக்கெல்லாம் இலவசப் பொருட்கள் கொடுக்கவும், முதியோர்களுக்கு மாதம் 5 முறை போக, வர இலவசப் பயணச்சீட்டு கொடுக்கவும் இப்படித்தான் வசூல் செய்ய வேண்டும்" என்று மேலதிகாரி கூறியுள்ளார்.

இது எப்படி இருக்கு என்றால், "எங்கள் அரசு ஒரு தடவைக்கு மேல் கட்டணத்தை உயர்த்தவில்லை; எங்களை மீண்டும், மீண்டும் தேர்ந்தெடுத்தால் புது வழிகள் கண்டு கல்வி ஞானமில்லா, மது மயக்கத்தில் உள்ள உங்களிடம் வசூல் செய்துவிடுவோம்" என்பது போன்றுள்ளது.

**உணவுக் கடையில் தோசையும் தமிழகத்தில் பேருந்தும்**

| உணவுக்கடை | போக்குவரத்து துறை |
|---|---|
| சாதா தோசை | சாதாரண கட்டணப் பேருந்து - கட்டணம் குறைவு |
| ஸ்பெசல் தோசை | விரைவுப் பேருந்து - கட்டணம் அதிகம் |
| ஸ்பெசல் மசாலா தோசை | சொகுசு (Delux)ப் பேருந்து - மிக அதிகக் கட்டணம் |
| நெய் ரோஸ்ட் தோசை | அதிநவீன சொகுசு (Ultra Delux)ப் பேருந்து - மிக மிக அதிகக் கட்டணம் |
| ஸ்பெசல் நெய் ரோஸ்ட் தோசை | குளிர் சாதனம் உள்ள பேருந்து - பன்மடங்கு அதிகக் கட்டணம் |
| 5 பேர் சாப்பிடும் பெரிய தோசை | 1 to 5 நிறுத்த சொகுசுப் பேருந்து - கூடுதல் கட்டணம் |
| 3 பேர் சாப்பிடும் பெரிய தோசை | 1 to 3 நிறுத்த சொகுசுப் பேருந்து - கூடுதல் கட்டணம் |
| ஒருவர் மட்டும் சாப்பிடும் ஸ்பெசல் நெய் மசாலா தோசை | இடைநிறுத்தமில்லா (Point to Point) பேருந்து - கூடுதல் கட்டணம் |

தமிழகமெங்கும் உள்ள A to Z உணவுக் கடைகளில் சாதாரண தோசை இல்லை; அதிக விலை உள்ள தோசை மட்டுமே உள்ளது. வரிகட்டும் பாமரன் எப்படிப் பசிக்கு உண்பது, சேமிப்பது, வாழ்க்கைத்தரம் உயர்த்துவது?

**இலவசம் வேண்டவே வேண்டாம். வருவாய்க்கு வழியும், விலையில்லாத நல்ல தண்ணீரும், கல்வியும் கிடைக்க வேண்டும். தன்னிடம் உள்ள சொத்து இவ்வளவுதான்; கையூட்டு வாங்கமாட்டேன்; நேர்மையாகவும், வெளிப்படையாகவும், பாதுகாப்பு இல்லாமலும் மக்களுடன் ஒன்றி வாழும் பிரதிநிதியாகவும் இருப்பேன்; சொத்தைப் பாதுகாக்க எவருடைய காலிலும் விழமாட்டேன்; தன்மானம் இழக்கமாட்டேன் என்று உறுதி கூறும் அரசியல்வாதிகளை இப்பொழுது காணமுடியுமா? தேடுங்கள்!!**

**- உழவர் மகன் ப.வ.**

## புதுதில்லியில் அனைத்திந்திய ஒடுக்கப்பட்டோர் பேரவையின் களப்பணியாளர், ஆர். கிருஷ்ணமூர்த்தியின் மகன் கி. விஷ்ணுகுமார்-பி. நேஹா சாதி மறுப்புத் திருமண விழா

புதுதில்லிவாழ், திருவண்ணாமலை ஆர். கிருஷ்ண மூர்த்தி-சர்வமங்களா இணையரின் மகனும், பெங் களூரில் பாரத அரசு வங்கியின் கிளை மேலாள ருமான செல்வன் விஷ்ணு குமார்; புதுதில்லியில் இந்திய அரசுக் கல்வித்துறை அலுவலரும், உத்தர காண்ட் மாநிலத்தைச் சேர்ந்தவருமான பி.சி. பந்த் - மீனா பந்த் இணையரின் மகளுமான செல்வி நேஹா ஆகியோரின் சாதி மறுப்புத் திருமணம், 4.12.2016 ஞாயிறு அன்று, புதுதில்லி மெட்ரோ தொடர் வண்டி நிலையத்துக்கு அருகிலுள்ள எம்.சி.டி. சமுதாயக் கூடத்தில் சிறப்புற நடைபெற்றது. ஒடுக்கப்பட்டோர் பேரவையின் "பெரியார் - அம்பேத்கர் தொண்டு நிறவன"த் தோழர்கள் பலர், பி. இராமமூர்த்தி தலை மையில் இவ்விழாவில் பங்கேற்றனர்.

## இந்தியப் பொதுவுடைமைக் கட்சியின் முதுபெருந்தலைவர் இரா. நல்லக்கண்ணுவின் துணைவியார் இரஞ்சிதம் அம்மாள் மறைவு



இந்தியப் பொதுவுடைமைக் கட்சியின் முது பெருந் தலைவரும், வெள்ளையர் காலத்தில் வெஞ்சிறைக் கொடுமைக்கு ஆளானவரும், இந்தியத் தேசியக் குழுவின் உறுப்பினரும் ஆன தோழர் இரா.நல்லக்கண்ணு அவர்களின் ஆருயிர் துணைவியார் இரஞ்சிதம் அம்மாள் அவர்கள், தம் 82ஆம் அகவையில், 1.12.2016 வியாழன் அன்று மறைவுற்றார் என்பதை மிக வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரஞ்சிதம் அம்மையாரின் பிரிவால் இழப்புக்கு உள்ளாகியுள்ள தோழர் இரா. நல்லக்கண்ணு அவர்கட்கும், அவர்தம் குடும்பத்தினர்க்கும், இந்தியப் பொதுவுடைமைக் கட்சியினருக்கும் ஆழ்ந்த இரங்கலை உரித்தாக்குகிறோம்.

**- வே. ஆனைமுத்து**

## நல்லக்கண்ணுவுக்கு வே.ஆனைமுத்து ஆறுதல்



*சிந்தனையாளன் பொங்கல் மலர் தொடர்பாக ஒரு மாதம் வெளியூர் பயணத்திலிருந்து 26-12-2016 அன்று சென்னை திரும்பியதும் வே.ஆனைமுத்து, தோழர்கள் வாலாசா வல்லவன், ப.வடிவேலு ஆகியோருடன் தோழர் இரா.நல்லக்கண்ணு அவர்களின் இல்லத்திற்குச் சென்று அவருடைய துணைவியார் இரஞ்சிதம்மாள் மறைவுற்றதற்கு இரங்கல் தெரிவித்தார். இந்தியப் பொதுவுடைமைக் கட்சித் தோழர் சி.மகேந்திரன் உடனிருந்தார்.*

## வகுப்புவாரி உரிமைப் பயிலரங்கம்

எண்ணெய் எரிவாயு நிறுவனத்தின் சென்னை மண்டல பயிற்சி நிலையத்தின் (Oil and Natural Gas Commission Regional Training Institute) சார்பில், அந்நிறுவனத்தின் இதர பிற்படுத்தப்பட்ட அலுவலர்களுக்கான இடஒதுக்கீட்டுப் பயிலரங்கம், கேரள மாநிலம் மூணாறில் “நட்சத்திர விடுதியில்” (Holiday Resort Hotel) 2016 அக்டோபர் 19, 20 மற்றும் 21 ஆகிய நாள்களில் நடைபெற்றது.

அந்நிறுவனத்தின் துணைப் பொது மேலாளரும் பயிலரங்களின் ஒருங்கிணைப்பாளருமான ஆனந்த் கலச.இராமலிங்கத்தை அறிமுகப்படுத்திப் பேசினார்.

அனைத்திந்திய ஒடுக்கப்பட்டோர் பேரவையின் பொதுச் செயலாளர் கலச. இராமலிங்கம், அக்டோபர் 21ஆம் நாள் நிகழ்வில் மண்டல் குழுவின் பரிந்துரைகள் (Recommendations of Mandal Commission) மற்றும் பிற்படுத்தப்பட்டோர் ஒதுக்கீடு தொடர்பான அரசமைப்புச் சட்டப் பிரிவுகளும் உச்ச நீதிமன்றத் தீர்ப்பும் (Constitutional Provisions and Supreme Court Judgement on OBC Reservation) ஆகிய இரண்டு தலைப்புகளில் ஆங்கிலத்தில் உரையாற்றினார். அந்நிறுவனத்தின் 50 அலுவலர்கள் பயிலரங்கில் கலந்து கொண்டனர். கலசம் தம் உரைக்கான குறிப்புகளை மடிக்கணினி (Lap Top) உருப்பெருக்கி (Projector) ஆகிய கருவிகளின் துணைக்கொண்டு திரையில் காண்பித்து (Power Point Presentation) விளக்கி உரை நிகழ்த்தும் திரைவரி உரை முறையில் உரையாற்றினார். இதர பிற்படுத்தப்பட்ட அலுவலர் நலச் சங்கத்தின் சென்னைக் கிளையின் செயலாளர் வீரராகவன் நன்றி கூறினார்

## சென்னையில் பயிலரங்கம்

சென்னை, சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள தமிழ்நாடு நகை வியாபாரிகள் சங்கக் கட்டடத்தில், 2016 நவம்பர் 13 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் மற்றும் பிற்பகல் வேளைகளில், அகில இந்திய விசுவகர்மப் பேரவையின் சார்பில் அதன் தலைவர் செஞ்சி குமார் தலைமையில் வகுப்புரிமைக் கல்விப் பயிலரங்கம் நடைபெற்றது. பொதுச் செயலாளர் ஈ.மாணிக்கவேலு ஒருங்கிணைப்பாளராக இருந்து பயிலரங்கை நெறிப்படுத்தினார். பயிலரங்கில் 20 பேர் கலந்து கொண்டனர். அனைத்திந்திய ஒடுக்கப்பட்டோர் பேரவையின் பொதுச் செயலாளர் கலச. இராமலிங்கம் வகுப்புரிமைக் கோரிக்கையின் வரலாறு, தமிழ்நாட்டில் வகுப்புரிமை நடப்பு வரலாறு, மய்ய அரசில், வகுப்புரிமை நடப்பு வரலாறு, விசுவகர்மச் சமுதாயமும் உள் ஒதுக்கீடும் ஆகிய தலைப்புகளில் உரையாற்றினார்.

## மக்களின் தரத்திற்குத் தக்கபடிதான் அரசு அமையும்

**PEOPLE DESERVE THE GOVERNMENT**

200 ரூபாய் பணத்திற்கும், ஒரே ஒரு பிரியாணி பொட்டலத்திற்கும், வறண்ட நாக்கோடு கொளுத்தும் கொடும் வெயிலில் உயிரையும் இழக்கத் தயாராகிப் போன ஒரு சமூகத்தில், புரட்சி எங்ஙனம் வெடிக்கும்?

அயோக்கியன் என்று தெரிந்த பின்னும் அவனுக்கு ஆரத்தியெடுத்து, ஆரத்தித் தட்டில் விழப்போகும் சில்லரைப் பணத்திற்காகப் பல்லிளித்து நிற்கும் ஒரு சமூகத்தில் மாற்றம் எங்ஙனம் சாத்தியம்?

எத்தனை கொடுமைகள் இழைத்தாலும் அதனையெல்லாம் மறந்துவிட்டு மீண்டும், மீண்டும் சின்னங்களை மட்டுமே பார்த்து வாக்களிக்கும் ஒரு மந்தை சமூகத்தில் மாற்றம் எப்படி நடக்கும்?

படித்தவன் சூதும், பாவமும், செய்கிற சமூகத்தில் முன்னேற்றம் எந்த வழியில் வந்து சேரும்?

“என் அப்பா அந்தக் கட்சி... என் தாத்தா அந்தக் கட்சி... நாங்கள் பரம்பரை பரம்பரையாக அந்தக் கட்சிக்குத் தான் ஓட்டுப்போடுவோம்” என்று, அப்பன் வெட்டிய கிணற்றில் உப்புத்தண்ணீர் குடிக்கிற மகள் இருக்கிற தேசத்தில், புதிய மலர்ச்சி எப்படி உருவாகும்?

நம் தாத்தனும் அப்பனும் பாடுபட்டு வளர்த்த கட்சி, கடைசியில் தலைவரின் குடும்பச் சொத்தாகிப் போனதின் சூது தெரியாமல், “வாழ்க முழக்கங்களை” வாய் கிழிய எழுப்பும் மக்கள் இருக்கிற நாட்டில் மாற்றம் எப்படி வந்து சேரும்?

தேர்தல் என்றால் ஒருநாள் விடுமுறையென்று வாக்குச்சாவடிக்குச் செல்லாமல், விடுமுறை கொண்டாடுகின்ற தேசத்தில், புதிய அரசு எப்படி சாத்தியம்?

**எமது மக்கள் எப்போதும் தற்காலிக சுகங்களிலே நிறைவடைந்து விடுபவர்களாய் இருக்கிற வரையிலும் நிம்மதியான வாழ்க்கையை வாழவே போவதில்லை...**

பி.எஸ். வீரப்பா சொன்னது ஞாபகம் வருகிறது... “இந்த நாடும் நாட்டு மக்களும் நாசமாய்ப் போகட்டும்”.

வாட்ஸ் அப் உலா

தொகுப்பு : **ப. ஆசுபள்**

முதலாமாண்டு, அரசியல் அறிவியல் மாணவி

சென்னை, கிறித்துவக் கல்லூரி

## சிந்தனையாளன் வளர்ச்சி நிதி சனவரி-2017

| | | |
|---|---|---|
| **துரை சித்தார்த்தன்** | காட்டுமன்னார்கோயில் | 1000/- |
| **இரா. குப்புசாமி** | சூரர் | 1000/- |
| **க. ஆதிமூலம்** | கீழ்பென்னத்தூர் | 1000/- |
| **தமிழேந்தி** | அரக்கோணம் | 500/- |
| **இரா.பச்சமலை** | சென்னை | 500/- |
| பாவலர் **வையவன்** | திருவண்ணாமலை | 500/- |
| **தமிழ்நாடன்** | குவைத் | 500/- |
| முனைவர் **அ. ஆறுமுகம்** | திருமழபாடி | 300/- |
| **பகுத்தறிவாளன்** | திருப்பத்தூர் | 250/- |
| **மோ.சி. சங்கர்** | வேலூர் | 200/- |
| **கி. இராமச்சந்திரன்-மேகலா** | வாலாசாபேட்டை | 200/- |
| **ப.வெங்கடேசன்-அரங்கமணிமொழி** | வாலாசாபேட்டை | 200/- |
| பேரா. **ச.பொ.சீனிவாசன்** | மூணாறு | 200/- |
| **வீ. இராசாப்பிள்ளை** | சிதம்பரம் | 200/- |
| **மரு. வசந்தா மதியழகன்** | அரியலூர் | 200/- |
| **இளவரசன்,** தமிழ்க்களம் | அரியலூர் | 200/- |
| **சி. இலக்கியா** | சென்னை | 100/- |
| **அ. லயா** | கிழக்கு லண்டன் | 100/- |
| **சி. அகிலா** | சென்னை | 100/- |
| திருமதி. **சகுந்தலா குப்புசாமி** | சிறுநாத்தூர் | 100/- |
| சென்ட்ரிங் **இரா.ப. கோவிந்தன்** | தாம்பரம் | 100/- |
| **மா. சுப்பிரமணி - கஸ்தூரி** | தாம்பரம் | 100/- |
| **நா. மதனகவி** | வாணியம்பாடி | 100/- |
| **இ. கபிலன்** | சிதம்பரம் | 100/- |
| **மு.செயபால்** வழக்குரைஞர் | திருவண்ணாமலை | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | 100/- |
| **இரா. பத்மநாபன்** | மாதவரம் | 100/- |
| **ஜே. பொழிலன்** | கீழவெளி அரியலூர் | 100/- |
| **சி. தென்றல்** | கீழவெளி அரியலூர் | 100/- |
| **சி. தமிழ் நிலவு** | அரியலூர் | 100/- |
| **புலவர் பூ.வெ.சொக்கலிங்கம்** | அத்திமாஞ்சேரிபேட்டை | 100/- |

## மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி - சனவரி-2017

| | | |
|---|---|---|
| புலவர் **இரா.கலியமூர்த்தி** | சிறுகடம்பூர் | .... 100/- |
| **க. குப்புசாமி** | சோளிங்கபுரம் | .... 100/- |
| **பொ.சுப்பிரமணியன்** | கீழ்பென்னாத்தூர் | .... 100/- |
| **கு.சூரியன்** | பெங்களூர் | .... 100/- |
| **கு.பாரி** | சோளிங்கபுரம் | .... 100/- |
| **முத்து அன்பழகன்** | சீர்காழி | .... 100/- |
| **அழகு அன்பழகன்** | சீர்காழி | .... 100/- |
| **அறிவுக்கடல் ராஜ்குமார்** | சிதம்பரம் | .... 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | .... 100/- |

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக** வெளியிடுபவர், ஆசிரியர் **வே.ஆனைமுத்து,**
2ஆ/85, கே.எஸ்.ஆர்.நகர், எம்.டபிள்யூ.பி. 2ஆம் குறுக்குத் தெரு, அம்பத்தூர், சென்னை - 53.
அச்சிட்டோர் : **பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமம்,** சென்னை-53. ☎ : 044-2625 2119